
தெய்வ நலம்



டாக்டர் தே. சொக்கலிங்கம் எம்.ஏ., பி.எல். பி.எச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 3

பார்வதி பதிப்பகம்
23,தையல் நாயகி இல்லம்
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி - 630 003.

தெய்வ நலம்



டாக்டர் **தே. சொக்கலிங்கம்** எம்.ஏ., பி.எல். பி.எச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி - 3

பார்வதி பதிப்பகம்
23,தையல் நாயகி இல்லம்
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி - 630 003.

DEIVA NALAM
by Dr. T. Chockalingam

Published by :
Parvathi Pathipagam
Karaikudi

First Edition : 2nd December 1999

Printed at :
South India Press,
Karaikudi

33-1

உள்ளே

உ

ஸ்ரீமகா கணபதி துணை

பில்லமங்கலம் ஸ்ரீபொன்னழகியம்மன் திருக்கோவில்

பரம்பரைப் பூசகர், சக்தியாகம வித்வஸ்ரீ

ஸ்ரீசக்திஸ்ரீ சுப்பிரமணியப்பட்டர் என்ற

ஸ்ரீகாசிப்பட்டர் அருளிய

வாழ்த்துரை

பி. அழகாபுரி நகரத்தார் குடும்பங்களில் சிறந்ததும் தெய்வ ஈடுபாடு மிக்கதுமாகிய தெ.கி.தெ. குடும்பத்தைச் சேர்ந்தவர் பேராசிரியர் டாக்டர் தே. சொக்கலிங்கம் அவர்கள், சிறுபிள்ளையாக இருந்த நாள் முதலாக அவரை நான் அறிவேன். அன்னார் தெய்வ ஈடுபாடும் வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீதையல் நாயகியிடம் தனிப்பற்றுதலும் உடையவர்கள், ஸ்ரீபொன்னழகி அம்பாளுக்குச் செப ஹோமமும் நவசக்தி அருச்சனையும் முதன்முதலாகச் செய்து அம்பாளுடைய பூரண அனுக்கிரகம் பெற்றார்கள்.

அவர்கள் எழுதிய தெய்வநலம் பார்த்தேன், விநாயகர்,

சிவபெருமான், வயிரவர் ஆகிய மூன்று தெய்வங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். செட்டி நாடு முழுமையும் சுற்றிப் பார்த்த அனுபவம் அதில் தெரிகிறது. ஸ்ரீஅம்பாளைப் பற்றி எழுதவில்லையே என்று கேட்டேன். ஸ்ரீஅம்பாளை மறப்பேனா? என்றும் தனியே எழுதியிருக்கின்றேன்? சரி பார்க்க வேண்டும்? என்றும் கூறினார்கள். காலங்காலமாக இருந்து வரும் திருக்கோயில்கள் பற்றிப் பெரிய நூல்களை அவர்கள் எழுதவேணும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அவர்களுக்கு ஸ்ரீஅம்பாள் பூரண சுகத்தையும் அனுக்கிரகத்தையும் ஜெயத்தையும் அருளிச் செய்வாள் என்பது திண்ணம்.

அம்பாள் அனுக்கிரகம்

27-11-99

இங்ஙனம்
சுப்பிரமணியப்பட்டர்
ஸ்ரீபொன்னழகியம்மன் திருக்கோயில்
பில்லமங்கலம்.



உ

ஸ்ரீகலங்காத கண்ட விநாயகர் துணை

வேதாகம மரபுகளையும் திருக்கோயில் மரபுகளையும் அறிந்த

உயர்திரு தெ.கி.தெ. அழகப்பசெட்டியார்

அவர்கள் வழங்கிய

ஆசியுரை

எங்கள் குடும்பம் தெய்வ நம்பிக்கையுள்ள குடும்பம். இறைவழிபாட்டிலும் இராமாயணம் படிப்பதிலும் எங்கள் முன்னோர்கள் விருப்பத்துடன் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அந்த வழி வழியான தெய்வ உணர்வு எங்களுக்கும் இயல்பில் அமைந்தது. அதன் வெளிப்பாடாகப் பேராசிரியர் சொக்கலிங்கம் எழுதிய தெய்வ நலம் என்ற நூல் வெளிவந்திருக்கிறது.

மகாகணபதி, சிவபெருமான், வயிரவர், ஆகிய தெய்வங்களைப் பற்றியும் நகரத்தார்களின் சதாசேவைச் சிற்பங்களைப் பற்றியும் நான்கு கட்டுரைகள் இந்த நூலை அழகு செய்கின்றன. எஞ்சிய இரண்டு கட்டுரைகள் திருக்கோயில்கள் மருத்துவ மையங்களாகவும் நீதிமன்றங்களாகவும் விளங்கியதைக் கூறுகின்றன. ஆசிரியர் தன்னுடைய அனுபவத்தாலும் கல்வெட்டுகளாலும் உண்மைகளைக் கோவையாக விளக்கியிருக்கிறார். சில சொற்கள் வேற்றுமொழிச் சொற்களாயினும் படிப்பதற்குச் சுவையாகவும் எளிமையாகவும் நூல் அமைந்திருக்கிறது பாராட்டத்தக்கது.

வயிரவர் மீது தனி ஈடுபாடு கொண்ட ஆசிரியர் வயிரவர் பற்றி மிகச் சிறப்பாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறார்கள். வயிரவர் கவசம் இதுகாறும் வெளிப்படாதது. அதனை நூலில் தந்திருப்பது சிறப்பு. இந்நூலிலுள்ளவற்றால் செட்டி நாட்டிலுள்ள திருக்கோயில்களையெல்லாம் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எழுவது இயல்பு. இந்த நூலாசிரியர் என் தம்பி என்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். மேலும் இந்த நூலை எங்களைக் கண்ணெனக் காத்துப் போற்றி வளர்த்த திருமதி சிட்டாள் ஆச்சி அவர்களுக்கும் திருமதி இராம. சிகப்பி ஆச்சி (விரையாச்சிலை) அவர்களுக்கும் காணிக்கையாக்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆசிரியர் நூல் பல எழுதிட வாழ்த்துகின்றேன்.

பி. அழகாபுரி தெ.கி. தெ. அழகப்ப செட்டியார்
2-12-99

பதிப்புரை

திருக்கோயில்களில் எழுந்தருளிய தெய்வத் திருமேனிகளைப் பற்றியும் திருக்கோயில் தெய்வங்கள் தரும் நலம் பற்றியும் ஆராய்ந்தெழுதிய நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

செட்டிநாட்டிலுள்ள தெய்வங்களின் பெருமையையும் அருமையையும் அனைவரும் அறிந்து வணங்கிப் பயன் பெற வேண்டுகின்றோம்.

இந்நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய காரைக்குடி தி சௌத் இந்தியா அச்சகத்தார்க்கும் திரு. சீனிவாசன் அவர்களுக்கும் நன்றி.

வாழ்க வளமுடன்.

2-12-99

சொ. பார்வதி
காரைக்குடி - 3

உ

எங்களை வளர்ப்பதற்கும், வாழவைப்பதற்கும்

அன்னையார்க்குத் துணைநின்ற ஆயாள்

தெய்வத்திரு. சிட்டாள் ஆச்சி அவர்களுக்கும்

அவர்கள் தங்கை

விராச்சிலை ஆயாள் எனும்

தெய்வத்திரு. இராம.சிகப்பி ஆச்சி அவர்களுக்கும்

இந்நூல் வணக்கத்துடனும்

அன்புடனும்

காணிக்கை

முன்னுரை

தெய்வங்களை நம்ப வேண்டும். நம்புகின்றவர்களுக்குத் தெய்வங்கள் நலங்களை அருளி வருகின்றன. மெய்யடியார்க்கும் மக்களுக்கும் தெய்வங்கள் நலம் அருளுகின்றமையையும் அத்தெய்வங்களின் நலத்தையும் எடுத்துரைக்கும் இந்நூல் தெய்வநலம் எனப் பெயர் பெற்றது. முதல் மூன்று கட்டுரைகள் கணபதி, சிவபெருமான், வயிரவர் ஆகிய மூவரைப் பற்றிப் பேசுகின்றன. இந்த மூன்று தெய்வங்களும் செட்டி நாட்டில் தனிச் சிறப்புடனும் உருவ அமைதியுடனும் திகழ்கின்றன. இந்த மூர்த்திகளின் பெருமையையும் அருமையையும் இக்கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. இந்த வட்டாரத் தெய்வங்களின் வரம் தரும் ஆற்றலையும் வடிவழகையும் விளக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

அடுத்த கட்டுரை சதாசேவை என்பதாகும். தெய்வங்களின் திருவருள் நலம் பெற்றுத் திருக்கோயில்களை உருவாக்கிய திருப்பணியாளர்களின் திருஉருவைப்பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது. சதாசேவைச் சிற்பங்கள், நகரத்தார்களின் நிலையையும் தோற்றத்தையும் உடல்வாகையும் உணர்த்தியமை கின்றன. இந்த நான்கு கட்டுரைகளும் திருமேனி அமைப்பையும் தெய்வ நலத்தையும் காட்டுகின்றன.

தெய்வங்கள் மக்களுக்கு மருத்துவராய் விளங்கியமையையும் நீதியரசராய் நேர்மையை நிலை நாட்டியமையையும் அடுத்தமையும் இரண்டு கட்டுரைகள் விளங்குகின்றன. இவற்றில் இந்த வட்டாரக் கோயில்களுடன் பிறகோயில்களும் சுட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியே விரிவாக ஆராய்ந்து நூலாக எழுதற்குரியன.

இக்கட்டுரைகள் வெளிவரவேண்டும் என்ற நோக்கிலேயே அச்சூர்தியேறி வெளிவருகின்றன. இவற்றை வெளியிடுவதில் முழுமையான நிறைவு இல்லை. வாழ்க்கையில் நிறைவு வந்துவிட்டால் (திருப்தி) வளர்ச்சி எங்கே? தொடர்ந்து கருத்துகளைத் தேடுதற்கான தூண்டுதலே இந்த நூல். அறிவைத் தேடத் தேடத் தானே ஆய்வு. செட்டி நாட்டுத் தெய்வச் சிறப்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதலின் வெளிப்பாடே இச்சிறு நூல். இந்நூலைப் படிப்பவர்க்கு இந்தக் கோயில்களைக் காண வேண்டும் என்ற உணர்ச்சி எழுந்தாலே நூலின் வெற்றி என்று உணர்வேன். இந்நூலில் என் கவனக் குறைவால் பிழைகள் காணப்படின் குறை நீக்கிக் குணங்கொண்டு படிக்க! ஏதேனும் புதிய செய்திகள் இருப்பின் ஸ்ரீஅம்பாளின் திருவருளேயாம்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய பிறையாயிரப் பெருவிழாக் கொண்டாடிய சக்தியாகம வித்வஸ்ரீ சக்திஸ்ரீ சுப்பிரமணியப் பட்டர் அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த வணக்கங்கள். பொற்குடத்துக்குப் பொட்டிட்டதுபோல இந்நூலுக்கு எங்கள் அண்ணன் திரு. அழகப்ப செட்டியார் அவர்கள் வழங்கிய ஆசியுரை அமைகிறது. எங்களுடைய தந்தையாரும் அன்னையாருமிருந்து வாழ்த்துவது எப்படியோ அப்படி அவர்களுடைய வாழ்த்து மதிப்புடையது. அவர்கள் பெரிய மனத்துடன் ஆசியுரை வழங்கியமைக்கு நன்றி.

உயர்திரு. ஸ்ரீனிவாசன் செட்டியார் - சொர்ணம் ஆச்சியின் பிறையாயிரப் பெருவிழாவில் இந்நூலை வெளியிடுகின்றேன். இந்நன்னாளில் எங்கள்ளை வளர்ப்பதற்குத் துணைநின்ற ஆயாள் சிட்டாள் ஆச்சி அவர்களையும் சிகப்பி ஆச்சி அவர்களையும் நன்றியுடன் வணங்குகின்றேன்.

2--12-1999

தே. சொக்கலிங்கம்
காரைக்குடி - 3

1. துப்பார் திருமேனி தும்பிக்கையான்

'வானுலகம் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பமாம்'

யாண்டும் எழுந்தருளிய ஆண்டவன்

இந்தியச் சமயங்கள் அனைத்தும் தங்கள் சமயத்தைச் சார்ந்த தெய்வமாக விநாயகரை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. விநாயகராகிய பிள்ளையாருக்குத் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் கோயிலுண்டு. இவர் விமானம், கோபுரம் ஆகியவற்றுடன் கூடிய திருக்கோயிலிலும், வெட்டவெளி அரசமரத்தடியிலும், ஊருணிக் கரைகளிலும், பாதைகள் கூடுமிடங்களிலும் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இவருக்கு என்று தனிக்கருவறையமைப்போ விமான அமைப்போ விதிக்கப்படவில்லை. இவரை மஞ்சள் பொடியிலும் சாணியிலும் கூடப்பிடித்துவைத்துப் பூசை செய்து வழிபடுகின்றனர். விநாயகர் இடவேறுபாடின்றியும் இனவேறுபாடின்றியும் எல்லா இடங்களிலும் எல்லார் இடத்தும் நெருங்கி அருள் புரிகின்றார். விநாயகப் பெருமான் எல்லாருக்கும் நல்லவர்; எல்லாருக்கும் வேண்டியவர்.

பண்புக்கேற்ற பெயர்கள்

விநாயகரை, முழுமுதற் பொருளாக விளங்கும் சிவபெருமானுடைய கணங்களுக்கெல்லாம் தலைவராகக் கொள்வதால் இவரைக் கணேசர் என்றும் கணபதி என்றும் அழைப்பர்; கணாதிபதி என்பதும் இவரையே குறிக்கும். கணேசருக்கு மேல் தலைமையுடைய நாயகன் ஒருவரும் இன்மையால் இவர் விநாயகர் எனப்பட்டார். அடியார்க்கு

வருகின்ற விக்கினங்களையெல்லாம் அழிக்கின்றமையான் இவர் விக்கிநேசுவரராகவும் விளங்குகிறார். எடுத்த காரியம் இடையூறின்றி முடிய இவரை வணங்கிட வேண்டும். நினைத்ததை நிறைவேற்றித்தரும் விநாயகப் பெருமானை மக்கள் இனிமையாகவும் எளிமையாகவும் உரிமையாகவும் அன்பாகவும் 'பிள்ளையார்' என்றே போற்றுகின்றனர். அனைத்துலகையும் ஆக்கிக்காத்து அழிக்க வல்ல அம்மையப்பரின் திருமகனாக - மூத்த பிள்ளையாக - விளங்கும் கணபதியைப் 'பிள்ளை' என்று பேசுவதும் அழைப்பதும் அடியார்களின் அன்பையும் அவர்தம் அருளையும் காட்டுவதாகும். இவரை மூத்த பிள்ளையார் என்றும் முருகப்பெருமானை இளைய பிள்ளையார் என்றும் கொண்டாடுவது தமிழர் வழக்கம்.

முதல் வணக்கமும், பண்பாட்டுச் சிறப்பும்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் அஃது இடையூறு இல்லாமல் இனிது நிறைவேற விக்கினேசுவரனாகிய விநாயகரை - கணபதியை - வணங்கித்தான் தொடங்குவர். செட்டி நாட்டில், பிள்ளையாருக்குத் தனி மதிப்பு. பிள்ளையார் கோயில் இல்லாத ஊரும், பிள்ளையாரை வணங்காத செட்டியாரும் இருக்கமாட்டார்கள். அவர்கள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வழிபட்டே தொடங்குவர். எதை எழுதினும் பிள்ளையார் சுழியிட்ட பின்னரே மேற்கொண்டு எழுதுவர். நகரத்தார்கள் தாம் வாழுமூர்களிலும் கொண்டு விற்கப்போன தொலை நாடுகளிலும் விநாயகருக்குக் கோயில் கட்டிக் கும்பிட்டனர். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மார்கழி மாதத்தில் சஷ்டி திதியும் சதயநட்சத்திரமும் கூடிய நன்னாளில் பிள்ளையார் நோன்பு மேற்கொண்டு இழை எடுத்துக்

கொள்ளுவர்; இஃது இவர்களிடையே ஆழமாகப் பதிந்துள்ள பிள்ளையார் வழிபாட்டை வெளிப்படுத்துவதாகும். பெண்ணுக்குச் சீர்வரிசை வைத்திடும் போது வெள்ளியாலான விநாயகரைக் கட்டாயம் செய்தளிப்பர். மணப்பெண்ணுக்குச் சடங்கு செய்யும் சடங்குத்தட்டில் விநாயகர் வீற்றிருப்பார். பிள்ளையார் நோன்பு விநாயகரைப் பொங்கலன்று விளக்குச்சட்டியில் வைத்து வழிபடுவதும் தொன்று தொட்டு வரும் பண்பாடாகும். நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழ்க்கையில், விநாயகர் வழிபாடு பழங்கால முதல் பேரிடம் பெற்றிருக்கிறது.

தனியாய்வுக் களம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சென்ற இடமெல்லாம் ஊருணிகள் அமைத்து அதன் கரையில் அரசையும் வேம்பையும் நட்டுப்பிள்ளையாரையும் நிறுவிவரலாயினர். நகரத்தார்கள் தங்கள் சொந்த ஊரிலும் வணிகம் செய்யச் சென்ற ஊரிலும் விநாயகர் கோயில்கள் எழுப்பி வாழ்ந்தனர். அவர்கள் எழுப்பிய கோயில்கள் ஆயிரமாயிரம். நகரத்தார்களின் இளையாத்தக்குடியில் ஏழு உட்பிரிவினருக்கும் ஏழு விநாயகர் கோயில்களும் ஊருணிகளுமுள்ளன. சிவன் கோயில் திருப்பணி போல விநாயகர் கோயில் திருப்பணியும் கலைச்சிறப்பும் கட்டடச் சிறப்பும் மிக்கவை.

நகரத்தார்கள் கட்டிய விநாயகர் கோயிலில் உள்ள மூர்த்திகள் அனைத்தும் அவர்கள் பொருள் செலவில் உருவாக்கியவையே; அவர்கள் வேறிடத்திலிருந்து கொண்டு வந்தவையாகத் தெரியவில்லை. செட்டி நாட்டிலுள்ள விநாயகர் திருவுருவங்கள் அனைத்தும் இடம் புரிவிநாயகரே. பிள்ளையாரின் தும்பிக்கை இடமாக வளைந்தமைந்திருப்பது இடம்புரி விநாயகர். இன்னொரு வகையான பிள்ளையாரின்

தும்பிக்கை வலமாக வளைந்திருக்கும். அவர் வலம்புரி விநாயகர். வலம்புரி விநாயகருக்கு அருள் நல்குவதில் ஆற்றல் மிகுதி; அதுபோல ஆகம வழிபாட்டிலும் அவரை வழிபட மிகுதியான நியமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஓங்கார வடிவப்பிள்ளையார்

பிள்ளையார் வாயின் வலப்பக்க ஓரத்தில் தொடங்கிக் கன்னம், மத்தகம் இவற்றைச் சுற்றிக் கொண்டு இடப்பக்கம் தும்பிக்கை வழியாக இறங்கி அதன் சுழித்த முடிவுக்கு வந்தால் அந்த வரைகோடு 'ஓம்' என்றாகும். பிள்ளையாரின் முகவடிவே ஓம் என்பதாகக் காட்சிதரும். இடம்புரியாகச் சுழித்த பிள்ளையாருக்கு இவ்வாறு அமைவதில்லை. இதனாலேயே இடம்புரி விநாயகரைக் காட்டிலும் வலம்புரி விநாயகருக்குச் சிறப்பமைகிறது. இப்பெருமானின் திருஉருவச்சிறப்பை அறிஞர் கம்பனடிப்பொடி

ஓங்கார ஒலிக்குரிய வரிவடிமான 'ஓம்' என்பதைக் கட்புலானாகும்படி காட்ட யானைத்தலையே பெரிதும் ஏற்றதாயிருக்கிறது. வலப்புறத்தந்தம் ஒடிந்ததான அமைதியில் காட்டப் பெறுவதன் மூலம் 'ஓ' என்ற எழுத்தின் தொடக்கச்சுழி கிடைத்துவிடுகிறது. அங்கிருந்து மேல் நோக்கி வலஞ்சுழித்து இடக்காதுவரை சென்று, வளைந்த இடத்தந்தத்தின் வழியாகக் கீழ் நோக்கித்துதிக்கை நுனிவரைக் கோடிட்டால் 'ஓ' என்ற வரிவடிவம் தோன்றிவிடு(ம்)' கையில் உள்ள மோதகம் 'ம்' என்ற வரி வடிவத்தைக் காட்டுகிறது (1)

என்று விளக்குகின்றார். பிள்ளையார்பட்டி, பிள்ளையார்க்கு இரண்டு கைகளே உள்ளன. வலக்கையில் லிங்கம் போன்ற வடிவம் காணப்படுகிறது; இடக்கை இடுப்பில் உதரபந்தத்தைத் தடவிக் கொள்வது போல விளங்குகிறது. மார்பில் முப்புரி நூல் இல்லை; இக்குடைவரையின் சங்கநாராயணர் உருவத்தில் பட்டையான முப்புரிநூல் காணப்படுகிறது. இந்த விநாயகரிடம் அங்குச பாசமில்லை; மிகப்பெரிய வடிவில் வடக்கு நோக்கி இப்பெருமான் அமர்ந்திருக்கிறார். விநாயகர் வழிபாட்டின் தொன்மையையும் பெருமையையும் இங்குள்ள விநாயகப் பெருமான் காட்டி நிற்கிறார்.

விநாயகரைப் பணியும் நகரத்தார்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வரலாறுபற்றிய பல சிறு நூல்கள் வெளிப்போந்திருக்கின்றன. நகரத்தார்கள் நாகநாட்டுச் சாந்தியாபுரியிலிருந்தபோது கோபதீசுவர சுவாமி தெரிசனமும் சதாசிவகுரு பீடத்தில் தீட்சையும் மரகதவிநாய்கர் பூசையும் செய்துகொண்டு செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். இதனால், மிகப்பழங்காலத்திலிருந்தே நகரத்தார்கள் சிவ வழிபாடும் விநாயகர் வழிபாடுமுடையவர்களாக விளங்கினர் என்பது புலனாகும்.

அடுத்து, நகரத்தார்கள் காஞ்சிபுரம் வந்ததாகவும், அதன் பின்பு காவிரிப் பூம்பட்டினம் போந்ததாகவும், இரண்டு ஊரிகளிலும் மரகத விநாயகர் பூசை தொடர்ந்ததாகவும் வரலாறுகள் சுட்டுகின்றன. அவர்கள் இங்கும் சிவபெருமானை வழிபட்டாலும், வழிபட்ட சிவலிங்கத் திருவுருவம் வெவ்வேறானது. நாட்டுக் கோட்டை நகரத்தார் வாழ்வியலை நன்கு நோக்கியே இந்த வரலாற்றை எழுதியவர்கள் விநாயகர் வழிபாட்டைச் சுட்டியிருக்கின்றனர். ஆனால், நகரத்தார்கள் செட்டி நாட்டில்

வாழ்ந்தபோது, மரகத விநாயகர் பூசையை மேற்கொண்டிருந்ததாக நாட்டுக்கோட்டை வரலாறு குறிப்பிடவில்லை. எனவே, இங்குவரும் போதும், மரகத விநாயகர் திருவுருவம் நகரத்தார்களின் கைகளில் இல்லை என்று ஊகிக்கப்படும்.

ஓரினம் பல குழுவாதல்

நாட்டுக்கோட்டை நகரத்தார், ஆயிரம் வைசியர், ஐந்நூற்றான் செட்டியார், பன்னிரண்டாம் செட்டியார், வல்லநாட்டுச் செட்டியார்கள் போன்ற பல செட்டி மரபினர்கள் அடங்கிய வணிகக்குழு தமிழகத்தில் ஒன்பதாம் நூற்றாண்டு முதல் இருந்தது. இக்குழுவைச் சார்ந்தவர்களே பல்வேறு சிறு சிறு இனத்தவராகப் பிரிந்து விட்டனர். இவ்வாறு நாட்டுக்கோட்டை நகரத்தாருடன் நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகச் சேர்ந்த மக்கள் - இன்று நாகர்கோயில் கோட்டாற்றுப் பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் தங்களைச் 'செட்டுமார்கள்' (செட்டியார்கள்) என்றழைத்துக்கொள்ளுகின்றனர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் பிறரும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இந்தப் பகுதிக்கு வந்தபோது ஒவ்வொருவரும் தங்களுடன் சில தெய்வத் திருமேனிகளை உடன் கொண்டுவந்தனர். அங்ஙனம் அனைவராலும் கொண்டுவரப்பெற்ற மரகத விநாயகர் திருவுருவம், கோட்டாற்றுச் செட்டுமார்கள் கையில் சேர்ந்து, அவர்கள் வழிபாட்டுக்குரியதாயிற்று. இன்று அந்த இனத்தாருக்கு மட்டுமே உரியவராக அந்த விநாயகர் விளங்குகிறார்.

இருப்பும் மறைப்பும்

இன்று கோட்டாறு செட்டிமார்களின் நிருவாகத்திலும் உரிமையிலுமுள்ள நயினார் தேசிக விநாயகர் கோயில்தான்,

மரகத விநாயகர் கோயில். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பலர், தங்களுக்குமுரிமையுள்ள மரகத விநாயகர் திருமேனி இங்கு இருப்பதாக நினைக்கின்றனர். உண்மையில், மரகத விநாயகர் திருவுருவச்சிலை இங்கு இல்லை. கோட்டாற்றுச் செட்டுமார்கள் தாங்கள் கொண்டுவந்த மரகத விநாயகர் திருமேனியைத் தரையிலிட்டுப் புதைத்துவிட்டு அதன்மேல் வேறொரு விநாயகரை வைத்து வணங்கினர் என்று சொல்லுகின்றனர். எனவே, மரகத விநாயகர், திருக்கோயில் கருவறையின் அடியில் இருக்கிறது.

மூலஸ்தானத்தில் விநாயகர் உள்ள இத்திருக்கோயிலில், கி.பி.1697 கொல்லம் ஆண்டு 872ஐக் குறிக்கும் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கோயில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியது என்று அறிய முடியும். கோட்டாற்றுச் செட்டுமார்கள், இரணியல், திருவிதாங்கோடு, குளச்சல் முதலிய ஏழூர்களில் தங்கி 'ஏழூர்ச் செட்டுமார்கள்' என்று பெயர் பெற்றனர். இன்றும் தாங்கள் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து இங்கு வந்ததாக இவர்களிடையே கருத்துப் பரவியிருக்கிறது.

தேசிவிநாயகர் - திருஉருவம்

இந்த ஏழூர்ச் செட்டுமார்களிடம் இருக்கும் மரகத விநாயகரை நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சிலர் பார்க்க வேண்டும் என்று விரும்பி, அவர்களோடு தொடர்பு கொண்டனர். ஆனால், ஏழூர்ச் செட்டுமார்கள், அந்த மரகத விநாயகர் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாகவும், அதனால் காட்ட முடியாது என்றும் மறுத்துவிட்டனர். உண்மையில், மரகத விநாயகர் திருஉருவம் ஏதும் அவர்களிடம் இல்லை; இருந்ததாகச் சொல்லப்படும் பழைய மரகத விநாயகரும் கோயில் கருவறைக்குக்கீழ் புதைக்கப்பட்டுவிட்டது. எனவே, இன்று 'தேசிகவிநாயகர்' என்று

கொண்டாடப்பெறும் விநாயகரே, மரகத விநாயகராகத் திகழ்கின்றார்.

தேசிக விநாயகர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகருக்கு நான்கு கைகள். வலமேல்கையில் அங்குசமும் கீழ்க்கையில் தந்தமும், இடமேல் கையில் பாசமும், கீழ்க்கையில் மோதகமும் உள்ளன. மோதகத்தைத் தும்பிக்கை தொட்டுக்கொண்டிருக்கும். தும்பிக்கை இடம்புரியாகும். ஒருகால் குத்திட்டும், மற்றொரு கால் மடக்கியும் காணப்படும். இவர் இடம்புரி விநாயகராக அமைகின்றார்.

அற்புதமும் அருளாட்சியும்

இந்த விநாயகரின் தும்பிக்கை சிறிது பின்னமாகிவிட்டது. இதனை எடுத்துவிட்டு வேறு விநாயகர் சிலையை நிறுவ வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பெற்றன. குடமுழுக்கு விழாவிற்கு ஆவன செய்து விநாயகர் சிலையைப் பெயர்க்க அடியார்கள் முயன்றனர். ஆனால், அந்த விநாயகரைப் பெயர்க்க முடியவில்லை. பின், சாந்திக்காரர் (பூசாரி) கனவில் விநாயகர் தோன்றிப் பின்னமாகிய பகுதியைப் பொன்கொண்டிழைத்து நிறைவு செய்யுமாறு அருளினார். இன்றும் இக்கோலத்தோடிருந்து விநாயகர் அருள்புரிவதைக் காண முடியும்.

திருக்கோயில் திருவுருவங்களுள் ஏதேனும் பின்னப்பட்டுப் போனால், இவ்வாறு திருத்தம் செய்வது செட்டிநாட்டிலும் காணப்படுகிறது. காரைக்குடிக்கருகிலுள்ள கோயிலூர்த் திருநெல்லையம்மன் திருவுருவத்தில் திருவடிப்பகுதி வெள்ளியால் செப்பனிடப்பட்டிருக்கிறது.

'கோட்டாற்றுச் செட்டுமார்' வணங்கிக் குலதெய்வமாகக் கொண்டாடும் விநாயகர் மரகத விநாயகர் என்று சொன்னாலும், உண்மையில் அவர் தேசிக விநாயகரே. இப்பெயரே மிகப் பழமையான பெயர். தேசிகவிநாயகர் என்ற பெயரே தேசி விநாயகர் என்று வழங்குகின்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகரின் மூலப்பெயரும் முதற்பெயரும் தேசி விநாயகர் என்பதேயாகும். இந்தப் பெயரொற்றுமை ஒன்று கோட்டாற்றுச் செட்டுமாருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குமுள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுவதாகும்.

நானா தேசியும் தேசி விநாயகரும்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஒருங்கு இருந்த வணிகக் குழு 'நானா தேசி' என்று அழைக்கப்பெறும். பல்வேறு தேசங்களுக்குச் சென்று வணிகம் செய்வது இவர்கள் இயற்கை. 'தேசி'களுக்குரிய விநாயகர் தேசி விநாயகர் எனப் பெற்றார். நகரத்தார் ஒன்பது பிரிவில் சூரக்குடிச் சிவபெருமான் பெயர் தேசிகநாதர். இப்பெயரின் மிகப்பழமைக்கு இவர்கள்தாம் உரியவர்கள். சூரக்குடிக் கோயிலைச் சேர்ந்தவர்கள் கட்டி வணங்கிய விநாயகர் 'தேசி விநாயகர்' ஆவார். இப்பெயருடைய விநாயகர் கோயில் ஒன்று குருவிக் கொண்டான்பட்டி ஆனை விழுந்தான் ஊருணிக்கரையில் விளங்குகிறது. 'தேசிகநாராயணப் பெருமாள்' என்று திருமாலும் தேசிகநாராயணபுரம் என்ற பிரிவும் இவர்களிடையே உண்டு.

இவற்றையெல்லாம் ஒருங்கு நோக்கும்போது, தேசி, தேசிக என்ற பெயர்கள் நகரத்தாரோடு தொடர்புடையன என்பது தெளிவாகும். தேசி என்பது நானாதேசி என்பதனுடன் தொடர்புடைய பெயர்; தேசிகன் என்ற சொல்லுக்கு வணிகன்

என்ற பொருளுள்ளது. வணிகர்களின் தலைவன் என்ற பொருளில் 'தேசிக நாதர்' என்ற பெயர் அமைந்திருக்கின்றது. எனவே, 'தேசி விநாயகர்' என்ற பெயரால் விளங்கும் பிள்ளையார்பட்டிப் பிள்ளையாரும் கோட்டாற்று விநாயகரும் நாட்டுக்கோட்டை நகரத்தார் அனைவருக்கும் பொதுவுரிமையுடையன. ஒன்று, பிள்ளையார்பட்டி நகரத்தாருக்கும், மற்றொன்று, கோட்டாற்றுச் செட்டுமாருக்கும் உரிமையுடையனவாகிவிட்டன.

மரகதக்கல் விநாயகர்

ஒன்பான் மணிகளுள் ஒன்றான மரகதத்தால் அமைந்த விநாயகர் திருவுருவை 'மரகத விநாயகர்' என்று வழங்கினர். செய்யப்பெற்ற பொருளால் இவ்விநாயகர் இப்பெயர் பெற்றார். இவர் பெயரே தேசி விநாயகர். நாட்டுக் கோட்டை நகரத்தார்கள், ஒரு காலத்தில் ஒன்பான் மணிகளை வாங்கி விற்கும் வணிகம் செய்தமையால், மரகதத்தால் உருவான விநாயகரும் இம்மரபினிடம் இருந்திருக்க வாய்ப்புண்டு. இன்றுள்ள ஒன்பது நகரக்கோயில்களிலோ நகரத்தார் வாழும் ஊர்களிலுள்ள சிவன், விநாயகர் கோயில்களிலோ எந்தக் கோயிலிலும் ஒன்பான் மணிகளுள் ஒன்றினாலான விநாயகரோ வேறு தெய்வ உருவமோ இல்லை. திருவுத்தரகோசமங்கையில், மரகத நடராசர் உருவம் இருப்பதை இன்றைக்கும் காண முடிகிறது. எனவே, மரகதத்தால் ஆன விநாயகர் சிலை இந்தக் குழுவினிடமிருந்து அவர்கள் இடம் பெயர்ந்த காலத்தில் எப்படியோ எங்கோ தங்கிவிட்டது. நகரத்தார்களும் நகரத்தார் வரலாறுகளும் இம்மரகத விநாயகர் கோட்டாற்றில் இருப்பதாகவே கருதி வந்திருக்கின்றனர். இப்பெயரின் நினைவாகத் தேவகோட்டை நகரச் சிவன் கோயிலிலும் கோட்டையூர் ஊருணிப் பிள்ளையார் கோயிலிலும்

பிள்ளையார்க்கு மரகத விநாயகர் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

வலம்புரி விநாயகரும் செட்டிநாடும்

பிள்ளையார்பட்டிப் பிள்ளையார் போலச் செட்டி நாட்டில் பல விநாயகர் திருமேனிகள் குடை வரை கோயில்களில் வழிபாட்டிலுள்ளன. குன்றக்குடிக் குடைவரையின் கிழக்குப் பக்கத்தில் வலம்புரிப் பிள்ளையார் வடிவமுள்ளது. இவரும் பிள்ளையார்பட்டி விநாயகரைப் போல இரண்டு கைகளுடனேயே திகழ்கின்றார். வலதுகையில் மோதகம் இருக்க இடதுகை இடுப்பில் வைத்தவாறு இருக்கிறது. இதேமலையில் இரண்டு குடை வரைக்கிடையே நான்குகைகளுடன் வலம்புரி விநாயகர் ஒருவர் உள்ளார். மலையில் வடிக்கப்பட்ட பிள்ளையார் உருவங்கள் திருக்கோளக்குடி, நச்சாந்து பட்டியருகேயுள்ள மலையக்கோயில், மகிபாலன்பட்டி குடைவரைக் கோயில் ஆகியவற்றில் பிள்ளையார் வடிவங்கள் உள்ளன. இந்த உருவங்களுக்கு மகுடம் வடிக்கப்படவில்லை. எல்லா வடிவங்களிலும் மிகப்பெரிய வடிவம் பிள்ளையார்பட்டிக்கற்பக விநாயகரே (இவருடைய பழைய பெயர் தேசி விநாயகர்).

எங்குமுள்ள இடம்புரியார்

வலம்புரி விநாயகரைப் போலன்றிப் பல்வேறிடங்களிலும் இடம்புரி விநாயகரிடம் பெற்றுள்ளார். நகரத்தார்களின் கோயில் பிரிவை அவர்களுடைய விநாயகர் பெயராலேயே அறிந்து கொள்ள முடியும். மாத்தூர்க் கோயில் நகரத்தாரனைவரும் கலங்காத கண்ட விநாயகர் என்றும் இளையாத்தக்குடி நகரத்தாரனைவரும் கைலாச விநாயகர் என்றும் நேமம் கோயில் நகரத்தார் சிதம்பர விநாயகர் என்றும் பெயர் வெவ்வேறாக

வைத்துக் கொண்டிருக்கின்றனர்; பெயரில் தான் வேற்றுமையே அன்றி உருவத்தில் வேறுபாடில்லை. மெய்ய விநாயகர், சிதம்பர விநாயகர், சித்தி விநாயகர், கற்பக விநாயகர் என்பன போலப் பலவகையான பெயர்களைக் கணபதிக்கு இட்டிருந்தாலும் வேற்றுமையான வடிவங்கள் இல்லை. இவ்வாறு விளங்கும் விநாயகருக்கு அங்குசம், பாசம், தந்தம், மோதகம் ஆகியன நான்கு கைகளில் காணப்படும். நரமுக கணபதி வடிவமில்லை. சிவன்கோயில் திருச்சுற்றில் வலப்புறக் கோட்டத்தில் நர்த்தன கணபதி இருப்பார்.

கோயிலோ கூரையோ இன்றி வெளியில் இருக்கும் வெயில் பிள்ளையாருக்குத் தனி மகிமை உண்டு. பிள்ளையாரின் இருபுறமும் நாகர் திருவுருவை (ஒன்றின் படத்தில் கிருஷ்ணர், இன்னொன்றில் சிவலிங்கம்). அமைத்து வணங்குவது செட்டிநாட்டு வழக்கம்.

தேவி கணபதி

பிள்ளையாரைப் பிரம்மச்சாரியாகத் தமிழர் வழிபட்டாலும் அவரைச் சத்தி வடிவொடு சேர்த்து வணங்கும் திருமேனிகளுமுள்ளன. செவ்வந்தி நிறமுள்ள விநாயகர் பச்சைநிறமுடைய தேவியைத் தழுவிக் கொண்டிருப்பர்; ஒருவருக்கொருவர் கைகொடுத்துத் தழுவியிருப்பர். பாசம், பூ மாலை அபயகரமுமாக இவர் திகழ்வர். இவரைச் சத்திகணபதி என்பர். மகாகணபதி பன்னிரண்டு கைகளையுடையவராய்ச் செங்கதிர் போல் ஒளி வீசுவார். தாமரையை ஏந்திய தேவியை மடிமீது வைத்துத் தழுவியவாறு இருப்பர். ஊர்த்துவகணபதி, உத்தண்ட கணபதி ஆகிய வடிவங்களும் தேவியுடன் விளங்குவன. இத்தகைய வடிவங்கள் செட்டி நாட்டில் இல்லை. வல்லபையைத் தழுவிய வல்லப கணபதியின் வடிவம் குன்றக்குடி

மலையில் சண்முகநாதன் கோயிலுக்குப் போகும் வழியில் மலைமீதுள்ளது. இவ்வடிவம் ஒரே கல்லில் அழகுற அமைந்தது. சில ஊர்களில் சித்தி, புத்தி என்னும் தேவியர் இருவருடன் சித்திபுத்தி விநாயகர் வீற்றிருந்து அருள் புரிகின்றார். சித்திபுத்தி என்பன உருவகமாக விளங்குகின்றன; இருப்பினும் செட்டிநாட்டில் விநாயகர் பிரம்மச்சாரியாகவே பல இடங்களில் வழிபடப்பெறுகிறார்.

பிள்ளையார்பட்டிக் கற்பகப்பிள்ளையார் உலகெலாம் போற்றும் மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார்; இளையாத்தக்குடி கைலாச விநாயகரும் அடியார்க்கு அருளும் பெருமான்; நடுவாற்று மருதம்பிள்ளையார் நோய் நீக்கும் பெருமான். காரைக்குடி நகரச் சிவன் கோயிலருகில் நூற்றெட்டுவிநாயகர் வரிசையாகக் காட்சி தருகின்றார். ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான விநாயகர்கள் வரிசை.

தனயனும் தந்தையே

விநாயகப் பெருமான், சிவபெருமானுக்கு ஈடானவர்; அவர் வெற்றியையும், ஞானத்தையும், மோட்சத்தையும் தருபவர்; அவரை வழிபட்டால் எல்லா இடையூறுகளையும் வென்று மேலோங்கச் செய்வார். விநாயகரை எவரும் எதிர்க்க முடியாது; அவர் முழுமுதற் கடவுளான சிவபெருமானாகவே திகழ்கிறார். மதுரை திருவிளையாடல் புராணத்தில், சிவபெருமான் விநாயகரைச் சபித்தால் அச்சாபம் அவரையேசாரும் என்று கூறப்பட்டிருக்கிறது.

'வெருவரு செலவின் வேழமுகத்தனை விதித்த சாபம்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம் கூறான்'

என்பது திருவிளையாடல் துணிபு. அத்தகைய பெருமானை வணங்குதல் சாலும் பிள்ளையாருக்குப் பெரிய வயிறு;

அவருடைய அருளைப் பெற இனிய பல வகைப் பலகாரங்களையும் அமுதங்களையும் படைத்து மகிழவேண்டும். அவருக்கு நிறையப் பிரசாதங்களைப் படைப்பது மிக்க மகிழ்ச்சியை அளிக்கும். செட்டி நாட்டில் வெள்ளியாலும் தங்கத்தாலும் கவசம் செய்து விநாயகரை அலங்காரம் செய்து வணங்குவர்; அவருக்குச் சந்தனக்காப்புமுண்டு. எனினும் வடநாடு போல ஒரே சிவப்பாகச் செந்தூரத்தைப் பூசி அவரை அணி செய்வதில்லை.

சான்றெண் விளக்கம்

1. கம்பனடிப்பொடி (1992) - பிள்ளையார்பட்டித் தலவரலாறு கற்பகவிநாயகர் அறநிலை, பிள்ளையார்பட்டி, மறுபதிப்பு ப. 21

2. கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகிட

அரியசடை போற்றி அருள்பொழிசெம் முகம்போற்றி
விரையிதழி மலரணிநூல் விளங்கியமர் பதம்போற்றி
மருவுமுயர் பேரழகு வளருதர நிலைபோற்றி
திருவளர்செந் தமிழ்ச் சொக்கன் திருவடித்தா மரைபோற்றி

சிவலிங்கவழிபாடு

அடியார்க்கு எளியவனான அரன் அலாது வேறொரு தெய்வமில்லை. செம்மனி எம்மானாகிய சிவபெருமானை - அரனை - இலிங்கமூர்த்தியாக வழிபடுவதே சைவ மரபு. இந்திய நாட்டில் சிவனுக்கு என்று அமைந்த கோயில்களில் எல்லாம் தலைமைக் கடவுளாகத் திகழ்வது இலிங்கமே. 'தெற்கே கன்னியா குமரியிலிருந்து வடக்கே காஷ்மீரம் வரை இலிங்க வழிபாடு ஒரே மாதிரியாகப் பரவியுள்ளது'. (1) சிவலிங்கத்தை மையப்படுத்தி ஏனைய மூர்த்திகளைச் சுற்றாலையில் நிறுவி வழிபடுவது தமிழ்நாட்டு வழக்கம்; வடநாட்டில் சிவலிங்கமன்றிப் பிற திருவுருவங்களைக் கோயிலில் அமைத்து வழிபடுதலில்லை. நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சிவனடி மறவாது சிவ சிந்தை மிக்கவர்களாய்ச் சிவகோத்திரத்தைச் சார்ந்தவர்களாய் விளங்குகின்றனர். இவர்கள் பாடல் பெற்ற திருத்தலங்களிலுள்ள சிவன்கோயில்களைப் பேணிக்காத்துத் திருக்குடமுழுக்குச் செய்து வழிபட்டு வருகின்றனர். அதுபோலச் செட்டிநாட்டிலுள்ள சிவன் கோயில்களைப் பேணுவதிலும் அவர்கள் அக்கரை காட்டி வருகின்றனர்.

மூன்று திறமான கோயில்கள்

செட்டிநாட்டுச் சிவன்கோயில்களின் சிறப்பும் அருளாட்சியும் போற்றத்தக்கவை. இங்குள்ள பல சிவன்கோயில்கள், தமிழக வரலாற்றில் பெருஞ்சிறப்பும் தனித்தன்மையும் பெற்றவை. பிள்ளையார்பட்டிக் குடை வரை, குன்றக்குடிக் குடை வரை, இராயவரம் மலைக்கொழுந்தீசர் குடை வரை, மலையக்கோயில் குடை வரை, திருமெய்யம் குடை வரை, திருக்கோளக்குடிக் குடை வரை ஆகியன மிகப் பழைமையான கோயில்கள். இவை சமய வரலாற்றையும் கோயில் வரலாற்றையும் உணர்த்தும் அரிய படைப்புகள். இவற்றைப் போலப் பாண்டியர்களின் கட்டுமானக்கோயில்களும் பல உள்ளன.

இவற்றுக்குப்பின் தனிப்பட்ட நகரத்தார்கள் கட்டிய சிவன் கோயில்கள் பல குறிப்பிடத் தகுந்தவை. இராயவரம் வெ.மு.சிவன்கோயிலும் உ.சிறுவயல் சா.ராம.சிவன் கோயிலும் தனிப்பட்டவர்களின் பொருள் செலவில் கட்டப்பட்டவை; இவை இன்று வரை அவர்கள் பொறுப்பிலேயே உள்ளவை. இவையல்லாத மற்ற சிவன் கோயில்கள், நகரத்தார் பொதுச் செலவில் கட்டப்பட்டுப் பொது நிருவாகத்தில் உள்ளவை. எல்லாச் சிவன் கோயிலிலும் சிவபெருமானுக்கே முதன்மை தரப்பெறுகின்றது.

இவ்வாறு கட்டப்பட்ட சிவன் கோயில்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) குடை வரைக் கோயில்கள்
2) மன்னர்கள் கட்டிய கோயில்கள்
3) நகரத்தார்கள் கட்டிய கோயில்கள் இதில் இரண்டு வகை. ஒன்று தனிப்பட்டவர்கள் கட்டியன. மற்றொன்று நகரப் பொதுவாகக் கட்டியன.

நகரத்தார்கள் வெவ்வேறு அடிப்படையில் கோயில்களைக் கட்டினாலும், அவர்கள் கட்டு முன்னரே தொன்று தொட்டு இருந்தாலும் அவை சைவமும் தமிழும் தழைத்தோங்கும் நிலையங்களாக உள்ளன.

செட்டிநாட்டுச் சிவன் கோயில்களில் (இன்றைய) கோயிலூர்ச் சிவன் கோயில்தான் காலத்தால் முற்பட்டது. கோயிலூராண்டவரின் முயற்சியால், தொன்மைக் கோயிலோடு புதுக்கோயில் உருப்பெற்றது. இதனைத் தொடர்ந்து பல கோயில்களில் இந்த நாட்டில் திருப்பணி செய்யப்பட்டன; புதிதாகக் கட்டப்பட்டன. இக்கோயில்களின் சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுந்தரேசர் / சொக்கலிங்கம் என்று பெயர் பெற்றிருந்தால் அக்கோயில் கி.பி.1850க்குப் பின்னர் கட்டப்பெற்றவை என்பது உறுதி. நீலகண்டேசுவரர், மும்முடியீசர், கொற்ற வாளீசர், திருவீசர், ஆகமசீலேசுவரர் என்பன போல் வேறுபட்ட பெயர்களாகக் காணப்பட்டால், அக்கோயில்கள் மிகப் பழைமையானவை என்று வெளிப்படும். இத்தகைய கோயில்கள் சிலவற்றை நகரத்தார்கள் திருத்தியும் புதுப்பித்தும் திருப்பணி செய்ததும் உண்டு. நகரத்தார்களின் சமூக நடை முறைக்குக் களமாக இருக்கும் ஒன்பது நகரக்கோயில்களும் இங்ஙனம் திருத்திக்கட்டப் பெற்றுப்பின் அவர்களின் நிருவாகத்திற்கு உட்படுத்தப்பட்டவை.

இவை வரலாற்றுப் பழமையுடையவை; இக்கோயில்களிலிருந்து வரலாற்றுக் குறிப்புகள் - கல்வெட்டுகள் - அழிக்கப்பட்டுப் புதுக்கோயில்கள் போல உருவாக்கப்பட்டிருக்கின்றன. கோயிலிலிலுள்ள சிவபெருமான் பெயரைக் கொண்டே, கோயில் பழைமையானதா? நகரத்தார்கள் கட்டியதா? என்று கண்டு கொள்ள முடியும். ஊரிலுள்ள பழைய

சிவன்கோயிலை இவர்கள் ஏற்றுத்திருப்பணி செய்யவில்லை எனில் வேறு சிவன் கோயிலைப் போட்டியாகக் கட்டமாட்டார்கள்; அதற்கீடாகச் சுப்பிரமணியர் கோயில் கட்டிக்கொண்டு அதை மையமாகக் கொண்டு சமூக நடை முறைகளை மேற்கொள்வர். விரையாச்சிலை, இராங்கியம் ஆகிய ஊர்களில் தனியே சுப்பிரமணியர் கோயில் கட்டி அதன் மூலம் தங்களின் சமூக நடைமுறைகளை நடத்துகின்றனர்.

மலையிலுருவான மூர்த்திகள்

மலையைக் குடைந்து உள்கூடாக்கிய பகுதியே, திருக்கோயில் கருவறையாகும். அங்கு வைத்து வழிபடத்தனியே கல்லில் இலிங்கத்தையும் ஆவுடையாரையும் அமைத்துக் கோயிலை உருவாக்குவது பல்லவர் குடைவரைக் கோயில் மரபு. ஆனால் பாண்டியரும் முத்தரையரும் அமைத்த குடைவரையில் கருவறையில் - மலையைக் குடையும் போதே லிங்கத் திருமேனியையும் அதே கல்லில் உருவாக்குவர். இது பல்லவர் நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இவ்வண்ணம் அமைத்த லிங்கங்களைச் 'சுயம்பு லிங்கம்' என்று போற்றுவர் ஆன்றோர். கல்லில் அமைந்த லிங்கங்களே கோயிலில் வைத்து வணங்குதற்குரியவை. முத்தரையர் கோயிலான திருமெய்யம் சத்தியகிரீசுவரர் குடைவரைக் கோயில் மிகப்பழமையானது. இசைத் தொடர்புடைய கல்வெட்டொன்று இங்குப் பொறிக்கப் பட்டிருக்கின்றது. இம்மெய்ய மலையில் சிவலிங்கம் குடைந்து எடுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே நந்தியும் அண்ணா மலையாரும் மலைப்பாறையிலேயே செதுக்கப்பட்டிருக்கின்றனர். மெய்ய மலையைச் சார்ந்த குன்றிலுள்ள குடை வரையான வானவன் மாதே வீச்சுரத்திலுள்ள சிவலிங்கமும் மிகப்பெரியது. இப்பெருமானும் மலையில்

வடிக்கப்பட்டவரே. இங்குப் பெருமானுக்கு எதிரே நந்தியில்லை. இரண்டு சிவலிங்கப் பெருமானுக்குமுரிய ஆவுடையாரும் சதுரமானவை; அபிடேகநீர் வெளியேறப் பிரநாளம் உள்ளவை.

பிள்ளையார் பட்டிக் குடை வரை, குன்றக்குடி மலையடிவாரத்திலுள்ள மூன்று குடை வரைகள் ஆகியவற்றில் எழுந்தருளிய மூர்த்திகள் மலைப்பாறையிலுருவானவை. அவற்றைப் போலத் திருக்கோளக்குடி, மகிபாலன்பட்டி ஆகிய இடங்களிலுள்ள சிவலிங்கமூர்த்திகள் மலைப்பாறையில் செதுக்கப்பட்டவை. இவை பாண்டிய நாட்டு மரபிலமைந்தன. நச்சாந்து பட்டியைச் சார்ந்த மலையக்கோயில் கிழக்குக் குடை வரையிலும் இராயவரம் - ஆயங்குடி மலைக்கொழுந்தீசர் குடை வரையிலும் எழுந்தருளிய லிங்கங்கள் சுயம்புவேயாம். இவை எண்கோணவடிவின; ஆவுடையாரிலிருந்து அபிடேகநீர் வெளியேற வழிஉளது. இவ்வாறு பாறையில் செதுக்கப்பட்ட லிங்கங்கள் அனைத்திற்கும் யந்திரத்தகடுகளும் நவமணிகளும் பதிக்கப்பெறவில்லை. இவை அந்த வகை இலிங்கங்களுக்குத் தேவையில்லை. இக்காலத்தில் பிரநாளம்வழியே அபிடேக நீர் விழுமிடத்தில் குழி பறித்து இவற்றைப் பதிக்கின்ற புதிய வழக்கம் வந்திருக்கிறது.

நச்சாந்துபட்டிக்குக் கிழக்கேயுள்ள பேரையூர் நாகநாத சுவாமி கருவறைக்குத் தென்புறம் - தெட்சிணாமூர்த்தி பீடத்தினருகில் - மலைப்புடைப்பாகக் குமிழம்பழம் போல ஒரு புடைப்புள்ளது. இது மிகக் குறைந்த உயரமுள்ளது. இதனையும் சுயம்புலிங்கம் என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆவுடையாரோ கருவறையோ கிடையாது. இந்நாட்டிலுள்ள சுயம்புலிங்கங்கள் அனைத்தும் சிறப்பும் அருளாற்றலும் உடையவை.

மரம் விளைந்த சிவலிங்கம்

மலைப்பாறையில் சுயம்புவாகச் சிவலிங்கம் அமைவதுபோல மரங்களும் கல்லாக விளைந்து சிவலிங்கம் உருவாகிறது. சுயம்புலிங்கம் தானே தோன்றுவது. தொடக்கம் அற்றது.

> பலவகைப்பட்ட உற்பாதங்களின் விளைவாகச் சிதைவுறினும் திரும்பவும் பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றியே வழிபடத்தக்க பெருமை வாய்ந்தது. பின்னப்படும் பகுதியை வெள்ளி முதலிய லோகங்களால் விரவித் தொடர்ந்து பூசிக்கலாம். (2)

மரங்கள் இயற்கையின் சீற்றத்தால் முறிந்து அடிப்பாகம் இருக்க, அவை மண்ணோடு மண்ணாகக் கலந்து பலநூறாயிரமாண்டு கழிந்தபின் கல்லாய் விளைந்துவிடுகின்றது; எந்த வடிவில் இருந்ததோ அவ்வாறே அது விளைகின்றது. இங்ஙனம் விளைந்தது அப்படியே சிவலிங்கமாகிவிடுகின்றது. காட்டை அழிக்கும் போதோ கிழங்கு தோண்டும் போதோ இத்தகைய சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. காட்டுக்கு மேய்ச்சலுக்குப் போன பசுமாடு மரத்தடியில் பால் சொரிந்தது என்றும் அங்குப் போய்ப் பார்த்ததும் சிவலிங்கம் இருந்தது என்றும் கிழங்கு தோண்டப் போனவன், தோண்டும் போது இரத்தம் பெருகச் சிவலிங்கத்தைக் கண்டான் என்றும் கதைகள் தோன்றுவதற்கு மரங்கள் கல்லாக மாறியமையே அடிப்படையாகும்.

மதுரையை அழகு செய்து வீற்றிருக்கும் சுந்தரரான சிவலிங்கப் பெருமான், மரமே லிங்கமாக விளைந்த பெருமானாவார். கடம்ப மரத்தின் அடிப்பகுதி இலிங்கமாகியிருக்க வேண்டும். ஒன்பது நகரக்கோயிலுள் ஒன்றான இலுப்பைக்குடிச் சிவபெருமான் பெயரே தான் தோன்றியீசுவரர்; இவர் சுயம்பு மூர்த்தி இப்பெருமான் இருப்பை மரத்தின் விளைவாவர். ஒன்பது நகரக் கோயிலில் இலுப்பைக்குடி தான்தோன்றியீசுவரரே சுயம்பு மூர்த்தியாகக் காட்சி தருகின்றார். கண்டனூர் புதுவயலுக்குப் பக்கத்திலுள்ள சாக்கோட்டை வீரசேகர மூர்த்தி வீரை மரத்தின் முதிர்ச்சியால் விளைந்த சுயம்பு லிங்கம். வேடன் கிழங்கு தோண்டும் போது குருதி வரலைக்கண்டு, இம்மூர்த்தியைக் கண்டான் என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தலபுராணத்தில் உரைக்கின்றார்.

கருவறைச்சுற்றாலையும் மரங்களும்

இராங்கியத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தூர்வாசபுரம் (துறுமா) ஸ்ரீகபால பைரவர் கோயிலின் மூலமூர்த்தியான திருப்பாதாளேச்சுவரர் என்னும் சிவபெருமான் தானே தோன்றிய மூர்த்தியாவார். நாள் தோறும் இவ்வழியாகப் பால் கொண்டு சென்ற இடையன், இந்த லிங்கம் இருக்குமிடத்தில் தடுக்கிவிழுவதும் பால் முழுவதும் கொட்டிப் போவதுமாக இருந்தது. இதனால் அவன் ஒருநாள் மண்வெட்டியுடன் வந்து தன்னைத்தடுத்தைப் பெயர்க்க அதனைப் பெயர்க்க முடியவில்லை; முழுமையாக அகழ்ந்த போது சிவலிங்கத்தைக் கண்டான்; பின் கோயில் உருவானது. இம்மாதிரியான செவிவழிச் செய்திகள், மரமே சுயம்புலிங்கங்கள் ஆன வரலாற்றை உணர்த்தும் நாட்டுப்புறக் கதைகளாகும்.

நெல்லிமரக்காடாக இருந்த இப்பகுதியில் நெல்லிமரமே பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து சிவலிங்கமாக உருவாகியிருக்கிறது. இக்கருவறையின் கிழக்குப்பக்கம் முழுமையும் இடையறவுபடாது பழங்கால முதல் இன்று வரை நெல்லி மரம் வளர்ந்திருக்கிறது. இந்த நெல்லி மரங்களை யாரும் கொண்டு வந்து நடுவதோ விதை பாவி முளைக்கவைப்பதோ கிடையாது. எக்காலத்தோ ஒடிய வேரிலிருந்து இன்றும் அவை வளர்ந்து வருகின்றன. இதுபோல வாழைமரம் சிவலிங்கமான கோயில் கருவறையைச் சுற்றி வாழை மரங்கள் நிறைந்துள்ளன.

கட்டப்பொம்மனைப் புதுக்கோட்டை அரசு சிறைப்படுத்திய ஊர் திருக்களம்பூர் (திருக்குரம்பூர்). இது வேந்தன்பட்டியிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவினது. இங்குள்ள கதலிவனேசுவரர் திருக்கோயில் மிக்க மேன்மையுடையது. ஈண்டு குரம்பிலிருந்த (வரப்பு) வாழைமரம், மேற்பகுதி முறிந்துபோக அடிப்பகுதி கல்லாகிக் சிவலிங்கமாகக் காட்சி தருகின்றது. இந்த லிங்கத்தைப் பார்த்தால், இது வாழைத்தண்டு கல்லாக விளைந்த வகையை உணர முடியும். இந்த லிங்கத்தின் சுற்றுப்பகுதி முழுமையும் வாழைப்பட்டை போலக் கனமாகக் காணப்படும்; நடுப்பகுதி தண்டைப் போலத் தோன்றும். சிவலிங்கத்தின் உச்சி வழவழப்பாகப் பிற சிவலிங்கங்களில் இருப்பதுபோல இருக்காது. இச்சிவலிங்கம் சிறிது சிறிதாகச் சிதைவது கருதிச் சிவலிங்கத்தைச் சுற்றிச் செப்புப்பட்டை பிடித்திருக்கிறார்கள். மேற்பகுதி வழவழப்பாக இன்மையாலும் சிதைந்திருப்பதாலும் ஊர்ப்பெயர் திருக்குளம்பூர் (குதிரையின் கால் குளம்பு) என்பதாலும், இச்சிவலிங்கம் மன்னனுடைய குதிரைக்குளம்பு பட்டுச் சிதைந்து வடுப்பட்டிருக்கிறது என்று கதை சொல்லப்படுகிறது.

இத்திருக்கோயில் திருச்சுற்றை நோக்கினால் வாழை மரமே லிங்கமாய் விளைந்திருக்கிறது என்பதைக் காட்டிவிடும். இக்கோயில் கருவறையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் வாழை மரங்கள் நெருக்கமாகச் செழித்திருக்கின்றன. காலங்காலமாக ஒன்றிலிருந்து ஒன்றாய் ஓரிடத்திலேயே, இவை வளர்வதால், இலையும் காயும் சிறுத்தும் மரமும் மெலிந்துள்ளன; ஆயினும் அதன் இயற்கை இயல்பு மாறவில்லை. இராமலிங்க வள்ளலார் 'வாழையடி வாழை' என்று சொல்லுவதன் மெய்ம்மையை மெய்ப்பித்துக் காட்டும் சான்று, இக்கோயில் திருச்சுற்றில் வளர்ந்திருக்கும் வாழை இனமேயாகும். இவ்வண்ணம், மரங்களே சிவலிங்கங்களாய் மாற்றம் பெற்றுச் சுயம்பு மூர்த்தியாகியிருக்கின்றன. துவார் வள்ளிலிங்கமும் துலங்குடி நகர் (கத்தப்பட்டு) சிவலிங்கமும் சுயம்பு மூர்த்தியே. இவை இரண்டும் மரங்களே சிவலிங்கமாக மாற்றம் பெற்றவை.

புற்றுமண் சிவலிங்கம்

மலையிலமைந்த சிவலிங்கம், மரத்தால் உருவான சிவலிங்கம் என்ற இரண்டு வகையினவே இந்த வட்டாரப் பகுதியில் காணப்படுகின்றன. புற்றாக மண்ணில் வளர்ந்த சிவலிங்கங்களும் உண்டு. திருவாரூரில் 'புற்றிடங் கொண்டார்' என்னும் வன்மீகநாதர் சுயம்புலிங்கமாய் அருளுகிறார். திருநாவுக்கரசர்

> *"புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்*
> *தொண்டராம் புண்ணியமே"* (3)

என்று போற்றுவர். தேவர்கள் அமைத்த புற்றில் இறைவன் எழுந்தருளியதை

"நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற நெடுந்துணைப்
பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானை கடுகச் சென்று அடைவேன்" (4)

என்றுணர்த்துகின்றார். புற்றைச் சிவலிங்கமாக வணங்குகின்ற பண்டை வழக்கம் இதனால் வெளிப்படும். இத்தகைய இலிங்கத்திற்கு உலோகத்தினாலான கவசமிட்டுவிடுவர். இப்பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டுவது இல்லை; ஆவுடையாருக்குச் செய்வதுமுண்டு. புனுகு சட்டம், சாம்பிராணித்தைலம் ஆகியன சாத்தப்பெறும். மண்ணலான பிருதிவிலிங்கம் செட்டிநாட்டுப் பகுதியில் கிடையாது.

சிவலிங்க இலட்சணங்கள்

சுயம்பு லிங்கங்களுக்குச் சிரோ வர்த்தனம், லட்சணோத்தரம் முதலியன அமைக்கப்படுவதில்லை; சுயம்பு லிங்கத்தில், சிவபெருமான் எல்லாக் காலத்திலும் சாந்நியத்தமுடன் விளங்குவார். மலையிலமையும் சிவலிங்கத்திற்கு அதிலேயே ஆவுடையாரும் வடிக்கப்படும். இத்தகைய வடிவங்களில் பூஜா பாகமாகிய ருத்ர பாகமே வடிக்கப்பட்டிருக்கும்; பிரம்மபாகம், விஷ்ணுபாகம் என்பன தனியே செதுக்கப்படுவதில்லை. மரத்தில் விளைந்த சிவலிங்கத்திற்குப் பொருத்தமாக ஆவுடையார் கல்லில் வடித்துப் பொருத்தப்பெறும். சில இடங்களில் இரண்டாக அமைத்து ஒன்றாக்கியிருக்கின்றனர்; வேறுசில இடங்களில் ஒரே கல்லில் அமைத்திருக்கின்றனர்.

இடப்பெயர்ச்சியான இலிங்கங்கள்

ஆகமசிற்ப இலக்கணங்களுக்குத்தக்கவாறு சிரோ வர்த்தனம், பிரம்ம சூத்திரம் வாய்ந்ததாய்ச் சிற்பிகளால் அமைக்கப் பெறும் இலிங்கம் மானுஷலிங்கம். இதனைக் கிரியா

லிங்கம் என்றும் இயம்புவர். இத்தகைய இலிங்கங்களும் செட்டிநாட்டில் உள்ளன. நகரத்தார்கள் தக்க சிற்பிகளைக் கொண்டு தேவையான தெய்வத் திருமேனிகளை உருவாக்கிக் கொள்வர். எனினும் புதிய சிவலிங்கங்களைக் காட்டிலும் வழிபாட்டிலிருந்த சிவலிங்கங்களையே திருக்கோயிலில் அமைக்க அவர்கள் விழைந்தனர். சிவலிங்கங்களை வேறு இடங்களிலிருந்து கொண்டுவந்து தங்கள் கோயில்களில் நகரத்தார்கள் பிரதிட்டை செய்தனர். கீழச்சிவல்பட்டி ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலுள்ள சிவலிங்கம் திருப்புத்தூருக்குள்ளடங்கிய தெம்மாப்பட்டுப் பகுதியில் இருந்தது இது தொடர்பாகச் 'சங்கஞ் செடியில் சாய்ந்திருந்த சொக்கலிங்கம், சிவப்பட்டி மந்தையில் வந்து செல்வம் பொழியுறாரே' என்று நாட்டுப்புறப் பாடல் வழங்குகிறது. இந்த லிங்கத்தைக் கீழச்சிவல்பட்டிக் கொண்டு வந்தமை தொடர்பாகச் சிவகங்கையில் வழக்கு நடைபெற்றதாகவும் தெரிகிறது. உ சிறுவயலிலுள்ள சிவலிங்கம், அவ்வூரின் வெண்ணாண்டார் ஊருணிக்கரையிலிருந்து கொண்டு வரப்பட்டது. வெண்ணாண்டார் என்ற பெயரே அயிராவதேசுவரர் என்று மாற்றம் பெற்று வழங்குகிறது. இன்றும் இப்பெயரே இறைவன் பெயராக உள்ளது.

வரலாற்றுப் புகழ்பெற்ற கொடும்பாளூர் கோனாட்டின் கொடி நகரம்; இங்கு நூற்றெட்டுச் சிவன் கோயில்கள் இருந்தன. இக்காலத்து அவற்றில் பல அழிந்துவிட்டன. செட்டிநாட்டு ஊர்களைச் செல்வம் கொழிக்க வைக்கும் சில சிவலிங்கம் இங்கிருந்து கொண்டு வரப்பட்டவை. கொடும்பாளூரிலிருந்த ஐந்து கோயில்களில் நடுக்கோயிலிலிருந்த இலிங்கம் வேந்தன் பட்டியில் சொக்கலிங்க மூர்த்தியாகவும் முதற்கண்ணிருந்த சிவலிங்கம் புதுப்பட்டியில் பூலோக நாதராகவும் கடைசிக்

கோடியிலிருந்த லிங்கம் தெக்கூரில் சுந்தரேசராகவும் பெயர் பெற்றெழுந்தருளிப் பேரருள் புரிகின்றனர். வேந்தன்பட்டிச் சிவன் கோயிலுக்குச் சிவலிங்கம் கி.பி. 1907இல் புதுக்கோட்டைத் தனியரசின் இசைவுடன் கொண்டு வரப்பட்டது. இம்மூன்று சிவன் கோயிலுக்கும் பொதுவாகக் கொடும்பாளூரிலிருந்து இருந்த நந்தி, வேந்தன்பட்டி கொண்டுவரப்பெற்று இங்கு நெய் நந்தீசுவரராகக் காட்சி தருகின்றார். வயிரவன்பட்டி மாளிகைக் காட்டுச் சிவலிங்கம் செட்டி நாட்டுச் சிவன் கோயிலில் வீற்றிருக்கிறது. நகரத்தார்கள், வேற்றூர்களிலோ காடுகளிலோ வழிபாடின்றிக் கிடக்கும் சிவலிங்கங்களைத் தாங்கள் கோயில் கட்டும்போது கொண்டு வந்து வைத்துத் திருப்பணி செய்வர்: இதுவிரைவாக நிறைவேற வாய்ப்பாகும். வலையபட்டிச்சிவன் கோயிலிலுள்ள சிவலிங்கம், அவ்வூருக்கருகேயுள்ள பிடாரம் பட்டியில் மூங்கில் புதருக்குள் கிடந்து கொண்டுவரப்பட்டது. தேவகோட்டை நகரச்சிவன் கோயில் பெருமான், திருவாடானை மணிகண்டி அருகேயிருந்தும் காரைக்குடிச் சிவலிங்கம் காட்டுச்சிவன் கோயிலிலிருந்தும் அரிமளம் சிவலிங்கம் அவ்வூர்க்கு அருகேயுள்ள மேட்டிலிருந்தும் கொண்டுவரப் பெற்றவர்கள்.

காசிவிசுவநாதர் - விசாலாட்சி

காசிக்குச் சென்றவர்கள் தங்களுடன் வழிபாட்டுக்குச் சிவலிங்கத்தைக் கொண்டு வருவர். இந்த லிங்கத்துடன் அம்மையையும் சேர்த்துப் பரிவார தெய்வமாகக் காசிவிசுவநாதர், விசாலாட்சி என்று பிரதிட்டை செய்வர். ஆனால் நச்சாந்துபட்டி மெ.ப.பழநியப்பசெட்டியார் கி.பி. 1883 ஆம் ஆண்டு காசியிலிருந்து கொ்ண்டு வந்த சிவலிங்கத்தை இவ்வூரின் மூலமூர்த்தியாக நிறுவியுள்ளார்கள். இங்குத்தான் காசிலிங்கம் சிவன் கோயிலில்

மூலமூர்த்தியாகத் திகழ்கிறது. எழுவங்கோட்டைச் சிவன் கோயிலிலும் மூலமூர்த்தி காசிலிங்கமே. இந்த இலிங்கம் பரிவார தெய்வமாகும் போது சிவன் கோயில் கருவறையின் மேற்கே அண்ணாமலையாருக்கு எதிரே கருவறை அமைக்கப்பெறுகிறது.

இடப்பெயர்ச்சி ஏன்?

> "ஆகம சிற்ப இலக்கணங் களுக்கிணங்க அளவிட்டுச் சிரோவர்த்தனம், பிரம்ம சூத்திரம் வாய்ந்ததாய்ச் சிற்பிகளால் செய்யப்படும் இலிங்கம் மானுஷலிங்கம் எனப்படும். இதுவே கிரியாலிங்கம்". (5)

மானுஷலிங்கம் எழுந்தருளிய சிவன் கோயில்கள் பல; இவ்வகை லிங்கங்களில் பல வகை உண்டு. இவற்றைக் கல்லிலே உளிகொண்டு செதுக்கும்போது உளியின் ஓசை வெளியே கேட்காதிருக்க வேண்டும்; அதற்காக அந்த இடத்தைச் சுற்றிலும் வாத்திய இசையை எழுப்பி அதில் உளியின் ஒலி மூழ்கிவிடுமாறு செய்தல் தமிழகத்திருக்கோயில் நடைமுறை. சிவலிங்கம் அடித்து முடியும்வரை வேதபாராயணமும் அன்னதானமும் இடைவிடாது நடத்தல் வேண்டும். இத்தகைய நியமங்களால் பொருட் செலவும் கால நீட்டிப்புமுள்ள பணியாக இருந்ததால் தான் நகரத்தார்கள் சிவலிங்கத்தைச் செதுக்காது வேற்றிடங்களிலிலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

பாணலிங்கம்

நருமதை முதலிய புண்ணிய ஆறுகளிலிருந்து பெறப்படும் லிங்கம் பாணலிங்கம். பாணம் = தண்ணீர்; இவ்வகை இலிங்கம் தண்ணீரிலிருந்து கிட்டியது என்பது கருத்து.

> "புராணங்கள் பாணாசுரன் வழிபட்டது பாணலிங்கம் என்று கூறும். இது சிறிது நீண்டுருண்ட வடிவமுடையது. இதன் நடுப்பகுதி பருத்தும் அடிப்பகுதியும் தலைப்பகுதியும் சிறுத்தும் வழவழப்பாக இருக்கும். தேன் நிறமும் குளிர்ச்சியும் கொண்டு விளங்கும்" **(6)**

பாணலிங்கங்கள், செட்டி நாட்டுச் சிவன் கோயில்களில் மூலஸ்தானத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப்பகுதியிலுள்ள சிவன் கோயில்களில் திருப்புத்தூரையும் கொடுங்குன்றத்தையும் (பிரான்மலை) சமயகுரவர் பாடியிருக்கின்றனர். பிற கோயில்களை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பீமகவிராயர், சேந்தங்குடி நடராச கவிராயர் போன்றோர் பாடியுள்ளனர். எனினும் இந்தப்பகுதியுள்ளது போலத் தனிச்சிறப்புடைய சுயம்பு லிங்கங்களைப் பிற இடங்களில் காண முடியாது. இந்தச் சிவபெருமான் அனைவரும் கிழக்கு நோக்கியவர்கள். சொக்கநாதபுரம் சிவன் கோயில் பெருமான் வைத்தீசுவரன் கோயில் பெருமான் போல மேற்கு நோக்கியவர். இப்பெருமான்களனைவரும் செட்டிநாட்டுக்குத் தெய்வ நலமும், செல்வ நலமும், மனநலமும் தந்து காலங்காலமாக அருளாளுகின்றனர்.

மேற்கோள் விளக்கம்

1. கா. கைலாசநாதக் குருக்கள் (1963) - சைவத்திருக்கோவிற் கிரியை நெறி, சுன்னாகம், இலங்கை. ப. 116)

2. மேலது - ப. 120

3. ப. இராமநாதபிள்ளை (பதி: 1970) - பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு சென்னை ப. 312.

4. மயிலை இளமுருகனார் (ஆ. இ) - தேவாரம் அடங்கன்முறை இரண்டாம் பாகம், சென்னை ப. 6520

5. வை.கணபதிஸ்தபதி (1978) - சிற்பச் செந்நூல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை - 25. ப. 163

3. அருட்பெருஞ் செயலால் நல்கும் வயிரவனை அடைந்து வாழ்வாம்

பெயராட்சி நலம்:

சிவன் கோயிலில் இடம் பெறுகின்ற பரிவார தெய்வங்களில் குறிக்கத்தக்கவர் வயிரவமூர்த்தியாவார். வயிரவர் என்ற சொல்லைப் வைரவர் என்றும் பைரவர் பயிரவர் என்றும் எழுதுவர். வயிரவப் பெருமானை வடுகதேவர் என்றும் பிரும்ம சிரச்சேத மூர்த்தி என்றும் சேத்திர பாலகர் என்றும் பல பெயர்களால் கொண்டாடுவர். சிவாம்சமாகத் திகழும் வயிரவர் உலகெலாம் நிறைந்திருக்கிறார். அவர் நாய் வாகனத்தில் எழுந்தருளியிருப்பதால் வடுக நாதன் ஆவார், பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எடுத்தமையால் பிரும்மசிரத்சேத மூர்த்தி எனப்படுவார். புண்ணிய தீரங்களையும் தவச் சாலைகளையும் ஊர்களையும் காக்கின்ற காவல் தெய்வம் ஆதலால் சேத்திர பாலகர் ஆகவிளங்குகிறார். ஒவ்வொரு திருக்கோயிலிலும் வீற்றிருக்கும் வயிரவர், அந்தந்தத் திருக்கோயிலைக் காவல் செய்பவராவார். திருக்கோயிலில் நாள் தோறும் பூசைகள் தொடங்கும் முன்னரும் இரவு அருத்தசாமத்தில் பூசை நிறைவுறும் போதும் வயிரவருக்குப் பூசைகள் செய்தல் வேண்டும்.

வயிரவரும் இலக்கியமும் :

திருமந்திரம் வயிரவரைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. திருநாவுக்கரசர் திருச்சேறைப் பதிகத்தில்

'விரிந்த பல்கதிர் கொள்சூலம் வெடிபடு
தமருகங்கை தரித்தோர் கோலகால பயிரவனை'

என்று சுட்டுவர். பிங்கல நிகண்டோ வயிரவரின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது. அந்நூல் கூறும் பெயர்களாவன கஞ்சுகன், மூவிலை வேலோன், காரி, முத்தன், கேத்திர பாலன், நிருவாணி, சித்தன், ஞாளி யூர்தி, கபாலி, வடுகன் (1) என்பனவாகும். வயிரவருடைய ஊர்தியையும் கருவியையும்

'வைரவ னூர்தி ஞமலிசூ லம்படை' (2)

என்று இயம்புகிறது. இந்நூல் ஒரு கையிலுள்ள கருவியையே கூறியிருக்கிறது. வயிரவரைப் பற்றி இந்நூலால் வேறு செய்திகளை அறிந்து கொள்ள முடியவில்லை.

உருவ அமைதி

வயிரவரின் மூர்த்தங்களில் எட்டு வகையான மூர்த்தங்கள் தனிமையும் சீர்மையுமுடையன. இந்த எட்டிலிருந்து ஒவ்வொன்றிலும் எட்டெட்டுருவாகி அறுபத்து நான்கு (அஷ்டாஷ்ட) மூர்த்தங்கள் கொள்ளப்படுகின்றன. தலைமையுடைய எட்டு வகை அஷ்டமூர்த்தங்கள்

1) அசிதாங்க வயிரவர்
2) உருவயிரவர்
3) சண்ட வயிரவர்
4) குரோதன வயிரவர்
5) உன்மத்த வயிரவர்
6) கபால வயிர்வர்
7) பீஷண வயிரவர்
8) சம்ஹார வயிரவர்

ஆகமங்களும் சிற்ப சாத்திரங்களும் சொல்லும் இலக்கணப்படி அமைந்த வயிரவ மூர்த்தங்களே கோயில்களில் மிகுதி; அந்த அளவு எண்ணிக்கையில், வேறுபட்ட பல வயிரவ மூர்த்தங்கள் திருக்கோயில்களில் காணப்படுகின்றன. தெய்வங்களின் திருவுருவ அமைதியை விவரிக்கின்ற நூல்கள், வெவ்வேறு வடிவங்களை ஒரே பெயராலும் ஒரே வடிவத்தை வெவ்வேறு

பெயராலும் விளக்குகின்றன. அவற்றிடையே ஒரொழுங்கு இல்லை. பொது ஒழுங்குகளை அடிப்படையாக்கிக் கொண்டு சிற்பிகள் தங்களுடைய கொள்கைக்கும் மனக்கருத்துக்கும் தக்கவாறு தெய்வ வடிவங்களை உருவாக்கியிருக்கின்றனர். இங்ஙனம் தெய்வங்களின் / வயிரவரின் உருவ அமைதிகளை இறுக்கமான வரையறையாக வகைப்படுத்தி இலக்கணம் வகுக்கும் போது புறனடை விதிகளும் வகுக்க வேண்டியுள்ளது.

வயிரவர் க்ருவறை அமைப்பும் மாறுதலும்

சிவன் கோயில்களில், அம்மை கருவறையை அடுத்துப் பள்ளியறையிருக்கும். பள்ளியறை தெற்கு நோக்கி அமையும். அதனை அடுத்துத்தனியே கருவறையில் வயிரவர் வீற்றிருப்பர். இந்த அமைப்பே பெரும்பான்மையான கோயில்களில் காணப்படுகிறது. இதற்கு மாறாகப் பிற இடங்களிலும் வயிரவருக்குக் கருவறை நிறுவியுள்ளனர். இரண்டாவது கோபுர வாயிலில் வயிரவர் இருக்க வேண்டும் என்பது விதி. தேவகோட்டை, பட்டமங்கலம், பேரையூர்ச் சிவன் கோயில்களில் இந்த அமைப்பைப் பார்க்க முடியும். சேத்திரபாலகன் வாயில் படியருகே இருந்தால் கோயிலைத் தன் கண்காணிப்பிலேயே வைத்து நன்கு காவல் செய்ய முடியும் என்பது கருத்து. பள்ளியறையை அடுத்திருக்கும் வயிரவர் இறைவன் இறைவியருக்குக் காவலனாக அமைகின்றார். இவர்கள் தெற்கு நோக்கியவர்கள்.

அம்மைக்குரிய இடத்தில் வயிரவர்

இளையாத்தக்குடி நித்திய கல்யாணி உடனாய கைலாயநாதர் திருக்கோயிலில், வயிரவர், சிவபெருமான் முன்மண்டபத்தை அடுத்துக் கருவறையிலிருக்கிறார். அம்மை

இருக்க வேண்டிய இடத்தில் வயிரவர்க்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே அமைப்பை வயிரவன் பட்டி வயிரவன் கோயிலிலும் காணமுடிகிறது. இக்கருவறைகளும் தெற்கு நோக்கியவை. நேமம் ஜெயங்கொண்ட சோழீசுவரர் திருக்கோயிலில் வயிரவர், சுவாமி சந்நிதிக்கு இடப்புறம் மேற்கு நோக்கிய வண்ணம் உள்ளார். இராயவரம் வெ.மு. சிவன் கோயிலிலும் திருப்புத்தூர் திருத்தளி நாதர் கோயிலிலும் சாக்கை வீரசேகர சுவாமி கோயிலிலும் இதே மாதிரியான அமைப்புக் காணப்படுகிறது. (3) பெரிச்சி கோயில் வயிரவரும் மேற்கு நோக்கியவரே, பூர்வ காரணாகமம்

> *'வயிரவரின் தளி மேற்கு நோக்கிய வாயில் மிக விரும்பத்தக்கது; தெற்கு நோக்கிய வாயிலை அதற் கடுத்ததாயும் கிழக்கு நோக்கிய வாயிலை இன்றியமையாத நிலை யிலும் (கடைசி)'*

கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இக்கோயில் மரபு செட்டி நாட்டில் நன்கு பின்பற்றப்பட்டிருக்கிறது. மேற்கு நோக்கிய வயிரவரை வணங்கினால் நோய் நீக்கம் கிடைக்கிறது. செட்டிநாட்டில் கிழக்கு நோக்கி வயிரவர் அமைக்கப்படவில்லை.

இருப்பிடம் - புறனடை

திருக்கோயில் அமைப்பில் வயிரவருக்கும் வயிரவி (பைரவி)க்கும் ஈசான திசையையே வகுத்திருக்கின்றனர். சிவாகமங்கள் 'முதலாவது கோபுரவாயிலில் விநாயகரையும் இரண்டாவது கோபுரவாயிலில் வயிரவரையும் மூன்றாவது கோபுரவாயிலில் இரண்டு துவார பாலகர்களையும் சிவபெருமான் எழுந்தருளிய கருவறை வாயிற்படியின் இரண்டு பக்கங்களிலும்

விநாயகரையும் கந்தரையும் பிரதிட்டை செய்ய வேண்டும் (4) என்றுரைக்கின்றன. இந்த வழக்கத்துக்கு மாறாகவும் செட்டி நாட்டுக் கோயில்களில் வயிரவர் கருவறைகள் உள்ளன. எல்லாக் கோயில்களிலும் வயிரவர்க்குத் தனியே கருவறை அமைத்திருப்பது செட்டிநாட்டுச் சிறப்பு.

திருமெய்யம் கோட்டையிலுள்ள வயிரவர் வடக்கு நோக்கிக் கோட்டைச் சுவர்க் கோட்டத்தில் நிறுவப்பட்டுள்ளார். இஃது இவருக்குரிய இடமன்று; ஆனால் காவல் தெய்வம் என்ற கோட்பாட்டில் இங்கு நிறுவப்பட்டிருக்கிறார். (5)

வயிரவரும் வாகனமும்

வயிரவரின் உருவ அமைதியை விவரிக்கும் நூல்கள் அனைத்திலும், சில வயிரவர்க்கு வாகனம் சொல்லப்படவில்லை; சில வயிரவர்களுக்கு அன்னம், காளை, மயில், கருடன், குதிரை, யானை, சிம்மம் என்ற உயிரினங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. வடுக பைரவருக்குச் சுவாநம் (நாய்) வாகனமாகக் கூறப்பட்டிருக்கிறது. பரார்த்த பூஜா விதியில், க்ஷேத்திரபாலகரின் இன்னொரு வகையான வடிவில் 'சுவாநம்' ஊர்தியாகச் சுட்டப்பட்டிருக்கிறது. சாரஸ்வதிய சித்ரகா்ம சாத்திரத்தில், எட்டுக் கைகள் உள்ள மகா பைரவருக்குச் சுவாநம் வாகனமாகப் பேசப்பட்டிருக்கிறது. மல்லாரி சிவத்தியானத்தில் மல்லாரி சிவனுக்குக் குதிரை வாகனமும் அவர் ஏழு வேட்டை நாய்கள் சூழச் சிவந்த நிறத்துடன் விளங்குவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வடுக பைரவர், சேத்திர பாலகர், மகா பைரவர் என்ற மூன்றுக்கும் சுவாநம் வாகனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு எல்லாம் ஒரு நாயே கூறப்பட்டுள்ளது. இந்த வடிவை

அமைக்கும் போது நாயின் தலை இடப்புறமாகவோ வலப்புறமாகவோ மாறி மாறி அமைகின்ற பேதமுள்ளது. செட்டிநாட்டிலுள்ள சிவன் கோயில்களில் ஒரு நாய் உள்ள வயிரவர் போல இரண்டு நாய்களை வாகனமாகக் கொண்ட வயிரவர் வடிவங்களுமுள்ளன. வயிரவரின் இருபுறமும் இரண்டு சுவாநங்களின் தலைகள் இருக்கின்றன. மாத்தூர், சாக்கோட்டை, (புது வயலருகிலுள்ளது) கோட்டையூர், வேலங்குடி ஆகிய ஊர்ச்சிவன் கோயில்களில் இரட்டை சுவாநங்களுடன் வயிரவர் வடிவம் வடிக்கப்பட்டிருக்கிறது. திருமெய்யம் அருகிலுள்ள இளஞ்சாவூர் முத்துமாரியம்மன் கோயிலில் பாண்டியர் கால வயிரவரை (எங்கிருந்தோ கொண்டுவந்து) நிறுவியுள்ளனர். இது மிக அழகிய பெரிய வடிவம். ஆமூர், கொத்தபுள்ளி திருப்பாசேத்திக் கோயில்களிலும் இரட்டை சுவாநத்துடன் வயிரவர் வடிவமுள்ளது.

இரண்டு நாய் ஏன்?

ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் சொல்லப்படாத உருவ அமைதியைச் செட்டிநாட்டுக் கோயில்களில் காணமுடிகிறது. இவை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செதுக்கியவை அல்ல; நகரத்தார்கள் அமைத்த வயிரவர் வடிவங்களில் ஒரு சுவாநமே உள்ளது. இவ்வாறு இரட்டை சுவாநம் அமைப்பது ஒரு காலகட்டத்தை சார்ந்ததாகவோ ஒரு வட்டாரச் சார்பாகவோ ஏற்பட்டிருக்க வேண்டும்.

வீட்டுக்காவல், ஊர்காவல் போன்ற எல்லாக் காவல் பணிகளிலும் வேட்டை நாய்களைப் பயன்படுத்துவது இயற்கை, விலங்குகளில் காவல்காரன் என்று போற்றும் பெருமை பெற்றது நாயே! நாடு காவலர், ஆட்டுக்கிடை வைத்திருப்போர், நாய்களைக் காவலுக்கு வைத்திருக்கின்றனர்.

காவல்துறையினரும் நாய்களைத் தங்கள் பணிக்குப் பயன்படுத்துவதும் நோக்கத்தக்கது. வயிரவருடைய காப்பாற்றும் ஆற்றலை மிகுத்துக்காட்ட வயிரவருக்கு இரண்டு சுவாநங்கள் அமைக்கப்பட்டனவாதல் வேண்டும். இது வயிரவரைக் காவல் தெய்வம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த வாகனம் அடிப்படையும் பழமையுமுடையதாகும். (6)

வேறுவேறான உருவங்கள்

கண்டர மாணிக்கத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிறு பெருச்சியூர் சிவன்கோயில் மிகத் தொன்மையான கோயில். இங்குத் தனியே சுற்றாலையில் - மேற்கு நோக்கியவாறு கையில் கபாலத்தை ஏந்திய வண்ணம் வயிரவர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இது நவபாஷாணக் கல்லில் உருவான வடிவம் (7). இந்த மாதிரி வடிவம் வேறெங்கும் இல்லை. இவ்வடிவம் சளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது என்றும் இது பிச்சாடனர் வடிவை நினைவுறுத்துகிறது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். இராசேந்திர சோழன் ஒரிசாவிலிருந்து கொண்டு வந்ததும் சிவப்பு நிறக்கல்லில் வடிக்கப்பட்டதுமான பைரவர், பைரவி சிற்பம் கங்கை கொண்ட சோழேச்சுரத் திருக்கோயிலில் அமைக்கப் பட்டிருக்கிறது. இதனைப் போலச் சளுக்கிய நாட்டிலிருந்து பெரிச்சி கோயில் வயிரவரும் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

இவ்வயிரவரின் இடக்கையில் பிரம்மாவின் குருதி சொட்டும் தலையிருக்கிறது; கீழே நிற்கின்ற சுவாநம் அத்தலையிலிருந்து சொட்டும் குருதியை நக்கிய வண்ணம் நிற்கிறது. இவ்வயிரவர் வடிவத்துடன் பல்வேறுருவங்களும், ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இது தனியாகவும் விரிவாகவும் ஆராய்தற்குரிய வடிவம். வயிரவர் ஒரு காலை

நன்றாக ஊன்றி மற்றொரு காலைச் சிறிதே மடக்கி உடலை வளைத்து நிற்கிறார். இக்கோலம் வைஷ்ணவம் எனப்படும். இதனை ஸ்தித குஞ்சிதம் என்றும் இயம்புவர். இம்மூர்த்தியின் கையிலிருந்த வாள் ஒடிந்துவிட்டது; அதனைச் செம்பால் அமைத்துள்ளனர். மிகவரதரான இந்த வயிரவர், காணக்கிடைக்காத வடிவினர்.

யோக பைரவர்

திருநாவுக்கரசர் பாடிய திருப்பத்தூர் செட்டிநாட்டுப் பாடல் பெற்ற தலம்; இங்கு வயிரவருக்குத் தனிக்கருவறை மேற்கு நோக்கியுள்ளது. இந்த வயிரவரின் வடிவம் சிறுபெரிச்சியூர்க் கோயில் வடிவம் போல வேறுபட்ட தனித்தன்மையுடைய வடிவம்; இவ்வடிவத்தை 'யோக பைரவர்' என்று கூறுகின்றனர். இவ்வயிரவரின் உருவ அமைதியை

"பைரவர் யோக மூர்த்தியாய் இரண்டு பாதங்களையும்
பிணைத்து முழந்தாளை ஒடுக்கிப்பாதங்கள் நிலத்
திற் பதியாது உடம்புள் அடங்க வைத்து, இருகோரைப்
பற்கள் விளங்கப்புன்னகையுடன் அமர்ந்துள்ளார்.
மார்பை முப்புரி நூலும் முத்துமாலையும் அலங்கரிக்க,
இடது கரத்தைத் தொடையில் வைத்து, வலக்கரத்தில்
அசனிதரித்து (அசனி இடி) பரியாங்க நிஷ்டையில்
மேற்கு நோக்கி அமர்ந்துள்ளார். சூலாயுதத்தையும்
ஏந்தியுள்ளார். இவருக்கு வாகனம் கிடையாது" (8)

என்று முனைவர் நா.வள்ளி விவரிக்கின்றார். இப்பெருமானுக்கு இரண்டு கைகள்; இரண்டு பாதங்களும் படுக்கையாகக் கிடக்கின்றன; கணுக்கால் ஒன்றின் மீது இன்னொன்றாக உள்ளது. தலையிலுள்ள மகுடமும் வித்தியாசமான அமைப்பினது.

இங்கும் வயிரவருக்கு உற்சவ விக்கிரகம் இருக்கிறது. ஒரு நாள் திருநாள் நிகழுகிறது.

திருவிழாவும் உற்சவரும்

செட்டிநாட்டில் பல இடங்களிலே வயிரவர் இடக்கையில் கபாலமே காணப்படும். கபாலத்தைப்பான பாத்திரம் என்பர். நான்கு கைகளும் சுவாலை மகுடமுமாக விளங்கும் வயிரவரே செட்டிநாட்டில் மிகுதி. கந்த சஷ்டி விழாப்போலச் செட்டிநாட்டில் வயிரவர் சம்பா சூரனை அழிக்கின்ற சம்பாசஷ்டி விழாக் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவில் வயிரவர் எழுந்தருளிச்சம்பாசுரனை அழிப்பார். தூர்வாசபுரத்தில் இன்றும் சம்பாசஷ்டி விழா நிகழுகின்றது. இதற்கென அமைந்த உற்சவர் மிகுந்த அழகுடையவர்.

தூர்வாசபுரம் வயிரவமூர்த்தி, சதுர பீடதிலமைந்த பத்ம பீடத்தில் நிற்கிறார்; சமபாத ஸ்தானமாக நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்; தலை மீது சுவாலாகேசம்; பின் வலக்கை உடுக்கையில் பின்னிய பாம்பும் முன் வலக்கையில் திரிசூலமும் பின் இடக்கையில் நாகபாசமும், முன் இடக்கையில் பிரமகபாலமும் காணப்படுகின்றன. கால்களிலும் கைகளிலும் காப்புகளுள; கழுத்தில் உருத்திராக்கமணி திகழ்கிறது. இடுப்பில் உதரபந்தம்; அதற்குக் கீழே பாம்பு பிணைக்கப்பட்டுள்ளது. மணிக்கோவையும் நாய் வாகனமும் அழகானவை. இவருக்குரிய திருவாசியில் இருபது சுடர்கள் உள்ளன. சம்பாசஷ்டி நடப்பதால் வயிரவரின் உற்சவர் திருமேனி, பஞ்சலோகத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இது மிக அழகிய வடிவம். இவரைக் கால பைரவர் என்று நிருவாகம் கூறுகிறது.

சித்திரைத் திங்கள் பரணி நட்சத்திரத்தன்றோ முதல் வெள்ளிக் கிழமையன்றோ வயிரவருக்குச் சயந்தன் பூசை சிறப்பாக நடைபெறுகிறது. இப்பூசை திருப்புத்தூர், கொடுங்குன்றம், திருமெய்யம், ஆகிய இடங்களில் மிக விரிவாக நிகழ்கிறது.

கொடுங்குன்ற வயிரவரழகு

வயிரவன் பட்டியிலும் சம்பாசஷ்டியே நடக்கிறது. கொடுங்குன்றம் எனும் பிரான்மலை வயிரவர் வழிபாட்டில் சிறப்புப் பெற்றது. இவர் நின்ற கோலம்; நான்கு கைகள்; வலக்கைகளில் சூலமும் உடுக்கையும் விளங்க இடக்கைகளில் நாகபாசமும் கபாலமும் காணப்படுகின்றன. மிகப் பெரிய வடிவம்; இவருக்குத் தனியே சூலமும் வாளும் இருப்பது சிறப்பு. இவ்வட்டாரத்திலுள்ள மக்களுக்கு இவர் குல தெய்வமாவார்.

கோயிலில் பரிவார தெய்வமாதல்

வயிரவர் கபாலம், சூலம், கத்தி போன்ற கொடூர ஆயுதங்களை ஏந்தியும் அக்னி மகுடம் சூடியும் கோரைப்பற்களாகவும் இருப்பதால் இவருக்கு அனைவரும் அஞ்சுவர். திருத்தலத்துக்கும் திருக்கோயிலுக்கும் காவல் தெய்வமான இவர் செட்டி நாட்டில் சில சிறுதெய்வக் கோயில்களில் (காளி, அய்யனார்) பரிவார தெய்வமாக வணங்கப்படுகிறார். இவருக்கு உயிர்ப்பலி இடுவதில்லை. ஆராவயல் செல்லய்யனார் கோயில், பாகனேரி புல் வாநாயகி கோயில், கீழக்கோட்டை ஆதன மிளகி அய்யனார் கோயில், இளஞ்சாவூர் முத்து மாரியம்மன் கோயில் ஆகியவற்றில் தனிக்கருவறையுடன் வயிரவர் விளங்குகிறார். சிவாம்சமான வீரபத்திரர் இடம் பெறுவதற்கு ஈடாக வயிரவர் இடம்

பெறுகின்றார். அய்யனார் கோயிலைக்கும்பிடும் வயிரவன் கோயில் நகரத்தார்கள் இந்த வயிரவரை வணங்குகின்றனர்; கொடுங்குன்றம் வயிரவர் அந்த வட்டாரத்திலுள்ள முத்தரையர்களின் குலதெய்வமாக விளங்குகிறார்.

முனியையாவும் காளியும்

நகரத்தார்கள் எல்லாத் தெய்வங்களையும் வழிபடுவதில் ஆர்வமுடையவர்கள்; கொடூர தெய்வங்களாயின அவற்றுக்குப் பெரிதும் அஞ்சுவர். சிவன் கோயிலில் வயிரவர் சந்நிதிக்கு நேர் எதிரே இரண்டாம் திருச்சுற்றில் பலிபீடம் அமைத்து 'முனியையா' என்று ஒரு தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். இங்கு உருவச்சிலை இருக்காது. வயிரவருக்குரிய கதை (சுக்குமாந்தடி = சுக்குச் சுக்காய், துண்டு துண்டாய் ஆக்கும் தடி) அப்பீடத்தருகே இருக்கும். இத்தெய்வத்தை 'முனியையா' என்பர். மாத்தூர், கீழச்சிவல்பட்டிச் சிவன் கோயில்களில் முனியையாவுக்குத் தனிச் சந்நிதி உள்ளது. சிவபெருமானுடைய மக்களில் ஒருவரான வயிரவர், சிறு தெய்வமான முனியையா என்ற பெயருடன் சிவன் கோயில்களிலும் இடம் பெற்று விட்டார்.

நேமம் செயங்கொண்ட சோழீசுவரர் திருக்கோயிலில் வயிரவர் சந்நிதிக்கு நேர் எதிரே மூன்றாம் திருச்சுற்றிலுள்ள பலிபீடம் 'முனியையா' பீடமாகல் வேண்டும். ஆனால் இதனை நேமங்காளி என்று பெண் தெய்வமாகக் கொண்டு விட்டனர்; இப்பெண் தெய்வம் ஆற்றல் மிக்கதாகும்.

வழிபாட்டுப் பயன்

வயிரவரை வழிபடு தெய்வமாகக் கொண்டு வணங்குதற்கு நெஞ்சுரம் மிகுதியாக வேண்டும். காவல் தெய்வமான வயிரவர் செட்டிநாட்டில் நோய் போக்கிக்காக்கும்

தெய்வமாவார். குழந்தைப் பேறு வேண்டும் கணவன் - மனைவியர் ஆறு தேய்பிறை அட்டமியில் வயிரவருக்குச் சிவப்பு அரளியினால் வயிரவ சகஸ்ரநாம அருச்சனை செய்தால் மக்கட் பேறு கிட்டும். வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் வில்வத்தாலோ மணப்பூக்களாலோ (மல்லிகைப் பூ வயிரவர்க்கு ஆகாது) சகஸ்ரநாம அருச்சனை செய்தால் வறுமை அழியும், செல்வம் பெருகும். வயிரவர் சந்நிதியில் மிளகைத் துணியில் கட்டி அகல் விளக்கில் வைத்து நல்லெண்ணெய் தீபம் போட்டு அருச்சனை செய்யின் இழந்த பொருளும் சொத்துகளும் கிடைக்கும். சூரியன் மகனாகிய சனீசுவரன் தன்னுடைய அண்ணன் எமதர்மனால் புறக்கணிக்கப்பட்டு மதிப்புக்குறைந்தார். அவர் தாய் சாயாதேவி அறிவுரைப்படி வயிரவரை வணங்கி அவர் அருளால் நவக்கிரகப் பதவி பெற்றார். இவ்வாறு பைரவர் சனீசுவரனுக்குக் குருவாக விளங்கி அருள்பாலிக்கிறார். ஏழைரைச் சனி, அஷ்டமச் சனிகளால் இடர்ப்படுவோர் சனிக்கிழமைகளில் சகஸ்ரநாம அருச்சனை செய்தால் சனிக்கிரக உபாதைகள் நீங்கி நலம் பெருகும். ஞாயிற்றுக்கிழமைகளில் ராகு காலத்தில் வயிரவருக்கு உருத்திராபிஷேகமோ விபூதி அபிஷேகமோ செய்து வடைமாலை சாற்றிச் சகஸ்ரநாம அருச்சனை செய்து வழிபட்டால் திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் விரைவில் நடக்கும். (10)

வயிரவசகஸ்ரநாமத்தை ஒன்பது முறை வயிரவருக்கு அருச்சனை செய்து தயிர் அன்னப்பாவாடை, தேங்காய், தேன் படைத்து வழிபட்டால் வழக்கில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். மந்திரப்பிரயோகத்தில் ஏற்படும் தொல்லைகள் அடியோடு நீங்கும். இவ்வாறு நூல்களும் சான்றோர்களும் கூறுவது அறியத்தக்கது.

வயிரவர் வழிபாட்டில் வயிரவருடைய பொருள்களைத் தொடர்பின்றி எடுத்துக் கொண்டாலோ பயன்படுத்தினாலோ நோய் வரும் என்ற அச்சம் மக்களிடையே காணப்படுகிறது. வயிரவர் திருக்கோயில்களிலுள்ள பொருளை எடுத்துக் கொண்டு வந்தாலும் தின்றாலும் உடல் எல்லாம் வெள்ளை (தோல் நிறமாற்றம்) நோய் வருமென்று அஞ்சுகிறார்கள். இராங்கியத்துக்கு அருகேயுள்ள துறுமாவில் 'கபால பைரவர்' உள்ளார். இக்கோயிலில் திரியும் காக்கை, எலி போன்றவற்றின் வாயெல்லாம் வெண்மையாக இருக்கும். திருக்கோயில் சிவாச்சாரியார் இசைவின்றித் திருநீறோ சிவப்போ எடுத்து இட்டுக் கொண்டால் அந்த இடம் மட்டும் வெள்ளையாகிவிடும். இதுபோலப் புதுக்கோட்டை மன்னருக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டதாகக் கதை வழங்குகிறது. இதனால் இங்குத் திருநீறு மட்டுமே வழங்குகிறார்கள். திருக்குளம்பூர் கதலிவனேசுவரர் திருக்கோயிலுக்கும் இதுபோன்ற அற்புதம் வழங்குகிறது.

சிறு பெருச்சியூர் வயிரவர்க்குப் படைக்கும் உணவு எதனையும் எவரும் உண்பதில்லை. அதை உண்டால் வெண்குட்டம் வரும் என்று மக்கள் நம்புகின்றனர். இந்நோயுள்ளவர்கள் இந்த உணவை உண்டால் நோய் நீங்கிவிடும் என்பர். ஊரைக் காக்கும் வயிரவர் உடலைக் காக்கும் வயிரவராகவும் திகழ்கிறார்.

அருள் நலம் மிக்க வயிரவர்

செட்டிநாட்டிலுள்ள வயிரவர்கள் அனைவரும் அருளாற்றல் மிக்கவர். மாத்தூர், வயிரவன்பட்டி, இலுப்பக்குடி, தூர்வாசபுரம் ஆகிய ஊர்களிலுள்ள வயிரவர்கள் நினைத்ததை நடத்தித் தருபவர்கள். ஆத்தங்குடியிலுள்ள வயிரவர், காணாமல் போன பொருட்களை மீட்டுத் தருவதில் வல்லவர். எப்பொருளையாவது

இழந்துவிட்டால் வயிரவருக்குச் சாம்பிராணி வாங்கிப் போடுவதாக வேண்டிக் கொண்டால் அப்பொருள் உடனே கிடைத்துவிடும். திருடு போனவற்றைக் காவலர் கண்டுபிடித்துத் தருவது போல இந்த வயிரவர் அருள்புரிந்து அடியாரைக் காக்கின்றார். ஆபத்துக் காலத்தில் நம் துயர் தீர்க்க இப்பெருமானை வேண்டிட இவர் அடியார் துயர் தொலைத்து அருளி அருளாட்சி செய்த கோலமே ஆபதோத்தாரண மூர்த்தியாவார். வயிரவரின் தெய்வநலத்தால் திருக்கோயில்கள் அடியார்க்கு அருளுகின்ற அருளாலயங்களாக ஒளி வீசுகின்றன.

வயிரவர் கவசம்

விரைநறை உருக்கும் கமலமென் பொகுட்டு
மேவரும் எனைஎடுத் தாண்ட
களைகணே! ஆவித் துணைவனே! சருமக்
கலிங்கனே! பிரமனே! இருகால்
வளைதரு பினாக பாணியே! உனக்கு
நெய்அவி மடுத்துநல் ஓமம்
உளைவறப் புரிகேம் உலப்(பு)அறும் வாழ்நாள்
உதவிமற்(று) எந்தமைக் காக்க (1)

கரைபொரு(து) இரங்கி வெண்டிரை சுருட்டும்
கருங்கடல் புடைஉடுத்(து) அகன்ற
தரையொடு விசும்பின் நள்ளிடைப் போந்த
தழல்நிறச் சுடர்எறி காந்திக்
குறைபுனல் மோலிக் குழகனே! தறுகண்
கொடுஞ்சினக் கடுந்தொழிற் பகட்டு
விரைசெலற் கூற்றின் அடுதிறல் பாச
மிடலறத் துணிந்(து)எமைக் காக்க (2)

உலகெலாம் விரியும் ஆதிகா லத்தின்
ஒருவனே ஆகிநின்(று) உள்ளாய்!
பலதிறப் புவன நாயகர் தம்மைப்
பாற்படப் பயந்தளித்(து) அருள்வாய்!
மலர்தலை உலகம் மீளவந்(து) ஒடுங்க
மன்னிவீற் றிருந்தருள் முதலே!
அலகிலா அருளான் நெய்அவி மிசைந்(து)ஈண்டு
ஆயுளை அளித்(து)எமைக் காக்க (3)

சிறுவிதி மகவாய் முன்வரும் பிராட்டி
அம்பிகை சீர்இலக் குமிகோ
மறுவறும் அகில காரணி மலையான்
மகள்எனப் பெயரிய தலைவி
நறுமலர்க் கடுக்கைத் தொடையல்எம் பெருமான்
நலங்கெழு சத்தியே வினைமாசு
அறுமுறை இருதாள் வழிபடு கின்றோம்
ஆயுளை அளித்(து)எமைக் காக்க (4)

- சிவஞான முனிவர் காஞ்சிப் புராணம்

சான்றெண் விளக்கம்

1. பிங்கல முனிவர் (1968) - **பிங்கலந்தை என்னும் பிங்கலநிகண்டு** சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் சென்னை. நூற்பா எண்.115

2. மேலது நூற்பா எண் 116.

3. இன்னும் சில கோயில்களிலும் இதனைக் காணமுடிகின்றது.

4. சி. சுவாமிநாத குருக்கள் (பதி 1977) - ஆகமவசன பூஷணம் அர்ச்சகர் சங்கம், சென்னை. ப. 7.

5. இந்த வயிரவர் வேறெங்கோ இருந்து இங்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

6. ஆதிகால மனிதன் உழுது விதை விதைத்து உண்ணக்கற்றுக் கொள்ளுவதற்கு முன்னாலேயே நாயை வளர்த்துத் தனக்கு உதவியாக் வேட்டையாடப் பழக்கி வைத்திருந்தான்; நாய்க்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற்பட்டது.

7. இது ஒரே கல்லில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கல்லின் வேறு சிறப்புகளைக் கருவறைக்குள் சென்று ஆராய முடியவில்லை. பழநி முருகனைப் போல இவரைப் பாஷாண வடிவம் என்று எளிதாகக் கூறமுடியாது.

8. திருமதி வள்ளி சொக்கலிங்கம் (1981) - திருப்பத்தூர் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை 28. ப. 265 - 266.

9. வயிரவரைச் சிவபெருமான் திருமகனாகக் கொள்ளுகின்றனர். சிவமைந்தன் முருகனைப் போல வயிரவரும் சம்பாசூரனைச் சங்காரம் செய்கின்றான்; புதுக்கோட்டை சமஸ்தானச் சிவன் கோயில்கள் பலவற்றில் இவ்விழா நிகழ்கிறது.

10. எஸ்.நாராயணசுவாமி (1996) - பைரவர், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை ப. 234

4. மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராங்குணமிக்கார்

தெய்வத் திருப்பணியாளர்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தமிழ் இலக்கியங்களையும் சிற்பம், ஓவியம், இசை, நடனம் போன்ற பல்வேறு கலைகளையும் வளர்த்தன. திருக்கோயில்களைக் கட்டுவதிலும் அதனைப் புதுப்பிப்பதிலும் பெருமன்னர்களும் குறுநிலத் தலைவர்களும் செல்வர்களும் மக்களும் ஈடுபட்டனர். தமிழகத்தில் மன்னராட்சி மறைந்த பின்னர் திருக்கோயில் திருப்பணியில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் ஈடுபட்டனர். இவர்கள் தெய்வநம்பிக்கையும் சமயப்பற்றும் திருமுறையிடத்தும் திருக்கோயிலிடத்தும் ஈடுபாடும் உடையவர்கள். இவர்கள் தொழில் செய்யும் போது தங்கள் தொழிலில் தெய்வங்களுக்கு ஒருபங்கு வைத்துச் செல்வத்தை ஈட்டி அதனைத் திருக்கோயில் பணி செய்தனர்.

திருப்பணிக்கு வாய்ப்பேற்படல்

நகரத்தார்கள் திருப்பணி செய்தற்காகக் கோயில்களைத் தேர்ந்தெடுத்த வகை ஆராய்ச்சிக்குரியது.

1. செல்வம் பெருக்கித் திருக்கோயில் திருப்பணி செய்ய வேண்டும் என்று நகரத்தார்க்குத் தோன்றியபோது அவர்கள் சமயகுரவர் பாடல் பாடிய திருத்தலங்களையே தேர்ந்தெடுத்தனர். நகரத்தார்களின் திருத்தலப்பயண மனப்பான்மை இம்மனப்போக்குக்கு வித்திட்டது.

2. தங்கள் ஊரை விடுத்து வேற்றூரில் போய் வணிகம் செய்தனர். அங்கு வாழ்ந்த போது கோயிலுக்கு நாள் தோறும் சென்று வழிபட்டு அங்குள்ள இறைவன் இறைவியரிடம் ஈடுபட்டனர். அதனால் அக்கோயிலைத் திருப்பணி செய்யமுற்பட்டனர்.

3. நகரத்தார்கள் அருளாளர்களைக் கண்டு வணங்கி நிற்கும் போது, அவர்கள் சிலதிருத்தலங்களைத் திருப்பணி செய்திடத் தூண்டினர். தவத்திரு கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் போன்ற சான்றோர்கள் இத்தகைய தூண்டுதலைச் செய்தனர்.

4. நகரத்தார்கள் வாழ்க்கைக்குத் துணை நின்று உயிர்காத்தமையால் தனி ஈடுபாட்டுடன் அவர்கள் அக்கோயில் திருப்பணியை மேற்கொண்டனர். இந்நான்கு அடிப்படையில் தோன்றிய கோயில்கள் அனைத்தும் நகரத்தார்கள் வாழ்ந்த செட்டிநாட்டு எல்லையைத் தாண்டியவை.

உள்ளூர்த் திருப்பணி

செட்டிநாட்டு எல்லைக்குள் உள்ள கோயில்களில் விநாயகர் கோயிலையே நகரத்தார்கள் மிகுதியாகக் கட்டியிருக்கின்றனர். தனிக்குடும்பத்தினரோ பங்காளிகளோ கோயில்களை உருவாக்கியுள்ளனர். கி.பி. 1840க்குப் பின் செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தார்கள் கட்டிய கோயில்களனைத்தும் புதிதாக எழுந்தவை. இவர்கள் சிவமதம் சிவகோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்ற கருத்தால் சிவ வழிபாட்டில் ஈடுபட்டுச் சிவன் கோயில்களை எடுப்பித்தனர். அவர்கள் வாழ்ந்த ஊரிலோ மிக அருகிலுள்ள ஊரிலோ சிவன்

கோயில் இருந்தால் அதைச் சீர் செய்து செப்பனிட்டனர். கண்ட தேவிச்சிவன் கோயிலை வணங்கிய தேவகோட்டை நகரத்தார்களும் நெடுங்காலம் உள்ளூரில் சிவன் கோயிலைக் கட்டவில்லை. பின்னாளில் கும்பிட்டு வந்த கோயிலில் கருத்து வேறுபாடு எழவும் தங்கள் ஊரிலும் தங்களுக்கெனத் தனியே சிவன் கோயில் கட்டிக்கொண்டனர்.

நித்திய வழிபாடு

தெளிவாகவும் திருத்தமாகவும் திட்டமிட்டும் திருக்கோயில் எழுப்பிய நகரத்தார்கள், சிவாச்சாரியரொடும் ஸ்தபதிகளொடும் பழகிக் கோயிற் கலை பற்றி நன்கு அறிந்து கொண்டனர். எக்காலத்தும் சிவனடி மறவாச்சிந்தையராய் நெற்றிநிறைய நீறுபூசி உருத்திராக்கம் பூண்டு மெய்யடியராய் வாழ்ந்தனர். திருப்பணியை மேற்கொண்ட நகரத்தார், கோயிலருகே இருந்து கண்ணும் கருத்துமாய்த் திருப்பணியை நடத்தினர். அவர்களுடைய தெய்வப் பற்று எந்நாளும் எப்போதும் சிவசிந்தையாகச் சிவனைச் சதா சேவையாகக் கண்டு வணங்கத் தூண்டியது. அதனால் சிற்பிகளும் ஸ்தபதிகளும் திருப்பணிச் செல்வரின் விருப்பக்கடவுளுக்கு முன்னே அடக்க ஒடுக்கமாகக் கூப்பிய கைகளுடன் தெய்வத்தை வணங்கி நிற்குமாறு திருப்பணிச் செல்வர்க்குச் சிலை வடித்தனர்.

சதா சேவை

எப்போதும் இறைவனைக் கைகூப்பி வணங்கிய தோற்றத்தில் திருப்பணியாளர்களின் உருவச்சிலையைத் தெய்வத் திருமுன்னர் நின்ற கோலத்தில் செதுக்கிவைத்தனர். எக்காலத்தும் இறைவனைக் கைகூப்பி வணங்கிய தோற்றத்தில் இறைவன் திரு முன்னர்ச் செதுக்கிவைத்தனர். இந்த அமைப்பிலுள்ள

சிலைகளைச் 'சதா சேவை' என்பர். இதனைச் 'சதா சேர்வை' என்று கல்வெட்டுகள் கழறுகின்றன. இதற்கு 'நித்திய ஊழியம்' என்று பொருள். இறைவனுக்குத் தினமும் தொண்டு செய்வதாகக் கருத்து. இதனை 'உருக்கல்' என்றும் 'உருக்கால்' என்றும் மொழிகுவர். இத்தொடர் 'உருவாக்கியகல்' என்றும் 'உருவம் அமைந்த தூண்' என்றும் பொருள்தரும். மண்டபக்காலில் (தூணில்) மக்கள் வடிவத்தை அமைத்திருப்பதால் உருவையுடைய கால் என்ற பொருளில் இத்தொடர் அமைந்திருக்கிறது. கற்றூணில் உருவத்துக்குக் கீழே பெயருடன் 'சதா சேவை' என்று பொறிக்கப்பட்டிருப்பதுமுண்டு.

திருக்கோயில் வழிபாட்டு மேன்மை

திருக்கோயில் திருப்பணியில் ஆர்வம் கொண்ட நகரத்தார்கள் தாம் விரும்பி வழிபடும் தெய்வத்தை வணங்கி அங்கேயே தங்கினர். இதற்கெனத்தனியே விடுதியமைத்தனர். நாள் தோறும் திருக்கோயில் சென்று வழிபட்டு இறைவன் திருக்காட்சியிலேயே தம் பொழுதைக் கழித்தனர். திருக்கோயில் வளாகத்தில் தங்கியிருப்பது முண்டு. கோயில் திருப்பணியை ஆகம நெறிப்படி, கண்ணுங்கருத்துமாக மேற்கொண்டனர். சிவபெருமானிடத்தும் அம்மையிடத்தும் ஈடுபாடு கொண்ட இவர்கள் எப்போதும் தெய்வ வழிபாடு செய்து கொண்டிருந்தனர். சிவபெருமானையும் உமையம்மையையும் எக்காலத்தும் வணங்கவேண்டும் என்றும் அவர்கள் திருவுருவைக்காணும் காட்சியே பிறவிப் பயன் என்றும் நகரத்தார்கள் கருதினர்.

"கண்ணுதலா வயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகும் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்

பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழல்நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை"

என்னும் பிரமோத்தரகாண்டப்பாடல் வழிபாடே மக்கள் கடமை என்பதை நிறுவுகிறது. திருக்கோயில் வழிபாட்டின் மேன்மையை இப்பாடல் உணர்த்துகிறது.

வழிபடும் சிற்ப வரலாறு

திருக்கோயிலுடன் தொடர்புடைய அடியார்களின் உருவைத் திருக்கோயிலில் வடிக்கின்ற வழக்கம் பல்லவர் காலத்திலேயே காணப்படுகிறது. மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராகர் கோயிலில் சிம்ம விஷ்ணு, மகேந்திரவருமன் ஆகிய இருவர் உருவங்கள் உள்ளன. ஆனால் இவை இறைவனைத் தொழுமாறு கூப்பியகைகளுடன் அமைக்கப்படவில்லை. பிற்காலச் சோழராட்சியில் செப்புத்திருமேனியாக மன்னர் உருவங்கள் வார்க்கப்பட்டன. ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் திருக்கோயிலில் அமைத்த முயற்சியே, பிற்காலத்தில் அடியார்களையும் திருப்பணியாளர்களையும் திருக்கோயிலில் அமைக்க வழிவகுத்தது. இதனை அடியொற்றி இறைவன் மீது முழு ஈடுபாட்டுடன் அன்பு செலுத்தியவர்களும் திருப்பணி செய்தவர்களுமான திருப்பணிச் செல்வர்களின் உருக்கால் திருக்கோயிலிலும் இடம் பெறலாயிற்று.

இத்தகைய உருக்கல் சிலைகளை அமைக்கும் வழக்கம் விசய நகர மன்னர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் பெரு வழக்கினது. மதுரை மீனாட்சியம்மன் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில் போன்ற கோயில்களில் இத்தகைய உருவக்கற்கள்

காணப்படுகின்றன. கிருஷ்ண தேவராயர், திருமலை நாயக்கர் உருவங்கள் குறிக்கத்தக்கன. இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயிலில் விசுவநாத நாயக்கர், கிருஷ்ணம நாயக்கர், சேதுபதிகள் ஆகியோரின் உருவச் சிலைகள் தொழுதவண்ணமுள்ளன. உருக்கல்லாக அமைந்த எல்லாச் சிலைகளும் மண்டபத்தூண்களை ஒட்டியே செதுக்கப்பட்டுள்ளன. இச்சிலைகளில் கூப்பிய கைகள் நெஞ்சுக்கு நேராகவே செதுக்கப்பட்டிருக்கின்றன.

நகரத்தார் சதாசேவை

திருப்பணி செய்தவர்கள் மன்னர்களாயின் அவர்தம் உருவத்தூண், கோயிலில் அமைவதிலோ அமைப்பதிலோ எவ்வகைத் தடையுமில்லை. மன்னரல்லாதார் திருப்பணி செய்யின் அவர்தம் உருக்கல் அமைவதில் போட்டிகளும் பொறாமையும் தடையும் எழுவது இயற்கை ஆகலின் இடம் சூழல், பொருள் ஆகியவற்றை உணர்ந்தே உருக்கல் அமைக்க வேண்டும். பாடல் பெற்ற திருக்கோயில்கள் பலவற்றை நகரத்தார்கள் திருப்பணி செய்திருக்கின்றனர். அவ்வாறு திருப்பணி செய்த போது சில கோயில்களில்தான் 'சதா சேவை'ச் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மயிலாடுதுறை சிவன் கோயிலிலுள்ள அம்மை கருவறைக்கு முன்னர் மூன்று சதா சேவைச் சிற்பங்கள் உள்ளன. அவற்றின் கீழ்ப் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள்

(1) அள. வீர. வீரப்பசெட்டியார் அவர்கள் குமாரர் அள. வீர. பெத்தபெருமாள் செட்டியார் அவர்கள்

(2) பெத்தபெருமாள் செட்டியார் அவர்கள் குமாரர் திருப்பணி கட்டிய றெட்டியம் பாடி ஜெமின்தார் அள. வீர. பெ. வீரப்பசெட்டியார் அவர்கள்

(3) திருப்பணி கட்டிய அள. வீர. பெ. வீரப்பசெட்டியார் அவர்கள் பாரியால் உண்ணாமலை ஆச்சி அவர்கள்

இம்மூன்று கல்வெட்டிலும் இவர்கள் எவ்வூர் நகரத்தார்கள் என்று பொறிக்கப்படவில்லை. இவர்கள் தேவகோட்டையைச் சேர்ந்தவர்கள். திருப்பணி செய்த பெரியவர், அவர் மகனும் மருமகளும் என மூவரின் உருவங்கள் உருக்காலாக அமைக்கப்பட்டுள்ளன. நகரத்தார்கள் திருக்கோயில் பணி செய்யும் போது கோயிலை முழுமையாகப் பிரித்துவிட்டே புதிதாகத் திருப்பணி செய்வர். சில நேரங்களில், தெய்வங்களின் வலிமையால் கருவறைகளைப் பிரிக்காமல் வைத்துக்கொள்ளுவதுமுண்டு. முழுத்திருப்பணி நடைபெறும் போது திருக்கோயிலில் உருக்கால் அமைக்கலாயினர். பழுதுபார்த்துத் திருப்பணி செய்தால், சதா சேவை உருக்கால்கள் எழுப்பப்படவில்லை. மயிலாடுதுறையில் கணவன் - மனைவி இருவருக்கும் உருக்கால் அமைத்திருக்கும் சிறப்பு நோக்கத்தக்கது.

உருக்கால்களை அமைக்கும் போது நகரத்தார்கள் ஆண்களுக்கே அமைத்திருக்கின்றனர். பெண்களுக்கு மிகமிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உருக்கால்கள் காணப்படுகின்றன. வேகுப்பட்டிச் சிவகாமியம்மன் உடனாய சிவலோகநாதர் திருமுன்னர் எதிரெதிரே இரண்டு சதாசேவைச் சிற்பங்கள் உள்ளன. இவை சி.ராம. ராமஞ்செட்டியார், சி.ராம.நாகம்மை ஆச்சி. இவை பிற்காலத்தியத் திருப்பணி. வேறிடங்களில் நகரத்தார் ஆச்சிகளுக்கு உருக்கால் இல்லை.

சதா சேவை - நெறிமுறை

சதா சேவைச் சிற்பம் அல்லது உருக்காலை அமைப்பதில் சில நெறி முறைகள் பின்பற்றப் பட்டிருப்பதைக் காணமுடிகிறது. உருவங்கள் அனைத்தும் சிவபெருமான், அம்மை, கணபதி, முருகன் என்று தெய்வங்களின் சந்நிதியில் தூண்களை (கால்களை) ஒட்டியே நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் சில புடைப்புச் சிற்பங்கள் ஒரு வகை; இன்னொரு வகை முழு உருவைச் செதுக்கித்தூணொடு இணைந்திருப்பது போல வடித்தவை. புடைப்புச் சிற்பத்தில் அரைப்பகுதியே முன்பகுதியே தெரியும். தனிக்கல்லில் சதா சேவை உருவை முழுமையாக வடிப்பது மற்றொரு வகைச் சிற்ப வேலை. ஒற்றைக்கல்லில் கோயிலைச் செதுக்கியது போல இவை அமைந்திருக்கின்றன. இராயவரம் வெ.மு. சிவன் கோயிலிலுள்ள வேலன் செட்டியார், முத்துக்கறுப்பன் செட்டியார் சதாசேவைச் சிற்பங்கள் அத்தகையன. அவை காணத்தக்க கவினுடையன. உயிரோடு நிற்பதுபோல அழகொடுருவாக்கப்பட்டுள்ளன. சாக்கோட்டை உமையாம்பிகை சந்நிதியில் தனி உருவாகத் தேவகோட்டைச் செட்டியாரின் சதாசேவை இருக்கிறது. இவையெல்லாம் தனியே மனிதன் ஒருவன் இறைவன் முன்னர் நின்று தெயவத்தை வணங்குவது போலவே செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த சதா சேவைச் சிற்பங்களைப் போல வேறிடங்களில் காணமுடியாது; காணப்படவில்லை. இவை தூண்களைச் சார்ந்தோ சுவரைச் சார்ந்தோ அமைந்தில. இவற்றை உருவாக்கிய சிற்பி மிக நுணுக்கமாகக் கால் கை நரம்புகள் தெரியவும் செட்டியாரின் முழுவடிவம் அமையவும் அமைத்திருக்கும் திறம் உன்னதமானது. இதனை அமைத்த சிற்பி பெயர் தெரியவில்லை; ஆயினும் அவன் திறமையைப் போற்றி வணங்குவோமாக.

வரிவடிவச் சேவை

மண்டபத் தூண் அல்லது மண்டபக் காலைச் சார்ந்தே சதாசேவைச் சிற்பங்கள் மிகுதி. சில கோயில்களில் எந்த வகையான உருவங்களையும் அமைக்காமல், சதாசேவை என்று கல்லில் வெட்டித் தம் இறையன்பைக் காட்டும் மரபும் உள்ளது. புதுவயல் அருகிலுள்ள கல்லாங்குடி வயிரவர் சந்நிதியில் இத்தகைய கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இறைவனை வழிபடுவதில் இஃதோர் தனிப்போக்காகும். உரு அமைக்க இடமின்மை கருதியும் காலச்செலவு பொருட் செலவு கருதியும் உருக்கால் அமைக்காது வரிவடிவில் தம் அன்பை வெளியிட்டிருக்கின்றனர். இவ்வாறு நகரத்தார்கள் சதாசேவையாக எழுத்தில் பொறித்தது இல்லை. பள்ளத்தூர் வல்லம்பர் மரபினரும் பிறரும் சொற்களில் தம் தெய்வ வழிபாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

குன்றக்குடி மலைமீது உற்சவர் திருமுன் சின்னமருது, பெரிய மருது ஆகிய இருவரும் தொழுத கைகளுடன் விளங்குகின்றனர். அம்மலையிலுள்ள இடும்பன் சந்நிதியில் செட்டியார் உருக்கால் உள்ளது; அவர்கருங்குளம் நகரத்தார்; அச்சிலைக்குக் கீழே கல்வெட்டும் காணப்படுகிறது. குன்றக்குடித் தோகையடிப்பிள்ளையார் முன்னர் காடன் செட்டியார் சிலை விளங்குகிறது. சேவினிப்பட்டி பிள்ளையார் கோயிலில் பாடுவார் முத்தப்ப செட்டியார் சிலை அருத்தமண்டபத்தூணில் நிறுவப்பட்டிருக்கிறது.

சதா சேவை - பட்டியல்

ஊர்	கோயில் இடம்	பிற
1. காரைக்குடி	சிவன்கோயிலூருணிக்கரை பிள்ளையார் கோயில்	செட்டியார் சிலை
2. காரைக்குடி	சிவன் - முருகன் சந்நிதி	செட்டியார் சிலை
3. கீழச்சிவல்பட்டி விநாயகர் சந்நிதி	சிவன் கோயில்	செட்டியார் சிலை
4. கீழச்சிவல்பட்டி முருகன் சந்நிதி	சிவன் கோயில்	செட்டியார் சிலை
5. வயிரவன்பட்டி	சிவன் - வயிரவர் சந்நிதி முன்	தெய்யினாஞ் செட்டியார்
6. வயிரவன்பட்டி	விநாயகர் சந்நிதி	சொக்கஞ் செட்டியார்
7. கண்டதேவி	சிவன்கோயில்	
8. வன்னியன் சூரக்குடி	சிவன் சந்நிதி	செட்டியார்
9. விரையாச்சிலை	சிவன்கோயில் முன் மண்டபம்	ஜமீன்தார் மரபினர் சிலைகள் பல
10. விரையாச்சிலை	அடைக்கலங்காத்த அம்மன் கோயில்	ஒயாமாரிப் பட்டர் சிலை
11. அமராவதிப் புதூர்ச் சாலை	விநாயகர் கோயில்	கல்லுப்பட்டிச் செட்டியார் சிலை
12. திருமெய்யம்	இராமர் கோயில்	காரைக்குடி மெ.ராமநாதன் செட்டியார்
13. வெண் ணெய்மலை	முருகன் சந்நிதி	முத்துக்கருப்பன் செட்டியார்

சில உருக்கால்களில் ஊர், பெயர் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன. திருமெய்யம் பெருமாள் கோயில் ஸ்ரீகிருஷ்ணன் சந்நிதிச் சதா சேவையில்

உ தயிலப்பன் சதா சேவை

என்று காணப்படுகிறது. எதிர்ப்புறமுள்ள தூணிலுள்ள எழுத்துத்தெரியவில்லை.

திருக்கொடுங்குன்றங்கோயிலில் நகரத்தார்களின் குருவானவரின் சதாசேவைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மன்னர்கள், ஆச்சாரியர்கள், நகரத்தார்கள், வல்லம்பர்கள், மறவர்கள், அகம்படியர்கள் போன்ற இனத்தார்களுடைய உருவச்சிலைகள் எல்லாம் திருக்கோயிலில் சதா சேவையாகக் காணப்படுகின்றன. எந்தக்கோயிலிலும் சுதைவடிவில் சதாசேவையாக நகரத்தார் உருவங்கள் அமைக்கப்படவில்லை. காளி கோயிலிலும் நகரத்தார்களின் சதாசேவைச் சிற்பங்கள் காணப்படில.

எப்போது அமைக்கப்பட்டது?

சதாசேவைச் சிற்பங்கள், திருப்பணியாளர்கள் உயிருடன் இருக்கும் போது உருவாக்கப்பெற்றனவா? உயிர் துறந்த பின் எழுப்பப் பெற்றனவா? என்பதை ஒருதலையாகத் துணிய முடியவில்லை. பாடுவார் முத்தப்பர், உமாபதி சிவம் (சங்கரன் கோயில்), மெ.அரு.நா.செட்டியார் (காளத்திக் கோயில்) சிலை ஆகியன அவர்கள் மறைவுக்குப் பின்னர் அமைக்கப்பட்டன. திருப்பணி நடக்கும்போது முன்னரே திட்டமிட்டுக் கட்டப்பட்டவை உமாபதி சிவம், முத்தப்பர் போன்றோரின் உருக்கால்கள்; காளத்தித் திருப்பணிச் செட்டியார், திருப்பணி நடைபெற்ற போது

இடையில் சிவபத முற்றார். திருப்பணி வேலைகள் செய்த சிற்பிகள் விரும்பி அவருடைய உருவைக் காளத்தி நாதர் முன் அமைத்தனர். இராயவரம் வெ.மு.கோயில் சதாச் சேவைச் சிற்பங்களில் முத்துக் கருப்பஞ்செட்டியார் சிற்பம் அவர் உயிர் வாழ்ந்த காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அண்மையில் காளத்தியிலுள்ள சதா சேவையை வெளிவாயிற்படிக்குப் பெயர்த்துக் கொண்டு வந்து வைத்திருக்கின்றனர். சிவப்பணியாளர், வாயிற்காவலராக்கப்பட்டு விட்டார்.

சிற்பம் அமைக்க நெறிமுறைகள்

சதாசேவைச் சிற்பங்கள் உரியவர்களைப் பார்த்தோ உரியவர் தோற்றத்தைப் பிறர் கூறக்கேட்டோ செதுக்கியிருக்க வேண்டும். சிற்பங்களில் நரம்போட்டங்களும் வயிற்று மடிப்புகளும் மார்பும் தெரியுமாறு சிற்பியர் வடிவமைத்திருக்கின்றனர். ஆடை, அணிகலன்கள் அக்காலத்தில் நகரத்தார்கள் அணியுமாறு சிற்பங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சிற்பங்களில் காணப்படும் தேஜஸ் மிக அற்புதமானது; ஒவ்வொரு சிற்பமும் வெவ்வேறான மனிதர்களைச் சித்திரிக்கிறது என்பதைக் காட்டுமாறு வடிவங்களிடையே வேறுபாடுகள் தோன்றுகின்றன. எல்லா வடிவங்களிலும் மூன்று கோடுகளாகத் திருநீற்றுப்பூச்சு - பெருமாள் கோயில் உருக்காலிலும் - ஒளிவீசுகிறது. காதில் குணுக்குக் கிடக்கின்றது. சில சிற்பங்களில் நூலாடை அமைக்கப்பட்டுள்ளது. சிலவற்றில் பட்டுவேட்டி என்று காட்ட திரள் திரளாகவும் மடிப்பு மடிப்பாகவும் வேட்டி உருவாக்கப்பட்டிருக்கிறது.

தந்தைக்கும் மகனுக்கும் ஒரே தெய்வச் சந்நிதியில் சதாசேவைச் சிற்பம் அமைக்கப்பட்டிருந்தால், தந்தை உருவம் தள்மட்டத்திலிருந்து மகன் உருவத்தள மட்டம் குறைந்திருக்கும். அண்ணனுக்கும் தம்பிக்கும் மன்னனுக்கும் மனைவிக்கும் மன்னனுக்கும் அமைச்சனுக்குமிடையே இவ்வாறுதான் வேறுபாடு காட்டப்படுகிறது. நகரத்தார் சிற்பங்களில் கை சுண்டு விரலில் மோதிரம் அணிந்திருப்பதையும் கழுத்தில் உருத்திராக்கம் இருப்பதையும் பார்க்கலாம். எல்லாச் சிற்பங்களிலும் தலையில் உருமா (தலைப் பாகை) கட்டாயம் வைக்கப்பட்டிருக்கிறது. வேட்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டியிருக்கினறனர்; சட்டை இல்லை.

நான்குவகை மரபு

ஸ்ரீ குமாரரியற்றிய சிற்பரத்தினம் ‘சாமுத்திரிக சாஸ்திரப்படி மானிடர்களுடைய பிம்பங்களை அமைத்துப்பார்க்க வேண்டும்’ என்று கூறுகிறது. மனிதர்களை மனிதனாகவே காட்ட வேண்டும். அவர்களைத் தெய்வமாகக் காட்டலாகாது, என்பது சிற்பசாத்திர முடிபு, அடியார்கள் அடைகின்ற மோட்சநிலையை அடிப்படையாகக் கொண்டு மானிட உருவங்களை அமைக்க வேண்டும் என்று சிற்பிகள் வகுத்திருக்கின்றனர். சாலோக்கியம் அடைந்தவர்கள் பக்தி, ஞானம், வைராக்கியமுடையவர்கள், இவர்கள் கடவுளுடன் ஓரிடத்தில் உறைகின்றவர்கள். இறைவனுலகில் அவர்தம் அடியார்களுடன் கலந்து இறைவன் மீது எப்போதும் அன்பு செலுத்தும். பேறுபெற்றவர்கள், இவர்கள் உருவை உத்தமநவ தாளத்திலமைக்க வேண்டும். சாமீப்யம் அடைந்தவர்கள் ஞானம், வைராக்கியம் மிக்கவர்கள். இவர்கள் கடவுளை அணுகியிருப்பவர்கள், இறைவன் அருகில் இருக்கும் தகுதி

படைத்தோர். இறைவனைப் பற்றிய மேலான ஞானமும் துறவுள்ளமும் கொண்ட அடியார்கள். இவர்கள் வடிவை அதமதசதாள அளவிலமைக்க வேண்டும். சாரூப்யம் அடைந்தவர்கள் உலகை மறந்து பரம்பொருளின் சகுண வடிவத்தின் மீது சிந்தனை வைத்து அவனது அடையாளங்களைத் தரித்திருப்போர். இவர்கள் கடவுளைப் போல வடிவம் பெற்றவர்கள். இவர்கள் உருவங்களை மத்திமதச தாளத்தில் அமைக்க வேண்டும். சாயுஜ்யம் அடைந்தவர்கள் சீவன்மாபரமான்வாவுடன் ஐக்கியமாகும் நிலையை அடைந்தவர்கள். நிர்குண பிரம்மத்தின் பிற்பட்ட சுத்த ஞானத்துடன் விளங்கும் அடியவர்கள். உலகெங்கும் பரவிக்கிடக்கும் இறைவன் படைப்புகளில் அவனை உணர்ந்து அதில் ஈடுபாடு முதிர்ந்து இறுதியில் அதிலேயே கலந்து விடும் நிலையினர். இப்பதம் பெற்றோர் வடிவங்களை உத்தம தசதாளத்தில் அமைக்கவேண்டும். (2)

இந்த அளவை அடிப்படையாகக் கொண்டு சதா சேவைச் சிற்பங்களைக் கணக்கிட்டால், நகரத்தார் வடிவங்கள் உருவான அடிப்படை புலனாகும். சதாசேவைச் சிற்பங்கள் உத்தம தசதாளத்திலேயே அமைக்கப்படுகின்றன; இதுமேலும் ஆராய்தற்குரியது.

தனிச்சிறப்புள்ள சதாசேவை

சதாசேவைச் சிற்பங்களில் தனிச்சிறப்புடையது காரைக்குடிக் கோயிலூர் திருநிலை உடனாய கொற்றவாளீசர் திருக்கோயிலிலுள்ள சிற்பம். இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்த கோயிலூர் ஆண்டவர் ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர் ஆவார். அப்பெரியார் திருநிலையம்மை இடத்துத் தனிப்பட்ட பக்தி உடையவர்; அன்னை திருநிலையும் ஆண்டவர் பால்

அளவிலா அன்புடையள். அதனால் ஆண்டவரின் சதாசேவை இங்கு நின்ற கோலமாக இல்லாமல் வேறு வகையாக அமைக்கப்பட்டிருக்கிறது. கோவிலூராண்டவர் தரையில் வீழ்ந்து இரண்டு கைகளையும் முன்னே நீட்டி இருகரம் கூப்பி அம்மையை வணங்குவதாகச் செதுக்கப்பட்டிருக்கிறார். இச்சிற்பம் குப்புறக்கிடக்கும் கிடந்த கோலமாகும். இச்சிற்பத்தில் ஆண்டவரின் முகமோ பிறவோ தெரியா. ஆண்டவரின் தோற்றம், முக தேஜஸ் ஆகியவற்றை அமைக்க அஞ்சியே இவ்வாறு சிற்பி வடித்திருக்கிறார். கோயிலூராண்டவர் மறைவுக்குப் பின்னரே இந்த வடிவம் வடிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சிற்பம் இதற்குமுன்னுமில்லை; பின்னுமில்லை. சதாசேவைச் சிற்பங்களில் இது தனி மதிப்புடையது. ஆண்டவர் திருநிலையம்மை மீது கொண்ட ஈடுபாட்டைக் காட்ட இவ்வாறு சதாசேவை வடிக்கப்பட்டிருக்கிறது.

வழிபடும் பழக்கம்

செட்டிநாட்டில் நகரத்தார்கள் அமைத்த கோயில்களில் காணப்படும் சதா சேவைச் சிலைகளுக்கு ஆடை அணிவித்து மாலையும் சூட்டி வணங்குகின்றனர். அவர்கள் பிறந்த நாளன்றும் ஆடை சூட்டி மாலை அணிவித்துக் கொண்டாடுகின்றனர். ஆனால் நாள் தோறும் நித்திய பூசையோ திருமஞ்சனமோ நடைபெறாது. அரியக்குடியில், சீனிவாசப் பெருமாள் முன்னர் நகரத்தார்களுக்கு மரியாதை செய்யும் போது முதல் பிரசாதம் அங்குள்ள செட்டியார் சதாசேவைக்கே தரப்படும். அதன் பின்னர்தான் மற்றவர்களுக்கு வழங்குவர். வயிரவன் பட்டியில் தெய்யினார் செட்டியார் சதாசேவைச் சிலைக்குச் சந்தனக்காப்புச் செய்கிறார்கள். இங்குத் தாயார் சந்நிதியிலுள்ள உருக்காலுக்கு இதுபோல மரியாதை தரப்படுவதில்லை.

பெருமாள் முன்னுள்ள சதாசேவைக்குத் தருவதுபோல வேறு எந்தக்கோயிலிலும் சதாசேவைக்கு இத்தகைய தனிச்சிறப்புத் தரப்படுவதில்லை. இச்சிற்பம் பெருமாள் திருக்கோயிலில் இருந்தாலும் இச்செட்டியார் மூன்று கீற்றாகத்திருநீறே பூசியிருக்கிறார், திருமண்காப்பில்லை. இவ்வாறு சதாசேவைச் சிற்பங்கள் அனைத்தும் திருப்பணிச் செல்வர்களின் சைவசமயப் பற்றையும் பண்பாட்டையும் தெய்வ நலத்தையும் காட்டுகின்றன.

சான்றெண் விளக்கம்

1. இப்பட்டியல் மிக நீளமானது; தனியே ஒளிப்படம் எடுத்து இதனை ஆராய்ந்தால் நகரத்தார்களின் தோற்றம், உயரம், உடலமைப்பு, நகை, உடை ஆகியவற்றைக் அறிய முடியும்.
2. வை. கணபதிஸ்தபதியின் சிற்பச் செந்நூலை அடிப்படையாகக் கொண்டது.

5. மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள

மக்கள் வாழ்வில் மாறிமாறி மயங்கி வருவது நோய்; நோயை அழித்து வெல்ல மனிதன் மருந்தை நாடியது போலக் கடவுளையும் நாடினான். மருந்து உண்டாலும் கடவுள் அருள் இருந்தால் தான் நோய் ஒழியும் என்று மக்கள் நம்பினர்; சமயங்களும் இதனையே வலியுறுத்தின. சமயங்களைப் பரப்ப வந்த குருமார்களும், நோய்க்கு மருந்து கொடுத்தலோடு தங்களின் சமயக்கோட்பாட்டையும் வழிபாட்டையும் இணைத்தே கொடுத்தனர். தொன்றுதொட்டுத் தமிழ் மக்களிடையே நோய் நீக்குவதில் திருக்கோயில்கள் தனியிடம் பெற்றுள்ளன. மக்கள் பலரும் ஒருங்கு கூடுகின்ற திருக்கோயில்கள், மருத்துவ மன்றங்களாகத் திகழ்வதை இன்றும் காணமுடிகிறது.

கோயிலில் - முதல் மருத்துவம்

இறைவனைப் பல்வேறு பெயர்களாலும் அடைமொழிகளாலும் மக்கள் வேண்டி மன அமைதியையும் செல்வத்தையும் அடைகின்றனர். திருக்கோயில்கள் செவ்வனம் உருவான போது கோயில்கள் சமுதாயக் கூடங்களாக விளங்கின. பல்லவர் காலத்தில் திருக்கோயிலைச் சார்ந்து மருத்தகங்களோ மருத்துவச் சாலைகளோ இருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்தில. மகேந்திரப் பல்லவன் காலத்தவர் என்று வரலாற்றாசிரியர்கள் தெளிவாகக் கூறிய திருநாவுக்கரசர்தான், தனக்கு உண்டாகிய சூலை நோயைச் சிவபெருமானை வேண்டி நீக்கியருளுமாறு பாடுகின்றார். திருவதிகை வீரட்டானத் திறைவனைப்பாடுகின்ற திருநாவுக்கரசர் தனக்கு வந்த நோயினைக் 'கூற்றாயினவாறு' என்று இயம்புகிறார். இப்பதிகத்திலுள்ள பாடல்கள்

ஒவ்வொன்றிலும் நோயின் நிலை புலப்படுமாறு தொடர்களை அமைத்துத் திருநாவுக்கரசர் பாடுகின்றார். இன்னொரு பாட்டில் 'சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்; தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடன் ஆவதுதான்' என்று தெரிவிக்கின்றார்.

சுலவி வயிற்றகங்கனலும் சூலையுடன் திருநாவுக்கரசர், வந்தணைந்து திலகவதியார் அடிமேலுற வணங்கினார். திலகவதியார் திருவீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார். திலகவதியார் வழிகாட்ட திருவதிகை வீரட்டானச் சிவபெருமானைத் திருநாவுக்கரசர் 'மருளும் பிணிமாயை அறுத்திடுவான்' பாடினார். மன்னும் பதிகம் பாடியபின் வயிறுற்றடு சூலை மறப்பிணிதான், அந்நின்ற நிலைக்கண் அகன்றது. இதனைத் திருநாவுக்கரசர் தேவாரமும் திருத்தொண்டர் புராணமும் நன்குணர்த்துகின்றன. சிவபெருமானைப்பாடி நோய் நீக்கம் பெற்ற முதல் நிகழ்ச்சி இஃதேயாகும். நாயன்மார்களிலும் ஆழ்வார்களிலும் திருநாவுக்கரசராகிய அப்பர்பெருமானே முதற்கண் தன்நோய் நீக்கத்துக்காகக் கடவுளை நாடியவர். மருந்துகளாலும் மந்திரங்களாலும் நோய் தீராமையாலேதான் அவர் இறையருளை நாடிப் போந்தார். இறைவன் மணி மந்திர ஔடதங்களால் தீராத நோயையும் தீர்ப்பவன் என்பது இதனால் புலனாகும்.

திருக்குறள் மருத்துவம்

திருவள்ளுவர், மருந்து எனும் அதிகாரத்தை அமைத்திருப்பது நோயின் பழமையைக் காட்டுகிறது. இந்த அதிகாரத்தில் நோய்களின் வகைகளை ஆசிரியர் எடுத்துரைக்கவில்லை. அவர் மருந்து பற்றியும் உணவுபற்றியும்

பேசினாரே அன்றிக் கடவுளைக் கொண்டு வந்து பேசிலர். சமண சமயத்திலிருந்து சைவத்துக்கு மாறிய திருநாவுக்கரசரே, முதற்கண் நோய் போக்கக் கடவுளை வேண்டிப்பாடுகின்றார்; ஆழ்வார்கள் எவரும் நோய் நீக்குமாறு திருமாலைப் பாடவில்லை.

திருக்கோயில் மருத்துவக்களம்

திருநாவுக்கரசர் சிவபெருமானைப் பாடி நோய் நீக்கம் பெற்றமையால், புள்ளிருக்கும் வேளூர்த் தேவாரத்தில்

'வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்...'

என்று சுட்டிப் போற்றுகின்றார். இவருடைய வாழ்க்கை அனுபவம் சிவபெருமானை மருந்தாகக் கண்டு வணங்க இவரைத் தூண்டியிருக்கிறது. தன்னோய் நீங்குவதற்கு மருந்தாகத் திருவதிகை வீரட்டானத் திறைவனைத் திருநாவுக்கரசர் கொண்டதனால், திருக்கோயில் மருத்துவக்களமாகத் தமிழகத்தில் மலர்ச்சி பெற்றது.

சம்பந்தர் மருத்துவம்

திருஞானசம்பந்தர் வாழ்வில், திருக்கோயில் மருத்துவ மன்றமாகத் திகழ்ந்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன. மழ நாட்டில் திருப்பாச்சிலாச்சிரமம் என்ற ஊரில் கொல்லி மழவன் மக்களுக்கு ஏற்பட்ட முயலகன் என்ற நோயைத் திருஞான சம்பந்தர் இறைவன் திருமுன்னரே போக்கினார். சம்பந்தர் திருப்பாச்சிலாச் சிரமப்பரமனை வணங்கி

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்

பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
ஆரிட மும்பலி தேவர்
அணிவளர் கோலமெல் லாஞ்செய்து பாச்சில்
ஆச்சிராமத் துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வதோ இவர் மாண்பே

என்று தணிவில் பிணி தவிர்க்கும் பதிகத்தண்டமிழ் பாடினார். சம்பந்தப் பெருமான் போற்றி நிற்க, மழவன் பயந்த மழலை மென்சொல் கன்னி, உறுபிணிவிட்டு நீங்கிக் கதுமெனநின்றெழுந்தாள். சிவபெருமானைப் போற்றிப் பணிந்து சம்பந்தப்பெருமான் நோய் போக்கினார்.

அடுத்துத் திருஞான சம்பந்தர், கொடி மாடச் செங்குன்றூரைச் சென்று சேர்ந்தார். அக்காலத்தில் அவர் உடன் வந்த அடியார்களுக்குப் பனி என்னும் சுரநோய் வந்து வாட்டியது. 'எவ்விடத்தும் அடியார்களைப் பற்றிய இடர்களைப் போக்குவது திருநீலகண்டம்' என்று ஆணையிட்டுச் சம்பந்தர் பாடினார். அதனால் அந்நோய் கொங்குநாட்டைவிட்டே ஒழிந்தது. இவ்வருஞ்செயலைக் 'கொங்கிற் பனி நோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்' என்று நம்பியாண்டார் நம்பி நவில்வர்.

ஒரு வணிகன் மகள் தன் முறை மாப்பிள்ளையுடன் உடன் போக்காகத் திருமருகலுக்கு வருகின்றான். அங்கு வந்து தங்கும் போது அவள் காதலனாய கணவனை அரவம் தீண்ட அவன் மாண்டு போகின்றான்; காதலன் மாண்டமை கண்ட காரிகை இடைவிடாது புலம்பிக் கதறுகின்றாள். செய்தியறிந்த திருஞானசம்பந்தர், திருமருகலிறைவனைப் பணிந்து 'உடையானே தகுமோ இந்த ஒள்ளிழையாள் உள் மொழி' என்றெடுத்துப் பாடினார். அரவ நஞ்சால் மாண்டவன்,

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான். இதற்கு ஞான சம்பந்தர் பாடிய பதிகம் செவிலியிரங்குதல் என்னும் அகப்பொருளாய் அமைந்திருக்கிறது.

திருமயிலையில் என்பையும் சாம்பலையும் திருஞானசம்பந்தர் பெண்ணாக எழுப்பினார். இது விரிவான வரலாறு; முன்னர் விளக்கியன நோய் நீக்கியன. இந்நிகழ்ச்சி தனி அற்புதமாக அமைகிறது. சாம்பலாகிப் போன பெண்ணை இங்கு மீட்ட வரலாறு வியப்பைத்தருகிறது. திருஞானசம்பந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் நோயுற்றவரோ மாண்டவரோ தெய்வநலத்தால் காப்பாற்றப் பெற்றிருக்கின்றனர். இவை மந்திரத்தாலோ மனித தந்திரத்தாலோ நிகழ்ந்தன என்று சம்பந்தரோ நம்பியாண்டார் நம்பியோ பிறரோ பேசவில்லை.

திருஞானசம்பந்தர் பாண்டியனுக்கு ஏற்பட்ட நோயை நீக்கும்போது, 'திருவாலவாய் அண்ணல் நீறே மன்னுமந்திரமுமாகி மருந்துமாய் எல்லாப் பிணிகளையும் போக்கவல்லது' என்ற உண்மையை நிலை நாட்டினார். திருநீற்றுப்பதிகம் இன்றும் பலருக்கு நோய் நீக்கும் மருந்தாக அமைகிறது.

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே'

என்பது திருஞானசம்பந்தர் திருமொழி.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோர் சிவபெருமானைப் பாடி நோய் நீக்கம் பெற்றது போலச் சுந்தரரும் சிவபெருமானைப் பாடி நோய் நீங்கப்பெற்றார். இவ்வண்ணம்

திருநாவுக்கரசர் வாழ்க்கையில் தொடங்கிய திருக்கோயில் மருத்துவம் திருஞானசம்பந்தராலும் பின்பற்றப்பட்டது. இருவர் வழியும் தன் வழியே என்று சுந்தரரும் பின்பற்றினார். சைவ சமய குரவர் நால்வரில் மாணிக்க வாசகரல்லாத மூவரும் திருக்கோயிலை மருத்துவ மன்றமாக்கி மக்களைக் கவர்ந்தனர். திருக்கோயிலை மக்கள் வாழ்க்கையில் ஒரு முதன்மையான அங்கமாக்க இத்தகைய முயற்சிகள் இன்றியமையாதனவாயின.

மன்னர் உருவாக்கிய மருந்தகம்

பிறகாலச் சோழராட்சியில், திருமுறைகள் தொகுக்கப்பட்ட போது, திருக்கோயில்களின் பெருமை உணரப்பட்டது; கோயிலைச் சார்ந்து மருத்துவசாலைகள் விளங்கின. தஞ்சாவூரில் கி.பி.1015இல் சுந்தர சோழ விண்ணகர ஆதுர சாலை என்று மருத்துவ மனை இருந்தது. இதனைக் குந்தவை தேவி ஏற்படுத்தியிருந்தாள் (248 of 1923). திருமுக்கூடலிலுள்ள வீரராஜேந்திரன் கல்வெட்டு (335 of 1917) மகா விஷ்ணு கோயிலிலில் பதினைந்து படுக்கைகள் இருந்தன என்றும் இது 'வீர சோழன்' என்று பெயருடையதென்றும் தெரிவிக்கின்றது. இதே கல்வெட்டில் இம் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த மருந்துகளின் பட்டியலும் தரப்பட்டிருக்கிறது. பிற்காலச் சோழராட்சியில், திருக்கோயிலைச் சார்ந்து மருத்துவ நிலையங்கள் தோன்றின. அப்பர், சுந்தரர் ஆகிய இருவரும் நோய்க்கு ஆளாகியமையும் இவர்களைத் திருக்கோயிலில் பலரும் கண்டு நோய் நீக்க வேண்டியமையும் கோயிலைத் தழுவி மருத்துவ சாலைகள் அமைந்திடக் காரணமாயின.

மரமும் மருந்தும்

திருக்கோயில் சிவபெருமான், நோயைத் தீர்க்கும் மருத்துவன் என்று கொள்ளப்பட்டபோது கோயிலுக்குரிய தலமரமும் மருத்துவ குணமுடையதாயிற்று. இதனால் தலமரங்களுக்கு மக்களிடையே தனி மதிப்பு ஏற்பட்டது. திருக்கோயில் மருத்துவ நிலையமானமையால், கடவுளே மருத்துவனாக வந்தான் என்றும் கண்ணொளி தந்தான் என்றும் வரலாறுகள் தோன்றின. திருச்சிராப்பள்ளி இறைவன் தாயுமானசுவாமி தாயாகி மகளொருத்திக்குப் பிள்ளைப் பேறு பார்த்தாள்; சம்பந்தரின் 'நன்றுடையானை' என்ற பதிகம் இனிய பிள்ளைப்பேற்றைத் (சுகப்பிரசவம்) தருவதாகும். இந்த நிகழ்ச்சி திருக்கோயில், மக்களின் நோயைத் தீர்ப்பதில் பெற்றிருந்த பங்கை வெளிப்படுத்துவதாகும். இறைவன், மருத்துவன் ஆனது போலக் கோயில் பொருட்களும் மருந்துகளாயின.

தண்ணீர் மருந்து

திருக்கோயிலின் திருக்குளமும் தீர்த்தச் சிறப்புடையது; இதுமக்கள் நோய் நீக்குவதில் தலையாயது. திருக்கோயில் திருக்குளத்தில் நீராடினால் பல நோய்கள் பறந்துவிடும். புள்ளிருக்கும் வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலிலுள்ள சித்தாமிர்தத் தீர்த்தம் மிக அற்புதமானது. இக்குளத்தில் ஒரு மண்டலம் நீராடினால், காய்ச்சல், தோல் நோய்கள், வயிற்று வலி முதலிய நோய்கள் நீங்கிவிடும். இக்குளத்துத் தண்ணீருக்குத் தனி மருத்துவ குணமுள்ளது. இக்குளத்தினுள் தன் வந்திரி என்னும் சித்த மருத்துவரால் உருவாக்கப்பெற்ற நவபாஷாணக்கற்கள் கிடக்கின்றன. அந்த பாஷாணங்களின் தன்மை தண்ணீரில் கலந்து அந்த நீர், நோயை அழிக்கிறது. இதனால் இக்குளத்தில் எக்காலத்திலும் தவளைகள்

இருப்பதில்லை; புதிதாகத் தவளையைக் கொண்டு வந்து இக்குளத்தில் விட்டால் உடனே இறந்துவிடும். சிவகங்கை மாவட்டம் பாகம் பிரியாள் கோயில் தீர்த்தத்திற்கும் இந்த மருத்துவ குணம் உண்டு. திருக்கோயில் தீர்த்தங்களுக்கு என்று தனியான மருத்துவ குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இயற்கையில் இயைந்த இவை இறையருள் என்று மக்களால் போற்றப்படுகிறது. ஆகவேதான் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூன்றும் சிறப்பிக்கப்படுகின்றன.

மண் மருந்து

திருக்கோயிலைச் சார்ந்த மண்ணும் மருத்துவ குணமுடையதாகும். களிமண், செம்மண் ஆகியன இயல்பிலேயே மருத்துவகுணமுடையன. நீர் கொண்டாலும் கட்டிகள் புறப்பட்டாலும் கால் கை வலித்தாலும் தலைபாரமாக இருந்தாலும் மண்ணைப் பூசுவது நாட்டுப்புற மக்கள் வழக்கம். காந்தியடிகள் கால் வலிக்குக் கண்ட மருந்து மண் அன்றோ? சங்கரன் கோயிலில் கோமதியம்மை திருமுன்னர் வழங்கப்பெறும் புற்றுமண் பல நோய்களுக்குத் தக்க மருந்தாகும். இதனை உட்கொள்வதில்லை; வெளிப்பூச்சுக்கு மட்டுமே பயன்படுத்துவர்

புள்ளிருக்கும் வேளூரில் வழங்கும் திருச்சாந்துருண்டையும் திருக்குளத்தில் எடுக்கப்பெறும் மண்ணே; இந்த உருண்டையை மாத்திரை என்பர். இதனை நாள் தோறும் உண்டு நோய் நீங்கியவர்களும் - நோயின்றி வாழும் அடியார்களும் பலர் உள்ளனர். காளமேகப் புலவர் 'மண்ணையே மருந்தாக உண்டார்' என்று பாடுவதும் நோக்கத்தக்கது. திருக்கோயில்களில் திருமஞ்சனம் செய்யும் எண்ணெயும் கால் கை உடல்வலி போக்கும் மருந்தாகிறது. பரமக்குடிப் பக்கம் குருசாமி கோயில் எண்ணெய் புகழ் பெற்றது.

அதுபோலக் குருவாயூர் எண்ணெயும் மருந்தாக மக்களிடையே போற்றப்படுகிறது.

நோய் போக்கும் திசை

திருக்கோயிலில் தொடர்புடைய பலபொருள்களும் மருந்தாகி நோய் நீக்குவது போல மேற்குநோக்கி வீற்றிருக்கும் கடவுளரனைவரும் நோய் போக்குபவர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். சமயகுரவர் பாடிய புள்ளிருக்கும் வேளூர், திருமயிலை ஆகிய ஊர்களில் திகழும் சிவபெருமான் மேற்கு நோக்கி வீற்றிருந்து தன் அடியார்களின் நோயைப் போக்குகிறார். எனவே நோய் ஒழியக் கடவுளை வணங்குவோர் இறைவனை மேற்கு நோக்கிய வண்ணமாய் நிறுவுதல் சாலும். பழநிமுருகன், ஐயப்பன் ஆகியோரும் மேற்கு நோக்கியே வீற்றிருக்கின்றனர். மேற்கு நோக்கிய இறைவனுள்ள கோயில்களின் வரலாற்றை ஆராய்ந்தால் அவண் யாரேனும் பிணிநீக்கம் பெற்ற வரலாறு இருக்கும்.

பைத்தியம் தெளிதல்

உடல் நோய் போல மன நோயும் மக்களை வாட்டும் தகையது; உடல் நோயினும் மன நோய் மிகக் கொடியது. பைத்தியம் போக்கி வைத்தியம் செய்யும் திருக்கோயில்களுமுள்ளன. புதுக்கோட்டைக் கருகிலுள்ள திருவரங்குளம். சிவன் கோயில் வரலாற்றுச் சிறப்பினது. இங்குள்ள அம்மன் கருவறை முன்னர் ஒரு கல் இருக்கிறது. இக்கல்லில் பைத்தியமாக உள்ளவர்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பது போலக் கட்டிவைக்க வேண்டும். இதற்கென இரும்புச் சங்கிலி உள்ளது. கட்டிவைத்து அம்மன் தீர்த்தப் பிரசாதத்துடன் ஒரு குடம் தண்ணீரைக் கொட்டுவர். இவ்வாறு

நாள் தோறும் மூன்று நாழிகை பைத்தியத்தைக் கல்லொடு கட்டிவைப்பர். இவ்வாறு ஒரு மண்டலம் அம்மனை வழிபட்டால் பைத்தியம் தெளிகிறது. நோயாளிகளை அடிப்பது தாக்குவது கிடையாது. பல்வேறு நோயுற்றவர்களும் குடும்பச்சிக்கல்களில் அகப்பட்டுக் கொண்டவர்களும் பத்து நாள், நாற்பது நாள் என்று இவ்வூரில் தங்கிக் கோயிலில் வழிபாடு செய்கின்றனர். குணசீலம் என்ற குணசேகரம் என்னும் வைணவ திவ்விய தேசமும் பைத்திய நோய் போக்கும் திருக்கோயிலாகும். இசுலாமியர் கொண்டாடும் ஏர்வாடி தர்காவும் பைத்தியம் முதலிய நோய்களைப் போக்கச் சிறந்த இடமாக மக்களிடம் புகழ் பெற்றிருக்கிறது.

பில்லிசூனியப் பிணிபோக்கல்

ஒருவருக்கு இன்னொருவர் வைக்கும் ஏவல், பில்லி, சூனியம் ஆகியவற்றால் ஏற்படும் நோய்களையும் துன்பங்களையும் நீக்கும் கோயில் அழகர் மலையாகும். மந்திரப்பிரயோகங்களால் விளையும் கேடுகளை ஒழிக்க அழகர் மலையன்றி வேறு தவமில்லை. இம்மலை மீது ஓடும் சிலம்பாற்றில் (நூபுர கங்கை) நீராடித் திருமாலை வணங்கிப் பதினெட்டாம் படிக்கருப்பரைப் பணிந்தால் பில்லி சூனிய மந்திரங்கள் தறிகெட்டோடித் தீமை விலகிவிடும்; பில்லி சூனிய மந்திரம் அறுந்து தொல்லை விளையாது. இங்கு வழிபட்டால் ஏவல் வைப்போரை எதிர்த்து ஏவல் வைக்கவோ திருப்பிவிடவோ வேண்டியதில்லை. திருவரங்கத்தில் வழிபாடு செய்தாலும் இப்பயன் உண்டு; எனினும் அழகர்மலை வழிபாடு அதனைவிடச் சற்றுக் கூடுதல் பயனைத் தருவதாகும். அங்குள்ள கருவறையின் அமைப்பும் மூர்த்திக்கு இடப்பட்டுள்ளயந்திரமும் தனி மதிப்பும் சிறப்புமுடையன; சுதர்சனச் சக்கரமும் மந்திரமும்

எல்லா இடர்களையும் எதிர்ப்பையும் நீக்கவல்லன. ஸ்ரீசுதர்சன மந்திரம் ஓதியே மன்னன் மகளைப் பிடித்திருந்த பேயை ஸ்ரீராமாநுசர் ஓட்டினார் என்பது வரலாறு. மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலில், அடியார்களுக்கேற்படும் பில்லி சூனியங்களின் தொல்லையை நீக்க அதர்வணக்காளி என்ற அம்மை நிறுவப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நோக்கமும் அபிடேகப் பொருள்களும்

திருக்கோயில் வழிபாடன்றித்திருக்கோயிலில் செய்யும் அபிடேகப் பொருள்களிலும் நைவேத்தியப் பொருள்களிலும் நோக்கம் கூறப்பட்டிருக்கிறது. இன்ன பொருளைக் கடவுளுக்குத் திருமஞ்சனமாட்டுவித்தால் நோய் நீங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணெய், தண்ணீர் ஆகியன சுர நோய் போக்குதற்குரியன. இறைவனுக்குப் படைக்கும் புளியன்னம் நோய் நீக்கும் என்பர்.

நோய் தரலும் நீக்கலும்

பாடல் பெற்ற திருப்புத்தூருக்கு அருகிலுள்ள சிறுபெரிச்சியூரில் பழமையான சிவன் கோயிலுள்ளது. அங்கு மேற்குப் பார்த்த வயிரவர் எழுந்தருளியிருக்கிறார். இராயவரம், சாக்கோட்டை, நேமம், திருப்புத்தூர் முதலிய இடங்களில் வயிரவர் மேற்கு நோக்கியவர். இவர்கள் நோய் போக்கும் கடவுளராவர். சிறுபெரிச்சியூர் வயிரவர் வடிவம் செட்டிநாட்டிலேயே மிகச்சிறந்த வேற்றுமையான வடிவம். இவ்வயிரவருக்கு அபிஷேகம் செய்தவற்றையோ நைவேத்தியம் செய்தவற்றையோ உண்டால் தொழுநோய் ஏற்படும்; நோயுள்ளவர்கள் உண்டால் அந்நோய் போய்விடும். இச்சிலை மருத்துவ குணமுடைய சிலை என்று சொல்லப்படுகிறது. செட்டிநாட்டு வட்டாரத்திலுள்ள இன்னொரு

வயிரவர் கோயில் தூர்வாசபுரத்தில் இருக்கிறது. இக்கோயிலிலுள்ளவற்றைத் தின்னும் காக்கை, எலி ஆகியவற்றின் வாய் வெள்ளையாக இருக்கும். கோயிலுக்கு வருபவர்கள், சிவாச்சாரியார் தராமல் எதையும் (திருநீறு, சந்தனம், குங்குமம்) நெற்றியில் இட்டுக்கொள்ளக்கூடாது; எடுத்து அணிந்தால் அந்த இடம் வெள்ளையாகிவிடும். இப்பகுதியை ஆண்ட புதுக்கோட்டை மன்னர், இங்குவந்த போது சந்தனத்தைக் கேட்டு வாங்கி நெற்றியில் வைத்துக்கொள்ள அந்த இடம் வெள்ளையாகிவிட்டது. பின்பு அவர் ஒரு ஊரைக்கோயிலுக்கு விட்டுக்கொடுத்து நோய் நீங்கப்பெற்றார் என்பது ஊரகக்கதை. செட்டிநாட்டில் பல கோயில்களில் இத்தகைய வெண்மை நிறமாகும் நோய் வயிரவருடன் தொடர்புபடுத்தி வழங்குகின்றன.

பழநியும் பஞ்சாமிர்தமும்

நோய் தீர்க்கும் திருக்கோயில்களில் பழநியைக் குறிக்காவிடில் பயனில்லை. குசத்திருத்தலமாகிய பழநியின் இறைவனே மருந்துப் பொருளாலானவன். இப்பெருமானைப் போகர் என்னும் சித்தர் உருவாக்கினார். இங்குச் செய்யும் பஞ்சாமிர்த அபிடேகமே சிறப்பானது. பழநியாண்டவரின் அருளும் அருமருந்தும் இந்த அபிஷேகத்தின் மூலம் எல்லா மக்களுக்கும் கிடைத்தது. இன்று இத்திருவுருவம் சிதைந்துவிட்டது; அபிஷேகம் செய்து செய்து வடிவம் குலைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. கடவுள் வடிவம் மருந்தாதலைக் கண்டு அதன் பகுதிகள் சிறிது சிறிதாக ஒடிக்கப்பட்டுவிட்டன. சிலையின் சிதைவைக் காரணங்காட்டிச் சிலைக்கு அபிடேகம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது; நோயுற்ற ஏழைமக்களுக்குக் கிடைக்கக் கூடிய தெய்வீக மருந்து கிடைக்காமல் போய்விட்டது. இன்று வெறும் தின்னும் பொருளாகப் பஞ்சாமிர்தம் மாறியுள்ளது.

வயிற்று வலி, வயிற்று நோய், தோல் நோய், குன்மம், ரோகம், இளைப்புப் போன்ற பல கொடிய நோய்களைப் பழநியாண்டவருக்கு அபிடேகம் செய்த பஞ்சாமிர்தம் போக்கும். போகர் என்னும் பெருமான் காலங்கடந்தும் தான்கண்ட மருந்துகளை மக்கள் பெறவேண்டும் என்ற அருள் நோக்கில் இத்தெய்வீகச் சிலையை - உடலைக்காக்கும் செவ்வாய்க்கு அதிபதியான பழநியம் பெருமானாக - வடித்தமைத்திருக்கிறார். அம்மருந்தாற்றல் தேன், நெய், பழம் ஆகியவற்றில் கலந்து நோயாளர்க்கு மருந்தாகிறது. அந்தப் பஞ்சாமிர்தத்தை உண்டால் நோய் நீங்கும். இறை நம்பிக்கையும் மருந்தும் தீராத வினையையும் தீர்த்து விடுந்தகையன. சிவபெருமான் உகந்தாடும் ஆனைந்துக்கும் (பஞ்சகௌவியத்துக்கும்) இம் மருத்துவகுணமுண்டு. இது புற்று நோய் போக்கும் மருந்தென்பர்.

பழநியாண்டவர் சிலையை மூலிகைகளாலும் எண் மருந்துகளாலும் இருக்க வேண்டிய பகுதிகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு இட்டு நிறைவு செய்து மீண்டு மூர்த்திக்கு அபிஷேகம் நடை பெறுமாறு செய்யவேண்டும். இது சிவாகம நெறிக்குரியதாகும். தங்கத்தால் இச்சிலையை முழுமையாக்கி வழிபாட்டுக்குரியதாகச் செய்வது அரசும் மெய்யன்பர்களும் செய்யத்தக்கது.

சித்தர் நெறி வேண்டும்

சித்த மருத்துவர்களும் ஸ்தபதிகளும் அருளாளர்களும் ஒருங்குகூடி மூலிகைகளாலும் மருந்துகளாலும் எண் மருந்துகளாலும் புதிய விக்கிரகங்களை வடிவமைக்க வேண்டும். நோய்க்குரிய மருந்துகள் கொண்டு திருமேனியைத் தனித்தனியே வடித்துத் திருமஞ்சனம் செய்து அதனை ஆய்வுக்கூடச் சோதனை செய்து நடைமுறைப்படுத்தலாம்.

அண்மையில், காரைக்குடி மீனாட்சிபுரம் முத்து மாரியம்மனுக்கு மூலிகை அபிடேகம் மிக விரிவாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. இதன்மூலம் அம்மையின் திருமேனிக்கு மருத்துவகுணம் ஏற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நஞ்சு முறிக்கும் கல்

மதுரை மாவட்டம் பெரிய ஊர்ச்சேரி காமாட்சி அம்மன் கோயிலின் முன் ஆறடி உயரமும் ஒன்றரை அடி அகலமுள்ள கல்தூண் ஒன்று காணப்படுகிறது. (நன்றி : தினமணி டிசம்பர் 25, 1998). அத்தூணின் மேற்பகுதியில் எழுத்துகளும் நடுவில் கருடனும் அதன் கீழ்ச்சதுரக் கட்டத்தில் மந்திர எழுத்துகளும் விளங்குகின்றன. விஷப்பூச்சிகளால் தீண்டப்பட்டோர் இக்கம்பத்தைச் சுற்றிவந்து மூன்று முட்டுமுட்டினால் உடனே நஞ்சு இறங்கும். நச்சுப்பூச்சிகளால் தீண்டப்பட்டோர் வரமுடியாவிட்டால், அவரைப் பார்த்தோர் கம்பத்தில் முட்டிக்கொண்டு வேட்டியை நீரில் நனைத்துப் பிழிந்து கட்டிக்கொண்டால், வேட்டிகாய்ந்தவுடன் நஞ்சு இறங்கிவிடும். இச்செய்தியும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் கீழ்மந்திரச் சொல் ஒன்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள ஆறுகட்டங்கள் படுக்கை வடமாகவும் ஐந்து கட்டங்கள் நீள வாக்கிலும் முப்பது கட்டங்கள் உள்ள சக்கரமாகும். மேல்கீழாக 'சரவணபவ' என்றும் மற்றைய மூன்று வரிசைகளில் மந்திரச் சொற்கள் உள்ளன; 'ஓம் மசி நசி நசிமசி' என்ற மந்திரச் சொற்கள் காணக்கிடக்கின்றன. இதில் கருடாழ்வார் உருவம் இருப்பதால் பாம்புகடிக்கு மருந்தாக இக்கல் விளங்குவதை அறிய முடிகிறது. கருடனுக்கு மேலே சங்குசக்கரம் வட்டவடிவில் தென்படுகிறது. இக்கல்லை நான்கு

தலைமுறையாக முத்துக்கனியாபிள்ளை குடும்பத்தினர் பராமரித்து வருகின்றனர்.

இக்கல்லுக்கு அருகே இருந்த கிணறு தூர்ந்து சிறு குழியாக விளங்குகிறது. இன்றும் இக்கல்லை முட்டி நஞ்சு நீக்கம் பெறுவோர் பலர் என்று தெரிகிறது. இது காமாட்சி அம்மன் கோயிலை ஒட்டி நிகழ்ந்து வருகிறது.

தேர்வடமருந்து :

தேரோட்டத்தில் தேரிழுக்கத் தேர் வடத்தைப் பயன்படுத்துவர்; வடமின்றேல் இரும்பாலான தேர்ச்சங்கிலி இருக்கும். ஆனால் கருநாடக மாநிலம் மங்களூருக்கருகே 'குகேசுப்பிரமணியா' என்ற தலம் விளங்குகிறது. இங்குத் தேர்த்திருவிழாவில் தேரை இழுக்க வளைந்து கொடுக்கக்கூடிய ஒருவகையான பிரம்பைப் பயன்படுத்துகின்றார்கள். இதனை மலையிலிருந்து வெட்டிக்கொண்டு வருகின்றனர். இந்தப் பிரம்புக் கொடி தேர்வடம் போலத் தொகுக்கப்பட்டுத் தேரிழுக்கப் பெறும். மக்கள் இந்தப் பிரம்மைப் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தேரை இழுப்பர். தேர் உரிய இடத்தைச் சேர்ந்ததும் அந்தப் பிரம்பைத் துண்டு துண்டாக மக்கள் அகப்பட்டதை வெட்டிக்கொண்டு போகின்றனர். தேரிழுத்த பிரம்பு இருந்த இடம் தெரியாமல் மக்கள் கைகளுக்குப் போய்விடுகின்றது. இதனை மக்கள் 'மகாப்பிரசாதம்' என்று போற்றுகின்றனர். எவ்வகையான விஷகடியாக இருந்தாலும் இந்த மர வடத்தைத் தேய்த்துத் தடவினால் உடனே குணமாகிவிடும். இதனை க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழிலும் ஆசிரியர் குறித்திருக்கிறார்.

எல்லாச் சமயத்தாரிடமும் நோய் நீக்கம் பெறப் பல வேண்டுதல்கள் செய்துகொள்ளும் பழக்கம் இருக்கிறது.

1. உடலுறுப்புகளுக்குத் தீமை விளையின் உறுப்புகளை வெள்ளியால் செய்து கோயிலுக்கு வழங்குதல்.

2. எடைக்கு எடை சருக்கரை, பழம், கயிறு போன்றவற்றைக் கொடுத்தல்.

3. மாவிளக்கு, காவடி எடுத்தல், பூக்குழி இறங்கல் போன்ற நேர்த்திக் கடன்களைச் செய்தல்.

4. குறிப்பிட்ட மந்திர செபம் செய்யுமாறு பொருளை வைப்பு நிதியாக்கிக் கட்டளை நிறுவல்.

5. வேண்டுதல் செய்து அதனை நிறைவேற்றல்.

உடல் நலத்துக்குத் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாது விளங்குவதுவோல வாழ்க்கை வளர்ச்சிக்கும் திருக்கோயில் வழிபாடு வழிகாட்டுகிறது. திருமணம் நடைபெறவும் மக்கட்பேறு பெறவும் வட்டாரத்துக்கு வட்டாரம் குறிப்பிட்ட திருக்கோயில்கள் இருக்கின்றன. எனவே மக்களுக்குக் குறையாத வயதும் கழுபிணி இல்லாத உடலும் வேண்டித்திருக்கோயில்களை இன்றும் அவர்கள் வழிபட்டு வருகின்றனர். வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில், மன அமைதியையும் வாழ்க்கைத் தேவையையும் திருக்கோயில்களின் தெய்வங்கள் அருளி வருகின்றன.

6. தெய்வம் நின்று கேட்கும்

தெய்வ அச்சமும் வாழ்க்கை ஒழுக்கமும்

தமிழர் திருக்கோயில்களைக் கலை நிலையமாயும் சமயநிலையமாயும் போற்றித் தாம் தேடிய பொருள்களைக் கோயில்களுக்கும் கோயில் கலை வளர்ச்சிக்கும் வழங்கி மகிழ்ந்தனர். திருக்கோயில்களும் திருக்கோயில் கடவுளர்களும் தம்மை வாழவைப்பன என்று நம்பியது போலத் தாம் தவறு செய்யின் அவை தம்மை ஒறுக்கும் என்றும் அஞ்சினர். பிறர் பொருளை நயந்து பொய் பேசுபவர் கூடத் தெய்வத்திருமுன்னர் பொய் சொல்ல அஞ்சி நடுங்கினர். மக்களிடையே பரவியிருந்த தெய்வ அச்சம், வாழ்க்கையில் ஒழுங்கையும் நேர்மையையும் வாய்மையையும் நிலைப்படுத்துவதில் மேலோங்கி நின்றது. பொய்யுரைப் போர், களவு செய்வோர், பிறருக்குத் தீங்கிழைப்போர், மோசம் செய்வோர் எல்லாரும் கூடத் தெய்வங்களால் தமக்குத் தீமை வரும் என்று அஞ்சி அஞ்சித் தாம் பிழை செய்ய நேரும் போது தம்மைத் திருத்திக் கொண்டனர்.

வெள்ளிடை மன்றமும் சதுக்கப்பூதமும்

மக்களை அறநெறி வழுவாமல் காக்கின்ற தெய்வ ஆற்றல், சிலப்பதிகாரத்திலேயே பேசப்படுகின்றது. இத்தகையை அல்லியற்கை ஆற்றல், சங்ககால இலக்கியங்களில் சுட்டப்படவில்லை. சிலப்பதிகாரம் பூம்புகார் நகரத்திலிருந்த மன்றங்களையும் சதுக்கங்களையும் பேசுகிறது. இவை கோயிலா? அன்றி மக்கள் கூடிய மன்றங்களா? என்று தெளிவாக உணர முடியவில்லை. பூம்புகாரிலுள்ள ஐவகை மன்றங்களில், மூன்று மக்களை நெறிப்படுத்தி ஒழுக்க வாழ்வு வாழச் செய்யுந்தகையன.

கடற்கரைப் பண்டக சாலையில் களவு செய்வோரைக் கையும் களவுமாகப் பிடித்து அவர்கள் திருடிய பொதியை அவர்கள் தலைமேலேற்றி ஊரைச் சுற்றி வருமாறு செய்யக்கூடியது வெள்ளிடை மன்றம் இம்மன்றத்தின் செய்கையை மட்டுமே சிலப்பதிகாரம் செப்புகின்றது. எவ்வாறு பொருள்களைத் காத்தது? திருடியோரை எவ்வாறு பற்றியது? என்று இந்நூல் உரைக்கவில்லை.

பூம்புகார் நகரத்தில் நான்கு தெருக்கள் கூடுகின்ற சந்தியிருந்த பூதம், சதுக்க பூதமாகும். இப்பூதம் பொய்த்துறவிகள், அலவற் பெண்டிர், கீழறை போகும் அமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்க்கரியாளர் ஆகிய கயவர்களைப் பாசத்தால் பற்றிப் புடைத்துண்ணும் தன்மையாகும். இவரெல்லாம் மன்பதைக்குத் தீமை விளைவிப்போர், இத்தகைய தீயோரைச் சதுக்கப்பூதம் ஒறுத்துவந்தது. இன்றும் நான்கு சந்திகள் கூடும் இடங்களில் சந்திவீரன் என்ற தெய்வத்தை மேடை அமைத்து மக்கள் வணங்குகின்றனர். இம்மேடை மீது விளக்கேற்றிப் பூச்சூட்டிப் புகையிட்டு வணங்குவர். இச்சந்திவீரனுக்கு உயிர்ப்பலியிடுதலுமுண்டு. இரவு நேரத்தில் இப்பாதை வழியே நடமாட மக்கள் அஞ்சுவர். பூம்புகாரிலிருந்த சதுக்கப்பூதம் போலச் சேரமன்னன் வஞ்சி நகருக்கும் ஒரு பூதத்தைக் கொண்டு வந்தான். (சிலம்பு 28 : 146 - 147) என்று நடுகற்காதை உரைக்கின்றது. அய்யனார் கோயில்களில், இன்று, பூதங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்குச் சிலப்பதிகாரம் கூறுவது போலத் தெய்வத்தன்மை இல்லை.

அரசையும் அறத்தையும் காக்கும் பாவை

வெள்ளிடை மன்றமும் பூதச்சதுக்கமும் பூம்புகார் மக்களை மக்களாக வாழ வைத்து அறம்பிறழாமல் காத்தன. ஒன்று

கடற்கரையை ஒட்டியும் இன்னொன்று நகரினிடையேயும் அமைந்தவை. மக்களை ஆளுகின்ற மன்னனும் அறமன்றத்தாரும் அறந்தவறாமல் இருக்கப் பாவைமன்றம் என்ற ஒன்றிருந்தது. அரசு கோல் கோடினும் அறம் மன்றம் நீதி பிழைப்பினும் வாய்விட்டுக் கூறாது துயரக் கண்ணீர் விட்டுப் பாவை அழுதுணர்த்தும் (28:135-138) புறத்திணையில், உன்னநிலை என்ற துறை மன்னர் நிலையைக் காட்டுமாறு பாவை மன்றத்துப் பாவையும் மன்னர், நீதிபதிகளின் நிலையை விளக்கியிருக்கிறது. பாவை மன்றம், காளிகோயிலின் முன்னைய அமைப்பாக இருத்தல் வேண்டும். சதுக்கப்பூதமும் பாவை மன்றமும் இக்காலத்திய சிறு தெய்வக் கோயில்கள் போன்றவை. மக்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்ற மன்றங்கள் புகாரைப் போல மதுரையில் இல்லை. கட்டுரை காதையில் வார்த்திகன் - கார்த்திகை ஆகியோரின் மகன் தக்கிணாமூர்த்திக்கு இழைத்த கொடுமையைக் கண்டு ஐயை கோயில் (மதுரையிலுள்ள துர்க்கை கோயில்) செய்வினைக் கதவு திறக்க முடியாமல் இறுகமூடிக் கொண்டது. நாட்டில் அறந்தவறினால் - அரசு நீதி தவறினால் - தெய்வம் காட்டிக் கொடுத்து விடும் என்பதை இந்நிகழ்ச்சியான் அறிய முடிகிறது. (23 : 107- 109). இவ்வாறு மதுரையிலிருந்த கோயில் கோவலனுக்குத் தவறிழைக்கப்பட்ட போது அதனைப் பாண்டியனுக்குணர்த்தவில்லை. அதுகோவலன் ஊழ்வினையால் விளைந்த கொடுமை போலும். கோயில்களும் தெய்வங்களும் மக்கள் வழிபாட்டுக்குரியனவாக இருந்ததுடன் மக்கள் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் ஒரு வகை அச்சத்தால் காத்து விளங்கியமையைச் சிலப்பதிகாரம் எடுத்தியம்புகின்றது.

வெள்ளிடை மன்றமும் சதுக்கப்பூதமும் மக்களைத் தண்டோ பயத்தால் அச்சுறுத்தின. பாவை மன்றமோ அரசையும் அரச நீதிபதிகளையும் தன் அழுகையால் திருத்த முயன்றது.

தகுதிக்குத் தக்கவாறு உணர்த்து முறையில் வேறுபாடு அமைகிறது.

கடவுள் பாத்திரம்

சிலப்பதிகாரம் போல மணிமேகலையில் கந்திற்பாவை என்ற தெய்வம் விளங்குகிறது. இது சக்கரவாளக் கோட்டத்தில் சம்பாபதி கோயிலின் கிழக்கே உள்ள தூணில் மயனால் உருவாக்கப்பட்டது. சாத்தனார் இப்பாவையை நாவுடைப்பாவை என்பர். இப்பாவையும் அறமுணர்த்திய தெய்வப்பாவையாகும். இது, சம்பாதி கோயிலின் பரிவார தேவதை, கந்திற்பாவை நாடியோர்க்கெல்லாம் முக்காலம் பற்றி உரைத்தது. கந்திற்பாவை வழிபாடும் சிறுதெய்வ வழிபாடாகும். இது உதயகுமரனை வாளால் எறிந்த காஞ்சனன் என்ற வித்தியாதரனை நோக்கி,

அணுகல் அணுகல் விஞ்சைக் காஞ்சன
மணிமே கலையவள் மறைந்துரு எய்தினள்

(20 : 112-113)

என்றுரைத்தாள். காஞ்சனன் தன் மனைவி காயசண்டிகை என்று நினைத்துத் தவறு செய்யாதவாறு காஞ்சனைக்கந்திற்பாவை தடுத்தது. இப்பாவையை மணிமேகலை.

பொய்யா நாவொடிப் பொதியிலிற் பொருந்திய
தெய்வ நீயோ திருவடி தொழுதேன்.

(21:37-38)

என்று போற்றி வணங்குகின்றாள். சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தில் கந்திற் பாவையைத் தெய்வப்பாத்திரமாகப் படைத்திருக்கிறார். முக்கால நிகழ்ச்சிகளையும் அறக்கருத்துகளையும் உரைத்தும்

பாத்திரங்களை நெறிப்படுத்தும் கந்திற்பாவை கதை ஓட்டத்திலும் முக்கிய இடம் பெறுகின்றது.

தெய்வத்திருமுன்

திருக்கோயிலிலோ பிற இடத்தோ இறைவனுக்கு முன்னே சொன்னால் சொன்னபடி நடக்க வேண்டும். இறைவனுக்கு முன்னே சொல்வது ஒன்று பின் செய்வது வேறு ஒன்றாயின் கடவுள் அவரை ஒறுத்துவிடுவர் என்பது உறுதி. இதற்குத் தம்பிரான் தோழராகத் திகழ்ந்த சுந்தரர் வாழ்க்கையே நல்ல சான்றாகும். திருவொற்றியூரில் சுந்தரர் சங்கிலியார் என்னும் வேளாளகுல நங்கையைக் கண்டு காதலித்து மணம் செய்யவிரும்பினார். சங்கிலியோ தன்னை மணந்தால் திருவொற்றியூரை வீட்டுப் போகாதிருக்க வேண்டும் என்றார். அவ்வாறே உறுதி செய்து சங்கிலியை மணக்க இசைந்த சுந்தரர், சிவபெருமானைத் திருக்கோயிலை விட்டு மகிழ மரத்தடியில் போயிருக்குமாறு கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் அவ்வாறே மகிழ மரத்தடியில் சென்றிருந்தார். பெருமானோ தான் மகிழ மரத்தடியில் இருப்பதைச் சங்கிலியார்க்கு உணர்த்தி விட்டார். அதனால் சுந்தரரை அங்கேயே சபதம் செய்யச் சங்கிலியார் வேண்டினார். மகிழ மரத்தடியில் வீற்றிருந்,த சிவபெருமான் முன்னே சுந்தரர் மேவாது இங்கு யான் அகலேன் என்று உறுதி சொல்லி மணம்புரிந்தார்.

சிவபெருமான் திருமுன் பொய் சொல்லிச் சத்தியம் செய்வதைச் சுந்தரர் தவிர்த்தமை அக்காலத்தில் மக்கள் தெய்வங்களுக்கு அஞ்சிய அச்சத்தைக் காட்டுவதாகும். சுந்தரர் தாம் செய்த சத்தியத்தை மறந்து, சிவபெருமான் பிறபதிகளில் நயந்த கோலத்தைக் காண விரும்பித் திருவொற்றியூர்

எல்லையை விட்டுத் தாண்டினார். தான் செய்த சபதத்தைத் தானே வழுவியமையால் சுந்தரர் கண்பார்வை இழந்தார்.

நீதிச் செல்வன்

ஆண்டவன் அன்பர் தம் அன்புக்கு எளிவருவோனாயினும், தவறுதல் கண்டவிடத்து எவராயினும் அவரை ஒறுக்கும் நீதிச் செல்வன் ஆவான். இதனைத் திருத்தொண்டர் புராணம்.

செய்வதனை அறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
மைவிரவு கண்ணார்பால் சூளுறவு மறுத்ததனால்
இவ்வினைவந்து எய்தியதுஆம் என நினைந்துஎம்பெருமானை
எய்திய இத் துயர்நீங்கப் பாடுவேன் என நினைந்து

(பாஎண் 3434)

என்று கூறுகின்றது. கடவுள் உயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும் நீதி கேட்டு அறத்தைநிலை நாட்டுவார் என்பதற்கு இந்த நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டு. சுந்தரர் வாழ்ந்த பல்லவர் காலத்திலேயே திருக்கோயில்கள் மக்களுக்கு நீதி உணர்த்தும் அறமன்றமாகத் திகழ்ந்தமையை இந்த வரலாற்றால் அறிய முடிகிறது.

திருக்கோயில் நகைத் திருட்டு

தொன்று தொட்டுத் திருக்கோயில்கள் நீதிமன்றங்களாக மன்பதையில் அறத்தை நிலை நாட்டுவனவாய் விளங்கின. இதனை இலக்கியங்கள் உணர்த்துமாறு கல்வெட்டுகளும் காட்டுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை புகழ்மிக்க இடம். இங்குள்ள சிகாநாதசுவாமி கோயிலில் காணப்படும் இசைக் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பினது. சிகாநாதசுவாமி கோயில் கோபுரவாசலுக்கு வலப்புறம்

பொறிக்கப்பட்டிருக்கிற திரிபுவன சக்கரவர்த்திகள் வீரபாண்டிய தேவர் காலக் கல்வெட்டு (புசக 601), இக்கோயிலில் நடைபெற்ற திருட்டைப் பற்றிப் பேசுகின்றது.

இக்கோயிலிலுள்ள காங்கேயன் ராயன் மண்டபத்தில் நாடுகள், நகரங்கள், சாமங்கள் ஆகிய அனைவரும் கூடி., திருநலக்குன்றமுடையார் ஸ்ரீபண்டாரம், திருவாபரண மூல பண்டாரத்தைக் கோயில் பிராமணர் களவிலே எடுத்துக் கொண்டமையை விசாரித்தனர். அஞ்ஞான்று, குன்றன் செருந்திவனப் பெருமாள் ஆன எதிரிலி சோழபட்டன் இவ்வூர்க் கற்றச்சனும் நானுமாக அறுபது பொன் எடுத்துக் கூறிட்டுக் கொண்டோம் என்றான். முதல் விசாரணையிலேயே குன்றன் செருந்தி வனப்பெருமாள் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டான். ஏனைய சிவபிராமணரை அழைத்துக் கேட்டபோது இவை நாங்கள் ஒன்றும் அறிந்திலோம் என்றுரைத்தனர்.

உண்மையை ஒப்புக் கொள்ளல்

பிறர் எல்லாம் தாம் செய்த செயலை மறைத்த போது செருந்திவனப் பெருமாள் நான் எடுத்த அறுபது பொன் தவிர எஞ்சியவற்றை இவர்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று அக்கூட்டத்தில் அனைவர் முன்னிலையிலும் சொன்னான். வழக்கு, விசாரணை மூலம் தீராத சிக்கலாயிற்று. யார் கூறுவது உண்மை, யார் கூறுவது பொய் என்று அறிய முடியாத நிலையில், அக்கூட்டம் பிராமணர்களை வார்மணக்குறிச்சியில் சாமந்தனார்முன் சென்று அங்கு விதித்தபடி நடந்து கொள்ளுங்கள் என்றுரைத்தது.

திருவகத்தீசுவரமுடையார் திருமுன்

வார்மணக்குறிச்சி (வார்மனுக்குறிச்சி) திருவகத்தீசுவர முடையார் திருக்கோயிலிலே சாமந்தனார் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பெற்றது. அவ்விசாரணையில், இறைவன் திருமுன் மெய் பேசுகிறானா பொய் பேசுகிறானா என்று கண்டறியக் கொழுவுருவும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கொழுவுருவுதல் என்றால் என்ன? அஃது எவ்வாறு நடைபெற்றது? என்பனவற்றைக் கல்வெட்டு விளக்கவில்லை.

கொழுவுருவல்

கொழு என்பது உலோகக் கோல். கலப்பையில் நிலத்தை உழுவதற்காக இரும்பால் செய்து இதனைப் பொருத்தியிருப்பார்கள். இக்கொழுவை நன்றாக நெருப்பு மூட்டி அதிலிட்டுப் பழுக்கக் காய்ச்சுவர். நெருப்பில் கிடந்த இரும்புக் கொழுச் செக்கச்சிவப்பாகப்பழம் போல் ஒளிவீசிக் கொதிக்கும். இக்கொழுவைச் சுடச்சுடக் கையில் ஏந்திக் கொண்டு தான் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும்; சொல்லுவது உண்மையானால் கைகள் வேகா, சொல்லுவது பொய்யாயின் கைகள் வெந்து விடும். இவ்வாறு வார்மணக்குறிச்சியில் கொழு உருவின இடத்து, குன்றன் பாங்கனும் குன்றன் புற்றிடங்கொண்டானும் பெரியான் தேவனும் ஒன்றாயிரம் செருந்தியும் ஆகிய நால்வர் கைகளும் வெந்து போய்விட்டன. இந்த நீதி விசாரணையில் கலந்து கொண்ட பிறர் கைகள் வெந்தில. இந்த மெய்ப்பிக்கும் நிகழ்ச்சி மூலம் உண்மை, பொய் அறியப் பெற்று நீதி நிலை நாட்டப்பெற்றது. பின்னர் குற்றம் புரிந்தோர் உரிய தண்டனை பெற்றனர்.

வேறு கோயிலில் நீதி விசாரணை ஏன்?

இந்த நீதி கேட்கும் நிகழ்ச்சி வார்மணக் குறிச்சி (இந்த ஊர் எங்குள்ளது என்று தெரியவில்லை. குடுமியான் மலை வட்டாரத்தைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும். குளத்தூர் தாலுகா ஆலத்தூராக இஃது இருக்கலாம்) திருவகத்தீவரமுடைய நாயினார் திருமுன்னரே நிகழ்ந்திருக்கிறது. திருட்டு நடைபெற்றது, குடுமியான் மலை திருநலக்குன்றமுடையார் திருக்கோயிலில், ஆனால் நீதி விசாரணை திருட்டுப் போன கோயில் இறைவன் திருமுன்னர் நடைபெறாமல் வேறொரு கோயிலில் நடைபெற்றது. குடுமியான் மலையில் திருநலக்குன்றமுடையார் திருமுன் ஏன் இவ்விசாரணை நடைபெறவில்லை என்பது ஆராய்தற்குரியது.

தொன்று தொட்டுச் சத்தியம் செய்து மெய், பொய்காணும் நீதிமுறை குடுமியான் மலைக்கோயிலில் வழக்கமாக இல்லை. எனவே அக்காலத்தில் நீதி கேட்கும் இறைவனாக வார்மணக் குறிச்சி, திருவகத்திசுவரா் சிறந்து விளங்கியிருக்கின்றார். எனவே தான், குடுமியான் மலையில் அனைவரும் கூடி உண்மையை அறியமுடியாத நிலையில், வழக்கை வார்மணக்குறிச்சிக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். அன்றி, இக்கோயில் இறைவன் தனக்குத் தொண்டூழியம் செய்யும் சிவப்பிராமணரைக் குறை கேட்க மாட்டார் என்று நாடும் நகரமும் கருதியிருக்கலாம். நீதி கேட்கும் வல்லமை திருநலக்குன்றமுடையாருக்கு இருப்பின் திருடு செய்யும் போதே திருடியவரை ஒறுத்திருப்பார். எனவே விசாரணை வேறு ஊரான வார்மணக்குறிச்சியில் நிகழ்ந்திருக்கிறது.

சிவப்பிராமணா் செய்த களவு, உரிய கோயிலில் அல்லாமல் வேறொரு கோயிலின் துணையோடு அரசியலதிகாரிகள்

முன்னிலையில் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய ஒறுப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. மெய் பொய் அறிய முடியாத நிலையில் திருக்கோயில் தெய்வங்களின் துணையைக் கொண்டு உண்மை கண்டுபிடிக்கப்பட்டது. இது வீரபாண்டியனுடைய இரண்டாம் ஆட்சியாண்டில் சக ஆண்டு 1538 இல் (கி.பி. 1616இல்) நிகழ்ந்தது. இந்த விசாரணையில் அரசு அலுவலரும் கலந்து கொண்டிருப்பது தெய்வ நீதியை அரசும் ஏற்றுக் கொண்டதைக் காட்டுவதாகும்.

சிவனும் காளியும்

மேலே சுட்டிய நிகழ்ச்சி சிவன் கோயிலில் நிகழ்ந்தது. அதற்கான விசாரணையும் சிவன் கோயிலிலேயே நடைபெற்றது. சிவபெருமானை விடக் காளி கொடூர தெய்வம் என்று போற்றப் பெறுபவள். இவளுக்கு உயிர்ப் பலியுமுண்டு. வாள்கோட்டை நாட்டின் தலைமை பெற்ற ஊர் பாகனேரி. அங்குக் கோயில் கொண்டிருக்கும் புல்வா நாயகியம்மன் மிகச்சிறந்த காளியாவாள். இவ்வம்மையைப் புள்ளத்தாள் என்று கொண்டாடுவர். அம்மை அல்லன கடிந்து நல்லன அருளும் தாய்த் தெய்வமாவாள். பாகனேரிப் புல்வாநாயகி, நீதி கேட்பதில் மிக்க புகழ் பெற்றவள் ஆவாள். இவளுடைய புகழ் எல்லை கடந்து பரவியிருந்தது.

திருக்கோயில் கருவறையில் வீற்றிருக்கும் புல்வா நாயகி தன்னுடைய இரண்டாவது கையில் மழுவாயுதம் ஏந்தியிருப்பாள், அதுபோல எழுந்தருளும் திருமேனியான அம்மையின் பின் வலக்கையிலும் மழுவாயுதம் இருக்கும். இவ்வாறு அழகும் வலிமையும் சேர்க்கும் மழுவாயுதம் இரண்டு திருமேனிகளிலும் காணப்படுவது அந்த ஆயுதத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாகும். இந்த மழுவை ஏந்தியமையால், புல்வாநாயகியம்மை மழுவேந்தி என்று பெயர் பெற்றாள். மழுவைக்

கோடாரி, டங்கம், பரசு என்று கூறுதலுமுண்டு. பழுக்காய்ச்சிய இரும்பையும் மழு என்றுரைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

உச்சநீதிமன்றம்

மக்களிடம் பொய்ப்பழி கூறுதலும் பிறர் பொருளைக் கவருதலும் பங்காளிகளை ஏமாற்றிப் பொருளைக் கவர்ந்து கொள்ளுதலும் ஆகிய குற்றங்கள் காணப்படுகின்றன. இத்தகைய குற்றங்களை ஒருவர் செய்து விட்டு இன்னொருவரைக் குற்றவாளியாக ஆக்கிவிடுதலமுண்டு. குற்றத்தைச் செய்தோர் யார்? குற்றம் செய்யாதவர் யார்? என்று ஒரு தலையாக அறிவது கடினம். கண்ணால் கண்ட சாட்சி இருப்பினும் அதனை மெய்ப்பிப்பது அரிது. தீரவிசாரித்தால் உண்மை வெளிப்பட்டாலும் வெளிப்படும். பொய் மெய்யாகிவிடுவது உண்டு. உலகில் நடக்கும் அனைத்தையும் எல்லாங் கடந்து நிற்கின்ற இறைவன் கண்டு கொண்டிருக்கின்றான். அவனை ஏமாற்ற முடியாது. அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலின் இறைவனுக்கு அஞ்சிப் பொய் கூறாதும் தவறிழைக்காதும் இருத்தல் வேண்டும். மீறினால் இறைவன் ஒறுப்பான் என்ற அஞ்சம் இருந்தது. மக்களிடையே வேரோடிய தெய்வ அச்சமே ஒழுக்கத்தையும் நேர்மையையும் அழியாமல் காத்தது. இந்த அச்ச உணர்வால் தான் பொய் கூறுவோர் கூட மெய்கூறிப் பழிவாரா வண்ணம் தங்களைக் காத்துக் கொண்டனர். ஒருவன் அரச நீதியையும் மீறிப் பொய் கூறும் போது, தெய்வ நீதி மூலம் வழக்குகளுக்கு முடிவு காணப்பட்டது. ஒருவன் மெய்யையும் பொய்யையும் ஆராய்ந்து நடுக்கூறுகின்ற அறமன்றமாக - உச்ச நீதிமன்றமாகப் பாகனேரிப் புல்வா நாயகியம்மன் திருச்சந்நிதி நெடுங்காலமாக விளங்கியது.

இலக்கியச் சான்று

பாகனேரி புல்வாநாயகியம்மன் கோயிலில் இருந்த மரபினை மான்விடுதூது என்ற நூலில் குழந்தைக் கவிராயர் வெளிப்படுத்தியுள்ளார்.

....*நண்பாகத்*
தீராத வல்வழக்குத் தேறாக் களவுக்கன்னம்
பேரான எல்லைப் பிசகுமுதல் - ஆராய்ந்து
சுத்தன் அசுத்தன் என்று சோதனையாய் நாக்குமழு
வைத்தோதக் கற்பித்த வல்லமைகள் - அத்தனையும்
தென்பாகை நாட்டில் சிறந்தபுல்வாய் மாதென்றே
அன்பாகச் சொல்ல அவதரித்தாய். . . .

(கண்ணி 90 - 94)

இப்பகுதியில் புல்வாநாயகி ஓர் அறங்கூறவையத்தின் தலைவியாக விளங்கியதை அறிய முடிகிறது. புல்வாநாயகி முன்னர் தம் வழக்கினைச் சொல்லவருகின்ற இருதிறத்தாரும் மழுவை விழுங்க வேண்டும்.

மழுவேந்திய அம்மை

மழு விழுங்குதல் எவ்வாறு நடைபெற்றது என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளப் போதிய ஆதாரங்கள் இல்லை. பொய், மெய் காணச் சத்தியம் செய்பவர்கள் தம்முடைய மேல்வேட்டியைப் போட்டுத் தாண்டுவர் . வேறு சிலர் மனைவியையோ பிள்ளையையோ போட்டுத் தாண்டுவர். சிலர் தெய்வத்தின் முன் கற்பூரத்தைக் கையிலேற்றித் தாம் சொல்லுவன எல்லாம் மெய்யே என்று சத்தியம் செய்குவர். இன்று உலகியலில் இவையே காணப்படுகின்றன. ஆனால் மான்விடுதூது நாக்கு மழுவைத்தோத என்று மட்டுமுரைக் கின்றது.

மழு என்ற கருவி அம்மையின் கையில் அமைந்தது. இக்கருவியை வாயில் வைத்துச் சத்தியம் செய்வர் என்று

கொண்டால், இன்று இம்மழு இக்கோயிலில் இல்லை. மூலத்தானத்தில் எழுந்தருளிய அம்மையின் கையிலுள்ள மழு, சிலையிலேயே செதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வூரில் பிறந்த டாக்டர் (திருமதி) இந்திரா இராமநாதன் அவர்கள் புல்வாநாயகியம்மை தன் கையில் மழுவையேந்திக் கொண்டு நியாயங் கேட்பாள் என்று குறிப்பிட்டார்கள். நீதி கேட்கும் நிகழ்ச்சி புல்வா நாயகி திருமுன்னரே நிகழும் என்பதை இவ்வாறு அவர்கள் தெரிவித்தார்கள். குடுமியான் மலைக்கோயில் திருட்டிலும், மழுவேந்தியே சத்தியம் செய்யப்பட்டது. ஊரகப் பாடலான அல்லியரசாணி மாலையில், வீமன் கொதிக்கும் நெய்க் கொப்பரையில் கையை விட்டுச் சத்தியம் செய்தமை பேசப்படுகிறது.

அரசு கடந்த வழக்கு முறையீடு

புதுக்கோட்டைத் தனியரசில் நடந்த வழக்கு ஒன்றுக்குப் பாகனேரிப்புல்வா நாயகி நீதியரசியாக விளங்கியிருக்கிறாள். மிதிலைப்பட்டிக்கு அருகிலுள்ள இராங்கியத்தை ஒட்டியமைந்த ஊர் மறவணியேந்தல், இவ்வேந்தல் கரையிலுள்ள கல்வெட்டு (கி.பி. 1705) (புதுக்கோட்டைச் சமஸ்தானக் கல்வெட்டுகள் 876) மறவணி ஏந்தலுக்கும் துறுமாவுக்கும் ஏற்பட்ட நீர் போக்குவரவுக் கால்வாய்த் தகராற்றைப் பேசுகிறது. இதனை விசாரிக்கப் புதுக்கோட்டை மன்னர் விசைய ரகுநாத ராயத் தொண்டைமான்,. காரியக் கருத்தரான விஸ்வனம் பிள்ளையை உரிய இடத்துக்கு அனுப்பி வைத்தார். க்ாரியக் கருத்தர் விசாரணை செய்ததில் மெய், பொய் தெரியவில்லை. அவர் இரண்டு திறத்தாரையும் பாகனேரிக்கு அனுப்பி வைத்தார். அம்மன் திருமுன் இருவரும் மழு விழுங்கினர். இதில் மறவணியேந்தல் நாகப்பன் சொல்லியதே மெய் என்று வெளிப்பட்டது. மழு எவ்வாறு விழுங்கப்பட்டது? பொய் கூறியமை எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது? போன்றவற்றைக் கல்வெட்டுக் கூறவில்லை.

புதுக்கோட்டைத் தனியரசுக்குக் கட்டுப்பட்ட திருவப்பூர், குளமங்கலம், நார்த்தாமலை, கொன்னையூர், இளஞ்சாவூர், கீரணிப்பட்டி என்ற ஊர்களில் எல்லாம் புகழ்பெற்ற சக்தி வாய்ந்த அம்மன் கோயில்கள் உள்ளன. அந்தக் கோயிலுக்கெல்லாம் வழக்காளர்களை அனுப்பாமல் பாகனேரிக்கு அனுப்பியது ஆராய்தற்குரியது. இதனால் புல்வாநாயகி முடிவான தீர்ப்பை மக்களுக்கு வழங்கியிருக்கிறாள் என்று புலனாகும்.

வேலியே பயிரை அழித்தல்

பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த மரபு தடைப்படுமாறு ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் பதக்கம் ஒன்று திருடு போய்விட்டது. இத்திருட்டில் தொடர்புடையவர்கள் என்று ஐயப்பட்டவர்களைப் பாகனேரிக்கு அனுப்பி மழுவேந்தி மெய்ப்பிக்கச் செய்தனர். இந்த நிகழ்ச்சியைப் பாகனேரியில் சில குறிப்பிட்ட குடும்பத்தினரே பொறுப்பாக ஏற்றுச் செய்து வந்தனர். பொறுப்பிலிருந்தவர்கள் உண்மைக் குற்றவாளியை விட்டு விட்டு வேறு சிலரைக் குற்றவாளி என்று குறிப்பிட்டு இராமநாதபுரம் மன்னருக்குத் தெரிவித்து விட்டனர். குற்றவாளி அறியப்படாமலும் குற்றமற்றவன் குற்றவாளி ஆதலையும் அறிந்த புல்வாநாயகி, அன்றே இராமநாதபுரம் சேதுபதி கனவில் தோன்றி உண்மையைக் கூறிப் பதக்கம் இருக்குமிடத்தையும் தெரிவித்து விட்டாள். சத்தியப் பிரமாணம் நடத்துவோரின் ஒழுங்கீனத்தை அம்மையே காட்டிக் கொடுத்துவிட்டாள். இராமநாதபுரம் சேதுபதி, நடந்தவற்றையும் புல்வாநாயகி உண்மையைக் காட்டிக் கொடுத்ததையும் பாகனேரி நாட்டார்க்கு ஒலை எழுதித் தெரிவித்து விட்டார்.

அறங்கோணியதைக் கண்ட நாட்டார், சத்தியப் பிரமாணப் பொறுப்பாளர்களுக்குக் கொலைத் தண்டம் விதித்து நீதியை

நிலை நாட்டினர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், புல்வாநாயகி அம்மன் கோயிலில் மழுவேந்திச் சத்தியம் செய்வது நின்று போய்விட்டது. பாகனேரியைச் சார்ந்தோர் இங்கு யாரும் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்யாமையால், இந்தப் பழக்கம் அரியாக்குறிச்சி என்னும் கொல்லங்குடிக்கு மாறிவிட்டது.

கொல்லங்குடியில் இருதிறத்தாரை வைத்து மெய், பொய் காண்டல் இல்லை. மெய்யை நிலை நாட்ட முடியாது மெலிந்தோன், கோயிலில் வந்து தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை முறையிட வேண்டும். இதற்குக் கட்டணம் வைத்திருக்கின்றனர். (படி கட்ட வேண்டும்). பூசாரி வழக்கைக் கேட்டுக்காசு வெட்டிப் போடுவார் . அம்மை அடியாரின் வழக்கைக் கேட்டு உரியாரிடம் சென்று நீதி கேட்டுத் தருவாள். இது பாகனேரி மரபிலிருந்து மாறானது. அழகர் கோயிலிலும் பதினெட்டாம்படிக் கருப்பர் சந்நிதியில் இதுபோலப் பழக்கமுண்டு. புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களிலுள்ள அய்யனார் கோயில்களிலும் காளி கோயில்களிலும் இது போன்ற பழக்கமுண்டு. இராங்கியம் கருப்பர், நெய்வாசல், திட்டாணிக் கருப்பர், மூலங்குடிப்பொன்னன் என்பன இத்தகைய அறங்கேட்டும் தெய்வங்களாம்.

பிற்காலச் சோழராட்சியில் குற்றம் செய்தோரை விசாரிக்குமிடமாகத் திருக்கோயில்களே திகழ்ந்தன. தண்டனைக்கு அளிக்கப் பெற்ற ஒறுப்பு, கோயிலுக்குப் பயன் தருவதாகவே அமைந்திருந்தது. இந்த வருமானம் அரசு வருமானம் ஆகவில்லை. குற்றவாளிகளும் தாம் செய்யும் குற்றங்களைத் தெய்வக்குற்றங்களாகக் கருதியே அறப்பிழை செய்ய அஞ்சினர். ஆள்வலியும் பொருள் வளமும் வாயடியுமில்லாத பலருக்குத் தெய்வங்களே நீதி கேட்டுத் தங்கள் தெய்வ நலத்தை நல்கின.